மாத இதழ் - October 2012

# வண்ண வானவில்

பருவம் 02 வர்ண வானவில் Vanna Vaanavil உதயம் 24 30/-

விஷால் ALBUM




## உசேய்ன் போல்ட்: வாழ்வும் வெற்றியும்

## பிந்து மாதவியின் 'சில்க்' கண்கள்

## மந்திரங்களும் சடங்குகளும்

S.Krishkanthan @ ANCL 2012

# VIP Vishal Album



சகோதரனுடன்...







சகோதரன் விக்ரம் கிருஷ்ணா, அவரது மனைவியுடன்...





குடும்பத்துடன்...

## பயோடேட்டா

பெயர் - விஷால் கிருஷ்ணா

பிறந்த திகதி - 29 ஆகஸ்ட் 1977, சென்னை

தந்தை - ஜீ.கே.ரெட்டி (தெலுங்கு மற்றும் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்)

தாய் - ஜானகி தேவி


சகோதரர் - விக்ரம் கிருஷ்ணா (அஜய் என்ற பெயரில் நடித்த முன்னாள் நடிகர்)

படிப்பு - விஷுவல் கொமினிகேசன் பட்டப்படிப்பு

உதவி இயக்குனராக நடிகர் டைரக்டர் அர்ஜுனிடம் வேதம், ஏழுமலை ஆகிய படங்களில் பணியாற்றினார்.

அறிமுகம் - செல்லமே.

பட உதவி: பிரதீப்



# கைபேசி வழியாக வந்த காதலன்




**முன்னர் சிறு துண்டில் எழுதிய முகவரியை சட்டைப் பைக்குள் வைத்தபடி இளைஞர்கள் பெண்களின் பின் சுற்றிக் கொண்டிருந்தார்கள். இன்று கைபேசி பல வசதிகளுடன் வந்து விட்டதால் பெண்களை தன் மாய வலைக்குள் வளைத்துப் போடுவது ரோமியோக்களுக்கு சுலபமாகி விட்டது. இன்றைய வசதி படைத்த ரோமியோக்களுடன் தெரு வழியே அட்ரஸ் துண்டுடன் திரிந்த இளைஞர்கள் ஒப்பிடும் போது அவர்கள் பரிதாப பேர் வழிகளாகத்தான் தெரிகிறார்கள்.**

**ஆனால் இந்த கைபேசி காதல் எவ்வளவு ஆபத்தானது, அவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் இளம் பெண்கள் இந்தத் தொலைபேசிக் காதலர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை விவரிக்கிறது இந்த உண்மைச் சம்பவம். பெண்கள் இதை எச்சரிக்கை மணியோசையாகக் கொள்ள வேண்டும்.**

**நான்** மலையகத்திலிருந்து கொழும்பிற்கு ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலைக்காக வந்தேன். கொழும்பின் புறநகர் பகுதியில் இருந்த எனது உறவினர் வீட்டில் தங்கியிருந்து தொழிலுக்கு சென்று வந்தேன். எனக்கு ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு. அதனால் சிறிது காலத்திற்குப் பிறகு நான் தங்கியிருந்த வீட்டிற்கு பக்கத்திலிருந்த கோயிலில் அறநெறி பாடசாலையில் படிப்பிக்கும் வாய்ப்பு கிடைத்தது. வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் பிள்ளைகளுக்கு சமய பாடம் சொல்லிக் கொடுப்பதில் என்னோடு சில தோழிகளும் இணைந்து கொண்டார்கள்.

கொழும்பில் வேலைக்கு சேர்ந்த பின் கிடைத்த முதல் சம்பளத்தில் நான் வாங்கிய அந்த நோக்கியா போன் எப்போதும் என்னுடனேயே இருக்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை நான் கோயிலுக்கு சென்று வீடு திரும்பினேன். வீடு வந்து அமர்ந்த போது எனது செல்போன் அலறியது. ஹலோ என்றது ஒரு ஆண் குரல். நீங்க யார் பேசுறது? என்று நான் கேட்டேன். உங்களுக்கு தெரிந்தவர் தான் யாரென்று கண்டுபிடியுங்கள்? என்று அந்த ஆண் குரல் புதிர் போடத் தொடங்கியது. நான் விட்டுக் கொடுக்காமல் நீங்கள் யாரென்று முதலில் சொல்லுங்கள் என்றேன். ''இன்றைக்கு அந்த லைட் பச்சைக் கலர் புடவையில் நீங்க சுப்பரா இருந்தீங்க!'' என்று வர்ணணை செய்தது அந்தக் குரல். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. ''அப்போ நீங்க இன்றைக்கு என்னைப் பார்த்தீர்களோ?'' என்றேன். அதற்கு அக்குரல்

''ஆமாம் நீங்க உங்க தோழிகளோடு வந்தீர்களே...''

''என் தோழிகளில் என்னை விட அழகானவங்க இருந்தாங்களே. ஏன் எனக்கு போன் செய்கிறீர்?'' என்றேன் நான்.

''பார்க்கிறவங்க எல்லோரையும் நமக்கு பிடிக்காதே... யாரோ ஒருத்தியைத் தானே நமக்கு பிடிக்கிறது..'' என்று அந்த ஆண் பேசத் தொடங்கியதும் நான் எனது தொடர்பை துண்டித்து விட்டேன். அதற்குப் பிறகும் ஒரு நாள்விட்டு அதே நம்பர் அழைத்தது. போனை எடுப்பதா வேண்டாமா? என்று யோசித்தேன். பிறகு சரி எடுப்பம் இன்று என்ன சொல்கிறார் பார்ப்போம் என்று சிந்தித்துக் கொண்டே எடுத்தேன்.

எதிர்முனையில் அழைத்த அவர் சாப்பிட்டீர்களோ? என்று ஆரம்பித்து விட்டு அம்மா, அப்பா பற்றியும் விசாரிக்க தொடங்கினார். அவர் அப்படி பேசுவது எனக்கு ஒரு ஆறுதலாக இருந்தது. அதனால் அவரின் தொடர்பை துண்டிக்காமல் அவர் பேசுவதை செவி மடுத்தேன்.

பிறகு அவரின் அழைப்பு அடிக்கடி வந்தது. ஏன் நானே அவர் லைனில் வரமாட்டாரா என்று ஏங்க ஆரம்பித்தேன். ஒரு நாள் அவர் பேசும் போது இன்றைக்கு நான் உங்களை சந்திக்க போகிறேன். என்றார். அவர் அப்படி சொன்னது இன்ப அதிர்ச்சியாக இருந்தது. பிறகு கோவிலுக்கு வாங்க சந்திக்கலாம் என்றார். நானும் அவரை சந்திக்கும் ஆவலில் கோயிலுக்குச் சென்றேன். என்னைத் தெரிந்த அவர் யாராக இருக்கும் என்ற பல விதமான கேள்விகளுடன் கோயிலுக்கு சென்றேன். ஆலயத்தில் அம்பாளை தரிசித்து கொண்டிருந்தவர்களில் என் மீது பிரியமாக இருக்கும் அவர் யாராக இருக்கும் என்று என் கண்கள் அந்த நபரை தேடியது. அப்போது என் கைப்பேசி அழைக்கவே எடுத்தேன். அழைப்பில் அவர்தான்.

''நான் உங்கள் பக்கத்திலதான் இருக்கிறேன்'' என்றார். நான் சுற்று முற்றும் பார்த்தேன். எனக்கு தெரிந்த நபர் யாரும் இல்லை. திரும்பவும் என் கைப்பேசியில் வந்த அவர் நீங்க ப்ளு கலர் சாரி உடுத்தியிருக்கீங்க நான் உங்கள் பக்கத்திலதான் இருக்கிறேன் என்றார். நான் திரும்பி பார்த்தேன். என் பக்கத்தில் அஜானுபாகுவான தோற்றத்தில் ஒருவர். அவரைப் பார்க்கும் போதே பணக்கார வாடை அடித்தது. என்னைப் பார்த்து சிரித்தவர் நான் தான் உங்கள் ரோங் நம்பர் என்றார்.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நமக்கு முன் பின் அறிமுகம் இல்லாத இவரே ஒரு ரோங்தான் என்று நினைத்துக் கொண்டு அவரை பார்த்து முறைத்த படி நான் வெளியே வந்து விட்டேன்.

ஆனால் அந்த நபர் அசரவில்லை. தொடர்ந்து என்னை அழைத்துக் கொண்டே இருந்தார். நான் அதற்கு பதிலளிக்காமல் இரண்டு நாள் முரண்டு பிடித்தேன். பிறகு எனக்கு அவரோடு பேச வேண்டும் போல இருந்தது. அப்போது அவர் அழைத் தார். உடனே போனை எடுத்தேன்.

''சொரி என்னை மன்னிக்கனும்.'' என்றார். அவர் அப்படி சொன்னதும் என் கோபம் குறைந்தது.

''உங்களை எனக்குத் தெரியாது. அப்படி இருந்தும் எப்படி என் நம்பர் உங்களுக்கு கிடைத்தது?'' என்றேன். அதற்கு அவர், ''நீங்க ஒரு நாள் உங்கள் தோழிகளோடு ரீலோட் போடுவதற்காக ஒரு கடைக்கு வந்து ரீலோட் செய்தீர்கள். அப்போது உங்க பின்னால் நான் நின்று கொண்டிருந்தேன். நீங்க குறிப்பு புத்தகத்தில் உங்கள் நம்பரை பதிந்த பிறகு நான் என் நம்பரை பதிவு செய்தேன். அப்போதுதான் உங்கள் நம்பரை என் கண்கள் ஸ்கேன் செய்து கொண்டது. இது தவறுதான். ஆனால் என்ன செய்வது? எனக்கு உங்களை பிடித்திருந்தது? என்றார்.

அவர் அப்படி சொன்னபோது என்னுள் ஆத்திரம் பொங்கினாலும் என்னிடம் எல்லா உண்மையையும் சொன்னதால் என் கோபம் குறைந்தது.

அன்றைய தினத்தின் பின் எங்கள் தொடர்பு தொலைபேசி வழியே தொடர்ந்தது. திடீரென்று இரண்டு நாள் அவரின் தொலைபேசி அழைப்பு அடியோடு நின்று விட்டது. நான் துடித்துப் போய்விட்டேன். ஏதோ ஒரு காட்டில் நான் அனாதரவாக விடப்பட்டது போல ஒரு உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

இரண்டு நாளுக்குப் பிறகு போனை செய்தார். நான் கோபத்தில், ''ஏன் இரண்டு நாளாகப் பேசவில்லை என்று அதிகாரத்துடன் கேட்டேன். நான் ஏன் அப்படி கேட்டேன் என்று எனக்கே தெரியவில்லை. நான் அவரை ஒரு வேளை நேசிக்கிறேனோ என்ற சந்தேகமும் என்னில் ஏற்பட்டது.

''சரி இன்றைக்கு வாங்க நாம கொஞ்ச நேரமாவது மனம் விட்டு பேசலாம் நெட் கஃபேக்கு வாங்க, காத்திருக்கிறேன்'' என்றார். நானும் அவர் குறிப்பிட்ட இடத்திற்கு சென்றேன்.

என்னை அவர் ஒரு கொமினிகேஷனுக்கு அழைத்துச் சென்றார். ''இது தான் நெட் கஃபே'' என்றார். எனக்கு நெஸ்கொபி தான் தெரியும் என்றேன். அவர் சிரித்தார்.

பிறகு ஒருவர் மட்டுமே அமரக் கூடிய அந்த சிறிய அறைகளில் ஒன்றுக்குள் என்னை அழைத்துச் சென்று அமரச் செய்தார். பிறகு கணனியை ஒன் செய்தார். எனக்கும் ஒரு கடிதம் ஆங்கிலத்தில் டைப் செய்ய வேண்டும் என்றேன். ஓ செய்யலாமே என்றார்.

(31ஆம் பக்கம் பார்க்க)

அட்டையை அலங்கரிப்பவர்

திவ்யா பண்டாரி



வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

நவம்பர் மாத வானவில் 01ம் திகதி முதல் கடைகளில்...



# விருந்தாளியைக் கண்டதும் ஆவி ஏன் அடங்கிப் போனது?

டேவிட் அடுத்த ஆறு நாட்களாக அங்கே தங்கியிருந்தான். அந்த நாட்களில் கிரேஸ் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தாள். வீடு கலகலப்பானது. எந்த ஆவியும் அவளை அண்டவில்லை. ஒரு நாள் இரவு மூவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது கந்தையா கிளார்க்கர் வாய்விட்டே சொன்னார்.

''டேவிட், இன்னும் பத்துநாள் இங்கேயே இருந்துவிட்டுப் போயேன். உன்னைக் கண்டால் எந்தப் பேயும் அவளை அண்டாது போல இருக்கே!" என்று அவர் சொன்னபோது மூவருமே வாய்விட்டு சிரித்தார்கள். தன் விடுமுறை முடிந்ததும் டேவிட் அவர்களிடம் விடைபெற்றுச் சென்றான்.

அவன் சென்ற பின்னர் வீட்டில் மௌனம் சூழ்ந்தது. கிரேஸ் மறுபடியும் தான் உண்டு தன் வேலை உண்டு என்று முடங்கிப் போனாள். மூன்று தினங்களின் பின்னர் ஆவி அவளை மீண்டும் பிடித்து ஆட்டியது. கந்தையாவுக்கு இது பழகிப் போனதால் சமாளித்துக் கொண்டார்.

ஒரு நாள் கொழும்புக்கு போயிருந்த கந்தையா தன் உறவினர் வீட்டில் தங்கினார். அன்று இரவு தன் மாமாவிடம் தன் மனைவிக்கு நேர்ந்திருப்பதை வாய் விட்டுச் சொன்னார். மாமா, ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர். நிச்சயம் இது பேய் பிசாசு வேலையாக இருக்காது என்றும் ஒரு மனநல மருத்துவரிடம் காட்டினால் இதற்குத் தீர்வு கிடைக்கும் என்று கூறிய அவர் பல உதாரணங்களையும் காட்டினார்.

''பேய் பூதம் என்று மட்டும் யோசிக்காமல் வேறு வகையிலும் யோசித்துப் பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்த ஒரு மனநல மருத்துவர் இருக்கிறார். அவரிடம் சென்று காட்டுவோம். உண்மையை ஒளிவு மறைவு இன்றி சொல்வோம். நிச்சயம் அவர் இந்தப் பிரச்சினையைத் குணப்படுத்துவார். ஏனென்றால் இது மனநோயே தவிர, பேய் பிசாசு ஏவல் வேலை அல்ல" என்று கந்தையாவின் மாமா அடித்துச் சொன்னார்.

கந்தையாவுக்கு மாமாவின் பேச்சில் திருப்தி இல்லை. என்றாலும் வேறுவழியின்றி ஏற்றுக் கொண்டார்.

அடுத்த இரண்டு வாரங்களில் கந்தையா தம்பதியினர் கொழும்பு வந்தனர். மறுதினம் நேரம் குறிக்கப்பட்டு மூவரும் மனநல மருத்துவரிடம் சென்றனர். மருத்துவரிடம் மாமனார் சுருக்கமாக விஷயத்தை எடுத்துச் சொன்னார். பின்னர் கந்தையாவை அழைத்த மருத்துவர் முழு விவரத்தையம் குடும்பப் பின்னணி, தாம்பத்திய உறவுகள் பற்றியெல்லாம் கேட்டறிந்தார். அவரை வெளியே அனுப்பி விட்டு கிரேசை உள்ள வரச் சொன்னார் மருத்துவர்.

முதலில் நட்புரீதியாகவும் குசலம் விசாரிப்பது போலவும் பேச்சை ஆரம்பித்தார் மருத்துவர். இறுக்கத்தைத் தளர்த்துவதற்கான அணுகுமுறை இது. கிரேஸ் பிறந்த வீடு பற்றியும், பள்ளிப்பருவம், இளமைக்காலம் பற்றியெல்லாம் விசாரித்து விட்டு கிரேசின் தனிப்பட்ட ஆசைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் பற்றியும் கேட்டறிந்தார்.

பின்னர் கிரேசை மனோ வசியத்தில் ஆழ்த்திய அவர் சில விஷயாங்களைக் கேட்டறிந்தார். சிகிச்சை முடிந்ததும் மற்ற இருவரையும் அழைத்த மருத்துவர், ஒன்றும் பெரிய விஷயம் இல்லை... நீங்கள் சந்தோஷமாகப் போகலாம், சில எளிய மாத்திரைகள் தான் தருகிறேன். இருவருமாக எங்கேயாவது ஒரு மாறுதலுக்காக ஒரு வாரம் சென்று வந்தால் நல்லது என்றார். அவர்கள் புறப்படுவதற்கு முன்னர் கந்தையாவுடன் சில நிமிடங்கள் தனியாகக் கதைத்தார்.

சில மாதங்கள் உருண்டோடின. கிரேசை எந்தப் பேயும் அண்டவில்லை. கந்தையாவிடமும் இப்போது சில மாற்றங்கள் தென்பட்டன. மாலையானதுமே அவர் வீடு வந்தார். அதிக நேரம் மனைவியுடன் கழித்தார். இருவருமாக நுவரெலியாவுக்கு சென்று வந்தனர். தோட்ட உத்தியோகத்தர்களின் வீடுகளுக்கு மாலை வேளைகளில் சென்று வந்ததோடு பொருட்கள் வாங்க, திரைப்படம் பார்க்க டவுனுக்கும் சென்று வந்தார்கள். இதனால் கிரேஸ் பிஸியாக இருக்கத் தொடங்கினாள். உடலில் ஒரு மினுமினுப்பும் முகத்தில் வசீகரமும் கூடியது. இதற்கிடையே டேவிட்டும் இரண்டு முறை வந்து சென்றான். அந்தத் தினங்கள் இன்னும் குதூகலமாக கழிந்தன.

இந்த விவரங்களைக் கேட்டறிந்த கொழும்பு மாமனார், தன் நண்பரான மருத்துவரிடம் இந்த விவரங்களைச் சொல்லி அவருக்கு நன்றி கூறினார். என்னதான் அவர்களிடம் பிரச்சினை? என்று கேட்டார்.

அடிப்படையில் செக்ஸ் பிரச்சினைதான் என்றார் மருத்துவர்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே வயது வித்தியாசம் இருந்தது. ஆனால் இந்த வித்தியாசம் பெரிய விஷயம் இல்லை. வயதை விட இருவருக்கும் இடையிலான மனோபாவ இடைவெளிதான் முக்கியம். இங்கே கந்தையா பழைய விஷயாங்களில் ஊறிப் போனவர், பெக்டறியில் பலராலும் மதிக்கப்படும் நபராக இருப்பதுபோல வீட்டிலும் அதே கௌரவத்துடன் நடந்து கொள்ள முயன்றார். ஒருவர் வெளியே எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் வீட்டிலும் அவர் கணவராக, நண்பராக, உறவினராக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இதே சமயம் கிரேஸ் கிறிஸ்தவ குடும்பத்தில் வசதிகளுடன் பிறந்து வளர்ந்தவர். கொன்வென்டில் படித்தவர். வெளியாருடன் பழகும் பேசும் சுதந்திரம் அவருக்கு இருந்தது. நகர் வாசியாகவே வாழ்ந்திருக்கிறார். தன்னை அலங்கரித்துக் கொள்வது, வெளியே சென்று வருவது போன்றவை அவருக்கு பிடித்தவை. இதேசமயம் கணவர் கந்தையா மீது அவருக்கு நிறைய காதலும் குறையாமல் இருக்கிறது. மேலும் ஒரு பையனை இளமையில் தீவிரமாகக் காதலிக்கவும் செய்திருக்கிறார்.

திருமணத்தின் பின் முற்றிலும் புதிய சூழலில் வசிக்கத் தொடங்கிய அவரை பல பிரச்சினைகள் சூழ்ந்தன. ஒரு அதிகாரியைப் போல வீட்டில் கணவன் நடந்து கொண்டதும், அவளது எதிர்பார்ப்புகளை படுக்கையில் ஈடு செய்யாத கணவனாக விளங்கியதும், தனிமை, பிறர் தொடர்புகளின்றிய வாழ்க்கை ஆகியனவும் அவரது மனதில் பல மாற்றங்களை ஏற்படுத்தின. தானும், தன் உடல் வனப்பும், தன் ஆசைகளும் கவனிக்கப்படாமல் கிடப்பதாக அவள் உணர்ந்தாள். அவளது உணர்வுகளுக்கு ஒரு வடிகால் தேவைப்பட்டது.

ரிஷி

அச் சமயத்தில்தான் உறவினர் பையன் டேவிட் அவள் வாழ்க்கையில் பிரசன்னமானான். அவனது பேச்சு, தோரணை, கிண்டல், வெளிப்படைத்தன்மை, இளமையான அம்சங்களில் பேசும் வன்மை என்பன அவளுக்கு நிரம்ப மகிழ்ச்சியை அளித்தன. தன் இளமைக் கால வாழ்க்கையை இது அவளுக்கு ஞாபகப்படுத்தியது. மேலும் தோல்வி கண்ட அக் காதலின் நாயகன் டேவிட்டைப் போலவே இருந்ததால் அந்த உணர்வு அவனுக்கு அதிக சந்தோஷத்தை தந்தது. எனவே டேவிட் வரும்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பவள் அவன் போனபின் சோர்ந்து போனாள்.

பாலியல் உறவில் அவள் மிகுந்த ஆர்வமும் வேட்கையும் கொண்டிருந்தாள். அவள் உடல் மன அமைப்பு அத்தகையது. எனினும் கணவர்கந்தையா படுக்கையறையில் பழைமை-வாதியாக இருந்தார். அலுவலகக் கடமை போலவே இதிலும் சுரத்தின்றி நடந்து கொண்டார். இதுவும் அவள் மனநிலையைப் பாதித்து ஒரு வகையான சூனிய நிலைக்கு இட்டுச் சென்றது. மொத்தத்தில் தான் பொருட்படுத்தப்படாத மனுஷி என்ற எண்ணம் மன அழுத்தமாக மாறியது. தாங்க முடியாத நிலையில் அது தன்னை அதிகாரம் மிக்க, ஆட்டுவிக்கும் சக்தி கொண்ட ஒருவராக வெளிப்பட்டது. அதுதான் முதலில் சுடலை மாடனாகவும் பின்னர் தன் அப்பாவின் ஆவியாகவும் வெளிப்பட்டு அதிகாரம் செய்தது. கணவனை கண்டபடி திட்டித்தீர்த்தது. ஆடிக் கொண்டிருந்த பேய், டேவிட்டைக் கண்ட மாத்திரத்தில் அடங்கிப் போனதன் இரகசியமும் இதுதான். பழைய காதலனிடமும் அவள் அப்படித்தான் அடங்கிப் போனாள்.

அவளது கணவர் அவள் மீதான தன் காதலை அவ்வப்போது வெளிப்படையாகக் காட்ட வேண்டும். டேவிட் அந்த வீட்டுக்கு வருவதைத் தவிர்த்து விடுவது நல்லது. அவன் திருமணம் செய்து கொண்டால் அவன் மீது அவள் கொண்டிருக்கும் பிரியம் மறைந்து விடும். இத் தம்பதியினர் வெகு சீக்கிரமாகக் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மனநல மருத்துவர் தன் நண்பருக்கு விளக்கம் அளித்தார். கந்தையாவின் மாமாவும் சில விஷயங்களை ஆலோசனை வடிவில் கந்தையாவிடம் தெரிவித்தார்.

அடுத்த ஒன்றரை வருட காலத்தில் இருவருக்கும் பெண் குழந்தை பிறந்தது. ஒரு வருட காலத்தில் டேவிட் திருமணம் செய்து கொண்டதாக அவர்களுக்கு தகவல் கிட்டியது. இச் சம்பவம் நடந்து 25 வருடங்கள் கடந்திருக்கும். அத் தம்பதியினர் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றனர்.




வண்ண வானவில்

வண்ண வானவில் விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

சாதாரண விளம்பரங்கள்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செ.மீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செ.மீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செ.மீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செ.மீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320

வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.30 |
| 1 வருட சந்தா | ரூ.360.00 |
| 6 மாத சந்தா | ரூ.180.00 |
| 3 மாத சந்தா | ரூ.90.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

தபால் மூலம் பெறுவதற்கு:

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.552.00 |
| 6 மாத சந்தா | ரூ.276.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk

## இலங்கைத் தமிழ் திரையுலகம்



**தம்பி ஐயா தேவதாஸ்**

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவையாகப் பதிவு செய்கிறார்.*

# சிங்கள சினிமாவில் பெயர்பெற்ற தமிழ் ஒளிபரப்பாளர்கள்

**1950** கொழும்பு கிருலப்பனை கிருல்ல வீதியில் 'பராக்கிரம தியேட்டர்' என்று ஒரு திரையரங்கு 1950 ம் ஆண்டளவில் இருந்தது சேர் சிற்றம்பலம் கார்டினர் அந்தத் தியேட்டரை விலை கொடுத்து வாங்கினார். அந்தத் தியேட்டரை இடித்து விட்டு அதே இடத்தில் ஒரு திரைப்பட ஸ்ரூடியோவை உருவாக்கினார்.

அந்த ஸ்ரூடியோதான் பின்னாளில் பெரும்புகழுடன் விளங்கிய 'சிலோன் ஸ்ரூடியோ' அந்த ஸ்ரூடியோவில் பெரும்பாலும் இந்தியத் தொழில் நுட்பக் கலைஞர்களே கடமையாற்றினர். அதே வேளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகேந்திரனை இந்தியாவுக்கு அனுப்பி ஸ்ரூடியோத் தொழில்நுட்பத்தைக் கற்க வைத்தார். மூன்று மாதங்களின் பின் பயிற்சி முடிந்து இலங்கை திரும்பிய மகேந்திரன் சிலோன் ஸ்ரூடியோவின் இரசாயனப் பகுதியின் உதவி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.



வி.வாமதேவனுடன் கட்டுரையாளர்

இந்த சிலோன் இஸ்ரூடியோவில் வி.வாமதேவனும் கடமையாற்றினார். அவருக்கு இரசாயனப் பகுதியை விட அங்குள்ள சினிமாக் கமராக்கள் மீது தான் அதிக ஆர்வம் காட்டி வரலானார். இந்தக் கமராக்களைக் கொண்டு நானும் ஒரு நாள் ஒளிப்பதிவு செய்வேன்' என்று எண்ணிக் கொண்டார். அப்பொழுது அந்த ஸ்ரூடியோவின் ஒளிப்பதிவுப் பகுதிக்கு வை.எம்.சாமி என்ற கமரா நிபுணர் பொறுப்பாக இருந்தார். அவர் ஒளிப்பதிவாளர்களை பயிற்றுவிப்பதற்காகவே இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் இலங்கையில் ஒளிப்பதிவாளராகவே மாறிவிட்டிருந்தார். மேலும் மானிப்பாயைச் சேர்ந்த ஏ.திருநாவுக்கரசும் கொடிகாமத்தைச் சேர்ந்த எம்.சர்வானந்தனும் ஒளிப்பதிவு உதவியாளர்களாகக் கடமையாற்றினர். இந்த ஏ.திருநாவுக்கரசும் சர்வானந்தவும் பின்னாளில் தமது பெயர்களை ஏ.ரி.அரசு எம்.எஸ்.ஆனந்தன் என்று சுருக்கிக் கொண்டு புகழ் பெற்ற ஒளிப்பதிவாளர்களாக ஜொலித்தனர்.

எம்.எஸ்.ஆனந்தன் கொழும்பில் இராஜகிரியவில் வாழ்ந்து வந்தார். அவருக்கு இராஜகிரியாவில் 'ஆனந்தா' என்ற தியேட்டரும் சொந்தமாக இருந்தது. அந்தத் தியேட்டருக்கு சிலோன் தியேட்டேர் ஸ்தாபனத்தாரே திரைப் படங்களை விநியோகித்தனர். இதனால் ஆனந்தனுக்கு இந்தியா சென்று ஒளிப்பதிவுப் பயிற்சி பெற்று வர சிலோன் தியேட்டர்ஸ் நிர்வாகம் வாய்ப்பளித்தது. இந்த எம்.எஸ்.ஆனந்தனே பின்பு இலங்கை வந்து லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசின் 'கொலு ஹத வத்த', 'மடொல் தூவ' போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார்.

எம்.எஸ்.ஆனந்தனுக்கு 'சியாமா' என்ற பெயரில் ஒருமகள் இருக்கிறார். சியாமாவையும் காமினி பொன்சேகாவையும் நடிக்க வைத்து 'சண்டி சியாமா' 'ஹலோ சியாமா' ஆகிய படங்களை ஒளிப்பதிவு செய்ததுடன் இயக்கவும் செய்தார் ஆனந்தன்.

இலங்கைத் திரை உலகில் இரண்டு சோமசேகரன்கள் இருந்தனர். ஒருவர் ரீ.சோமசேகரன் மற்றவர் சுண்டிக்குளி சோமசேகரன்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த ரி.சோமசேகரன் சிங்கள மொழியில் பாண்டித்தியம் பெற்றவர் தான் இயக்கிய சிங்களப் படங்களின் விசேட வசனங்களை இவரே எழுதுவார். திரைக்கதை மீது அதிக கவனம் செலுத்துவார்.


'சுஜாதா' என்ற புகழ் பெற்ற சிங்களப் படத்தை இயக்கியவர், டி.ஆர்.சுந்தரம் அப்படத்தின் வெற்றிக்கு பின்னின்றவர் தி.சோமசேகரன். 'சுஜாதா' படத்துக்கான விளம்பர டிரெய்லரை உருவாக்கி படத்தை வெற்றி பெறச் செய்தவர் இந்த ரி.சோமசேகரனேதான். சிறிது காலத்தின் பின் சினிமாஸ் லிமிட்டெட் டிலிருந்து 'சிலோன் தியேட்டெர்ஸ்' நிறுவனத்துக்கு வந்த தி.சோ.ம.சேகரன், சேர் சிற்றம்பலம் கார்டினரின் உதவியுடன் 'செடசுலங்' (புயற்காற்று) என்ற வெற்றிப் படத்தை உருவாக்கினார். பிரபல சிங்கள நடிகர் ஜோ.அபயவிக்கிரமையை இவரே அறிமுகப்படுத்தினார். மதுப்பழக்கத்துக்கு அடிமையான ரி.சோ.ம.சேகரன் இளவயதி-லேயே இறந்து போனார்.

சுண்டுக்குளி சோமசேகரன் சிறந்த ஒளிப்பதிவுக் கலைஞராகத் திகழ்ந்தவர். இவர் இரண்டு தமிழ்ப்படங்களையும் ஒரு சிங்களப் படத்தையும் தயாரித்திருக்கிறார்.



ஒளிப்பதிவாளர் எம்.எஸ்.ஆனந்தன்

டெக்ஸி டிறைவர்', 'நெஞ்சுக்கு நீதி', ஆகிய இரு இலங்கைத் தமிழ்ப் படங்களையும் 'லண்டன் ஹாமு' என்ற சிங்கள படத்தையும் இவர் தயாரித்தார். 1983 கலவரத்தின் பின்னர் புலம் பெயர்ந்த அவர் அங்கேயே காலமா-னார். அவரது மனைவியின் பெயர் மாலினிதேவி சோமசேகரன் ஆகும். கணவனும் மனைவியுமாக சேர்ந்தே இந்த மூன்று படங்களையும் தயாரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சோமசே-கரன் ஒலிப்பதிவில் சிறந்து விளங்கியதால் இலங்கையின் முதல் தமிழ்த்திரைப்படத்தைத் தானே தயாரிக்க வேண்டும் என்று எண்ணி சில பாடல்களை ஒலிப்பதிவு செய்து விட்டார். ஆனால் படம் தயாரிக்க தாமதமாகி விட்டதால் பின்பு தயாரிக்கப்பட்ட தோட்டக்காரி முதல் இலங்கைத் தமிழ்த் திரைப்படமாக திரைக்கு வந்தது. பெயரும் பெற்றது.



நான் உங்கள் தோழன் படத்தில் வி.பி.கணேசனுடன் சுபாஷினி

அது 1980ஆம் ஆண்டு காலப்பகுதி. அப்பொழுது கொழும்பில் பல தமிழ் நாடகங்கள் மேடையேறின. ஒரு முறை தமிழ் நாடக இயக்குநர் ஒருவர் சிலோன் ஸ்டுடியோவுக்கு வந்தார். அவர் தனது நாடகத்துக்கு ஒளி அமைப்பதற்காக வி.வாமதேவனை சந்தித்துப் பேசுவதற்காக வந்திருந்தார். அவரது நாடகத்தின் பெயர் 'அவளைக் கொன்றவள் நீ என்பதாகும் அந் நாடகத்தின் இயக்குநர் சுஹைர் ஹமீட்தான் வாமதேவனை சந்திக்க வந்தவர். வாமதேவனுக்கு திரைப்படங்களுக்கு ஒளி அமைத்த அனுபவம் இருக்கிறதே தவிர நாடக மேடைக்கு ஒளியமைத்த அனுபவம் இல்லை. ஆனாலும் அது தமிழ் நாடகம் என்பதால் அந்நாடகத்துக்கு ஒளி அமைப்பதற்கு முன்வந்தார். அந் நாடகம் வாமதேவனைக் கவர்ந்து விட்டது. 'இந் நாடகத்தை நான் ஒருநாள் திரைப்படமாகத் தயாரிப்பேன்' என்று வாமதேவன் சுஹைர் ஒமீட்டிடம் கூறிச் சென்றார்.



லெனின் மொறாயஸ்

'அவளைக் கொன்றவன் நீ' நாடக நடிகர்களுக்கு ஒரு இளைஞர் மேக்கப் செய்து கொண்டிருந்தார். வீ.வாமதேவன் சினிமா உலகைச் சேர்ந்தவர் என்று கேள்விப் பட்டதும் அந்த இளைஞர் இவருடன் மிகவும் மரியாதையாக நடந்து கொண்டதோடு தன்னை திரைப்பட உலகத்துக்கு அறிமுகப்படுத்தும் படியும் வாமதேவனிடம் கேட்டுக் கொண்டார். ஒருநாள் வாமதேவன் அந்த இளைஞரை சிலோன் ஸ்ரூடியோவில் பொறுப்பு வாய்ந்த அதிகா ரியாக கடமையாற்றிய பிரேம்நாத் மொறாசிடம் அந்த இளைஞரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

இலங்கையில் பல கலைஞர்களை உருவாக்கிய பாடசாலை, கொட்டாஞ்சேனை சென் பெனடிக் கல்லூரியாகும். பிறேம்நாத் மொறாயஸ் அக்கல்லூரியின் பழைய மாணவர். அதே போல் அந்த இளைஞனும் சென் பெனடிக்கல்லூரியின் பழைய மாணவன். வாமதேவன் அறிமுப்படுத்தியதும் பிறேம்நாத் அந்த இளைஞனை உச்சி முதல் உள்ளங்கால் வரை உற்று நோக்கினார். 'இவன் ' என்னுடன் படித்த லெனின் மொறாயஸ். அல்லவா' என்று சொல்லி மகிழ்ந்தார் பிறேம்நாத்.

அந்த மேக்-அப் மேன் தான் பின் நாளில் பிரபல சிங்களத் திரைப்பட இயக்குனராக உயர்ந்த லெனின் மொறாயஸ்.

சிங்களப் படங்களை விளம்பரம் செய்யும் பொழுது 'டைரக்ஷன் வேறு யாருமல்ல; அது லெனின் மொறாயஸ்தான்' என்று சிறப்பித்துக் கூறும் வகையில் பிற்காலத்தில் புகழ் பெற்றார் லெனின்.

கொழும்பில் தமிழ் நாடக மேடைகளில் ஒப்பனையாளராக விளங்கிய லெனின் மொறாயஸ், விஜயா ஸ்ரூடியோவிலும் ஒப்பனையாளராகக் கடமையாற்றிய பின்னரேயே ஒளிப்பதிவுத்துறைக்கு தாவினார். பல சிங்கள வெற்றிப் படங்களை பிற்காலத்தில் இவர் உருவாக்கினார்.

இக் காலப்பகுதியில் இந்தியாவில் கமராக் கலை பயின்று விட்டு இலங்கை திரும்பினார் மற்றுமொரு இலங்கை ஒளிப்பதிவாளர். அவர்தான் புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.வி.மாணிக்கவாசகம். பின்னர் இவர் தன் பெய்ரை ஏ.வி.மெ.வாசகம் என்று சுருக்கிக் கொண்டார். வீ.வாமதேவன், ஏ.வி.எம்.வாசகத்தை அனுபவப்பட்ட இயக்குனரான ரி.சோ.ம சேகரனுக்கு அறிமுகப்படுத்தினார். அவர் வாசகத்தை சினிமாஸ் நிறுவனத்தில் சேர்த்து விட்டார். ஏ.வி.எம்.வாசகம் சினிமாஸ்தாபனம் தயாரித்த பல சிங்களப் படங்களை ஒளிப்பதிவு செய்தார்.

சினிமாஸ் நிறுவன சார்பில் கே.குணரத்தினம் தயாரித்த 'சண்டியா' என்ற வெற்றிப் படத்தை ஏ.வீ.எம்.வாசகமே ஒளிப்பதிவு செய்தார். 'சண்டியா' காமினி பொன்சேகா நடித்த வெற்றிப் படங்களில் ஒன்றாகும்.

எத்தனையோ சிங்களப் படங்களை ஒளிப்பதிவு செய்த வாசகம் ஒரு இலங்கை தமிழ்ப் படத்தையும் ஒளிப்பதிவு செய்தார். செங்கைஆழியான் கதை எழுதிய 'வாடைக்காற்று' என்ற பெயருடைய படமே அது.

தற்பொழுது கனடாவில் வாழும் ஏ.வி.எம்.வாசகம், அங்கு தயாரான சில தமிழ், ஆங்கிலப் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொதிக்கும் பூமி

**ஒரு** முட்டையின் ஓடுகளை துண்டுதுண்டாகப் பெயர்த்து மீண்டும் ஒட்டுவதாகக் கற்பனை செய்யுங்கள். அப்படித்தான் இருக்கிறது பூமியின் தன்மை. முட்டை ஓடுகள் போல பூமி உருண்டையைப் போர்த்தியிருக் கின்றன பாறைத்தட்டுகள்.

பசிபிக், அண்டார்டிக், வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, யுரேஷியா, ஆப்பிரிக்கா, இந்தோநேசியா - அவுஸ்திரேலியா என 7 பெரிய தட்டுகள். இதோடு 11 சிறிய தட்டுகள். இத்தட்டுகளின் மேல்தான் 7 கண்டங்களும், எல்லா கடல்களும் இருக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்ததுதான் பூமி. இந்த தட்டுகள் நகர்வதால் உலக வரைபடம் காலம் காலமாக மாறிக் கொண்டே வருகிறது.

வெங்காயத்தை உரிக்கும்போது அடுக்கடுக்காக தோல்கள் வருவதுபோல, பூமிப் பந்தும் வெவ்வேறு அடுக்குகளாக இருக்கிறது. இதன் மேல்தோல்தான் பாறைத்தட்டுகள். 1864ல் அறிவியல் புனைகதை எழுத்தாளர் ஜுல்ஸ்வெர்ன், பூமியின் மைய அச்சுக்குப் போவதாக கற்பனை செய்தார். 'ஜர்னி டு த சென்டர் ஆ.'ப் த எர்த்' என்ற படைப்பை உலகுக்கு அளித்தார். இது இன்னும் நிறைவேறாத கற்பனைதான். ஆழ்துளைக் கிணறுகள், சுரங்கங்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சியைக் கொண்டு உள்ளமைப்பு பற்றி அறிய முடிகிறது.

பூமியின் மையத்தை நோக்கி செல்லச் செல்ல வெப்பம் பலநூறு மடங்காக அதிகரித்துச் செல்லும். பூமி உருவான காலத்தில் அதன் மேல் பகுதி சுமார் 10 ஆயிரம் டிகிரி வெப்பத்தில் கொதித்துக் கொண்டிருந்தது. பிறகு பெய்த பெருமழையில் மேல்பகுதி குளிர்ந்தது. கடல்களும் தோன்றின. ஆனால், பூமியின் உள்பகுதி இன்னும் வெப்பக் குழம்பாகக் கொதித்துக் கொண்டிருக்கிறது. பூமிக்குள் தோண்டிக்கொண்டே போனால், ஒவ்வொரு 100 மீட்டர் தாண்டும்போதும் 3 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரிக்கும். மையப் பகுதியின் வெப்பநிலை 4300 டிகிரி செல்சியஸ்!

# தமிழ் சினிமாவில் சாதிக்கத் துடிக்கும் அக்கரைப்பற்று இளைஞர்

தனுஷுடன் அஸீன்



ரயிலில் டிக்கட் வாங்காமல் திருட்டுத் தனமாக சென்னைக்கு சென்று அங்கே வி.ஐ.பி.ஆனவர்களின் பட்டியல் மிகவும் நீளமானது. கர்நாடகத்தின் தலைக்காவிரி தமிழகத்திற்கு கொண்டு வந்த கலைக்காவிரி ரஜினியும் திருட்டு ரயில் ஏறி சென்னைக்கு வந்து வி.ஐ.பி. ஆனவர்களில் ஒருவர்தான். இதேசமயம் கடல் கடந்த நாடுகளிலிருந்து முறையாக டிக்கட் பெற்று தமிழகம் சென்று சினிமாவில் ஜொலித்தவர்கள் பலர். அதில் நம் நாட்டிலிருந்து சென்றவர்களில் சந்திரபாபு, பாலுமகேந்திரா, வி.சி.குகநாதன், நடிகை சுஜாதா, ஏ.ஈ.மனோகரன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களுக்குப் பிறகும் நம் நாட்டிலிருந்து சென்று சிறு, சிறு பாத்திரங்களில், சிலர் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். படங்களை இயக்கவும் செய்கிறார்கள். எனினும் இவர்களில் பெரும்பாலானோர். தங்களை சிலோன்காரன் என்று அடையாளப்படுத்துவதில்லை. எங்கே தான் வேற்று நாட்டவர் என்று தெரிந்தால் தமிழகம் தன்னை ஓரம் கட்டி விடுமோ என்ற பயம் தான் காரணம். ஆனால் ஆடுகளம் இணை இயக்குனராக பணியாற்றிய ஹசீன் இதற்கு முற்றிலும் மாறுபட்டு நிற்கிறார்.



கிழக்கு மாகாணம் அக்கறைப்பற்றிலிருந்து தமிழகத்திற்கு சினிமா வாய்ப்புத் தேடி புறப்பட்டவர்களில் இவரும் ஒருவர். தங்கர் பச்சானின் தென்றல், ஒன்பது ருபா நோட்டு வெற்றிமாறனின் பொல்லாதவன், ஆடுகளம் உள்ளிட்ட படங்களில் தொடர்ச்சியாக பணியாற்றி விட்டு அடுத்து தானே ஒரு படத்தை இயக்குவதற்காக தயாரிப்பாளர்களிடம் கதை சொல்லி வருகிறார் இந்த இளம் இயக்குனர்.

தமிழ் சினிமாவில் ஏதாவது செய்யனும் என்பது என் நீண்ட நாளைய கனவு. பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே சினிமா பைத்தியம் எனக்கும் பிடித்திருந்தது. அக்கறைப்பற்றில் நான் ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன். அதனால் பாடசாலை படிப்பு முடிந்தவுடன் என் இலக்கு சென்னையை நோக்கியே இருந்தது. எனினும் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் என் சினிமா ஆர்வம் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி சென்னையில் கால் பதித்தேன். சினிமாவில் நான் பார்த்த என் கனவு சென்னையை நேரில் பார்க்க பிரமிப்பாக இருந்தது. நாயகன், தளபதி படங்களின் தாக்கம் காரணமாக என் மனதில் மணிரத்தினத்திற்கு என்று அழிக்க முடியாத ஒரு தனியிடம் இருந்தது. சென்னையில் ஒரு ஹோட்டலில் அறை எடுத்து தங்கிய நான் மணிரத்தினத்தை பார்க்க அவரின் அலுவலகம் நோக்கிச் சென்றேன். என் மனம்' வானத்தில் பட்டாம் பூச்சியாக பறந்துக் கொண்டிருந்தது.

மணிரத்தினம் என்பவர் சாதரண ஒரு மனிதரா என்ன! தமிழகத்தின் மிகப் பெரிய இயக்குனர்களில் ஒருவர் அல்லவா! அவரை சந்திக்க செல்வதென்பது சும்மாவா! அவரின் அலுவலகத்தை நெருங்கிய போது அந்தக் கட்டடத்தின் பிரதான வாயில் என்னை உள்ளே செல்ல விடமால் தடுத்தது. அலுவலக்தில் இருந்த மணிரத்தினத்தின் உதவியாளர்கள் என்ன ஏது என்று விசாரித்தனர். நான் அவரை பார்க்க வந்திருப்பது பற்றிய விபரத்தை சொன்னேன். ஒரு நமுட்டு சிரிப்போடு அந்த உதவியாளர் உள்ளே சென்று திரும்பி வந்தார்.

**மணி ஸ்ரீகாந்தன்**

''அவரை இப்போது பார்க்க முடியாது. அவர் இல்லை. அவரை சந்திப்பது என்றால் முன் அனுமதியோடுதான். வரணும் இப்படியெல்லாம் வந்து சந்திக்க முடியாது'' என்று முகத்தில் அறைந்த மாதிரி சொன்னார். நான் வாடிப்போய் விட்டேன். ஏமாற்றத்தோடு என் அறையை நோக்கி நடந்தேன். அவர்கள் அப்படி சொன்னதிலும் தவறில்லை தான். எட்டுக்கோடி தமிழர்கள் வாழும் தமிழகத்தில் குறைந்த பட்சம் ஐம்பது லட்சம் ரசிகர்களாவது மணிரத்தினத்தை பார்க்க விரும்புவார்கள். அவர்கள் அனைவரையும் அவர் சந்தித்துக் கொண்டிருந்தால் வேறு வேலைகளைப் பார்ப்பது எப்படி? எனவே எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொண்டு அறையில் வந்து படுத்தேன். அதன் பிறகு எனக்குத் தெரிந்த ஒரு நண்பரின் மூலமாக தங்கர்பச்சானை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. நான் இலங்கையில் எழுதி வெளியிட்ட ஒரு நாவலையும் அவரிடம் கொடுத்து பேசினேன். அதைப் பார்த்தவர். நன்றாக இருப்பதாக பாராட்டி விட்டு, எனக்கு அவரின் படத்தில் வாய்ப்பு தருவதாக சொல்லி அனுப்பினார்.

பிறகு ஒரு நாள் எனக்கு தங்கரிடம் இருந்து 'தென்றல்' படத்தில் பணியாற்ற அழைப்பு வந்தது. அன்றுதான் என் நீண்ட கால கனவின் ஒரு பகுதி நனவானது தமிழ் சினிமா உலகு என்ற விசாலமான வெளியில் கால் பதித்தேன். அதன் பின்னர் எனக்கு வேலு பிரபாகரனின் நட்பு கிடைத்தது. தமிழ் சினிமாவில் இருக்கும் மிகச் சிறந்த மனிதர்களில் வேலு பிரபாகரனும் ஒருவர். எனக்கு அவர் வீட்டிலேயே இடமும் தந்து எனக்கு சாப்பாடு போட்டவர் அவர்.

பிறகு மீண்டும் தங்கர்பச்சானின் இயக்கத்தில் ஒன்பது ருபா நோட்டு படத்திலும் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. நான் சென்னையில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் தங்கியிருந்த போது என்னோடு சில இளைஞர்களும் தங்கி இருந்தார்கள். அவர்களில் இயக்குனர் ராதா மோகனின் உதவிஇயக்குனர்கள். மற்றும் 'பசங்க' இயக்கிய பாண்டிராஜ் ஆகியோரும் இருந்தார்கள். பிறகு வெற்றி மாறனும் ரூம் மேட்டாக இருந்தார். அவருடனான நட்பு என்னை 'பொல்லாதவன்' படத்தின் உதவி இயக்குனராக்கியது. இதைத் தொடர்ந்து அவரின் 'ஆடுகளம்' திரைப்படமும் எனக்கு நல்ல களமாக அமைந்தது''என்று தன் சினிமா பிரவேசம் பற்றி பேசினார் ஹசீன்.

இந்த இளைஞன் தமிழ் சினிமாவின் சிகரத்தை தொட்டு விட இன்னும் போராடிக் கொண்டிருக்கிறார். இப்போது நல்ல கதையுடன் காத்திருக்கிறார். தயாரிப்பாளர்கள் வாய்ப்பு தந்தால் ஹசீன் ஒரு நல்ல படைப்பு ஒன்றை தமிழ் ரசிகர்களுக்கு நிச்சயம் தருவார். இன்று புதியவர்கள் தான் பேசப்படும் படங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இஞைனும் ஒரு நாள் சாதிப்பார். தொடுவானம் தொட்டுவிடும் தூரத்தில் தான் இருக்கிறது!

# மனதுக்கு அதீத சக்தி உண்டா, இல்லையா?

## பகுத்தறிவாளர்களின் சவால் வெற்றி கொள்ளப்படுமா?

எந்த ஒருவரும் எனக்கு அதீத சக்தி இருப்பதாக நிரூபித்துக்காட்டினால் அந்த நபருக்கு 10 லட்சம் ரூபாவை பரிசாக வழங்க தான் தயாராக இருப்பதாக பேராசிரியர் கார்லோ பொன்சேகா கூறுகிறார்.

இதற்காக இலங்கை பகுத்தறிவாளர் சங்கத்துடன் இணைந்து 12 சவால்களை முன்வைத்துள்ளதாகவும் அதில் ஒன்றையேனும் நிறைவேற்றிக்காட்டினால் கூடப் போதுமானது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இலங்கை பகுத்தறிவாளர் சங்கத்துடன் இணைந்து 1964ம் ஆண்டு பேராசிரியர் ஆபிரகாம் கோவூர் முன்வைத்த 21 சவால்களை மீண்டும் மக்கள் முள்வைக்கும் ஒரு திட்டமே இது என்று கூறும் பேராசிரியார் கார்லோ பொன்சேகா கடந்த முறை இடம் பெற்ற 21 சவால்கள் இம்முறை 12 சவால்களாக குறைக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்.

21 சவால்களில் ஒன்றையேனும் நிறைவேற்றிக் காட்டுபவருக்கு ஒருலட்சம் ருபாவை பரிசளிப்பதாக அப்போது ஆபிரகாம் கோவூர் கூறியிருந்தார்.

மனம் என்பது அதீத சக்திகளைக் கொண்டது என்ற கருத்து தற்பேது அதிக அளவில் பேசப்பட்டுவருகிறது எனினும் அவ்வாறான ஒரு சக்தி இருக்கிறதா என்பது பிரயோக ரீதியில் நிருபித்துக் காட்டுவதற்காகவே இந்த சவால் முன்னெக்கப் பட்டுள்ளதாக பேராசிரியர் கார்லோ பொன்சேகா கூறுகிறார் அது உண்மையா பொய்யா என்பதை தெரிந்து கொள்ள இதன் மூலம் வழிசெய்யப்பட்டுள்ளது என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.



டொக்டர் கார்லோ பொன்சேகா

இந்த சவாலை ஏற்றுக்கொள்ளும் நபர் அதற்காக பத்தாயிரம் ருபாவை கட்டுப்பணமாக செலுத்தவேண்டும் இதேவேளை இந்த சவாலை வெற்றி கெள்ளும் நபருக்கான 10 லட்ச ருபா நிதி தற்போது சனச வங்கியில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது அந்த நிலையான வைப்பின் சான்றிதழ் லக்பிம ஞாயிறு பத்திரிகையின் பிரதம ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் கார்லோ பொன்சேகா மற்றும் இலங்கை பகுத்தறிவாளர் சங்கத்தின் பொதுச்செயளாளர் தாரக வராபிட்டிய ஆகியோர் கையொப்பமிட்டுள்ள 12 சவால்களினதும் விபரங்களை உள்ளடக்கிய கோவையில கிழ்க்கண்ட சவால்கள் உள்ளன.

1. எரியும் கரி நெருப்பில் அடிப்பாதம் எரியாமல் 30 செக்கன்கள் நின்றுகொண்டிருத்தல்.
2. ஒட்டி முத்திரையிடப்பட்ட கடித உறையொன்றில் வைக்கப்பட்டுள்ள இலங்கையில் செல்லுபடியான தாளின் இலக்கத்தை சரியாகச்சொல்லுதல்.
3. நடுவர் சபையினால் பெயரிடப்படும் இலங்கையில் செல்லுபடியான நாணயத்தாளை உருவாக்கிக்காட்டுதல்.
4. நடுவர் சபையினால் பெயரிடப்படும் ஒருவரினால் ஓட்டப்படும் வாகனத்தை அதீத சக்தி மூலம் நிறுத்துதல்.
5. நடுவர் சபையினால் கூறப்படும் பொருளை அதீத சக்தி அல்லது வேறு எந்தச் சக்தியையும் பயன்படுத்தி மறையச் செய்தல்.
6. நடுவர் சபை கொடுக்கும் திரவத்தின் அளவை 10 சதவீதத்தால் அதிகரித்தல் அல்லது குறைத்தல்.
7. நடுவர் சபைக்கு தெரியும் வகையில் புதைக்கப்படும் ஒரு பொருளை அதித சக்தியின் மூலம் வெளியே எடுத்தல் சவாலை ஏற்பவரினால் தயாரிக்கப்படும் சூனியம் என்றாலும் பரவாயில்லை. எனினும் உலோக பொருளுக்கு இடமளிக்க முடியாது ஏனெனில் அதில் இலத்திரனியல் உபகரணம் பயன்படுத்தப்பட்டால் அது சவாலை ஏற்பவரின் திறமையாக அமையாது.
8. தண்ணீரை வைன் ஆக அல்லது பெற்ரோலை தண்ணீராக அல்லது வைனை இரத்தமாக மாற்ற வேண்டும்.
9. அதீத சக்தி அல்லது அது போன்ற வேறு சக்தியை உபயேகித்து ஒருவர் சபையின் முன் இலங்கை முழுவதும் இன்டர்நெட்(இணையம்) சேவையை இடைநிறுத்துதல்.
10. வெவ்வேறு 10 பேரின் பிறந்த இடம் பிறந்த நாள் மற்றும் நேரத்தை கொடுத்தால் அவர்களைப் பற்றிய கீழ்க்காணும் விபரங்களை நடுவர் சபையிடம் கையளித்தல்

(அ) அவர்களது ஆண், பெண், பாவம்

(ஆ) உயிருடன் இருக்கிறார்களா? இறந்துவிட்டார்களா?

(இ) உயிருடன் இருந்தால் அவர்கள் இலங்கையில் இருக்கிறார்களா இல்லை வெளிநாட்டில் இருக்கிறார்களா?

(ஈ) இறந்து போயிருந்தால் அவர்கள் எந்த ஆண்டு இறந்தார்கள்

(31ஆம் பக்கம் பார்க்க)



# விதிசெய்தது சரியோ அத்தான்?



ஜயம்பதி ஜயசிங்க

சசிகலாவுக்கு 17 வயது, நன்றாகப் படிப்பாள். அந்த கிராமத்து மகா வித்தியாலத்தில் அவள்தான் முதல் மாணவி. அடுத்த வருடம் நடைபெறவிருந்த க.பொ.த (சா/த) பரீட்சையில் அந்த மாவட்டத்திலேயே அவள்தான் முதலாம் இடத்தை பெறுவாள் என்ற எதிர்பார்ப்பு பாடசாலையின் ஆசிரியர்கள் அனைவருக்கும் இருந்தது.

சசிகலாவை பொறுத்தவரை அவள் நன்றாகப் படித்துத்தான் ஆகவேண்டும். ஏனெனில் அவளது குடும்பம் வறுமையான குடும்பம். படித்து வேலைதேடி தொழில் செய்துதான் அவள், அவளது குடும்பத்தைக் காப்பாற்றியாக வேண்டும்.

சசிகலா கறுப்புத்தான் ஆனால் களையான முகம் நல்ல கட்டமைப்பான தேகம்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக அவளுக்கு ஒரு புதிய அனுபவம். அவள் வீட்டுக்கும் பாடசாலைக்கும் சுமார் ஒரு மைல் தூரமிருக்கும் காலையில் பாடசாலைக்கும் பிற்பகல் பாடசாலை விட்டதும் அவள் நடந்துதான் சென்றாள். ஆனால் அண்மைக் காலத்தில் இருந்து ஒரு இளைஞன் அவளை பின்தொடர்வது அவளுக்குத் தெரிந்தது. பாடசாலை செல்லும் போதும் வரும் போதும் அவள் தோழியருடன் தான் செல்வாள். எனவே தோழியருக்கும் அந்த இளைஞன் சசியைத்தான் பின் தொடர்கிறான் என்று தெரிந்திருந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. டவுனுக்கு சென்று விட்டு வருகையில் கொஞ்சம் நேரமாகிவிட்டது. வீட்டுக்கு அருகில் இருந்த பஸ் தரிப்பிடத்தை விட்டு அவள் இறங்கும் போதே மணி ஆறைத் தாண்டிவிட்டது. அந்த வீதியில் வழி நெடுகிலும் இரு புறமும் மரங்கள் நிறைந்திருந்தன. எனவே 6 மணிக்கே அங்கு முன் இருட்டு ஆரம்பமாகிவிடும். எனவே இருட்டுவதற்குள் வீட்டுக்குச் செல்ல அவள் வேகமாக நடந்தாள். எதிரில் கடந்த சில நாட்களாகவே அவளைப் பின் தொடர்ந்த இளைஞன் சைக்கிளில் வந்துகொண்டிருந்தான் அவள் அருகே வந்ததும் சைச்கிளை விட்டு இறங்கினான்.

''ஏன் இத்தனை லேட்டாக வருகிறீர்கள்'' என்று அவன் கேட்டதற்கு...

''கொஞ்சம் புத்தகங்கள் வாங்க டவுனுக்கு போனேன் நேரமாகிவிட்டது'' அவளை அறியாமலேயே வார்த்தைகள் வெளிவந்துவிட்டன.

''பன்சல வீதியில் தானே உங்கள் வீடு?''

''உங்களுக்கு எப்படி தெரியும்'' என்று கேட்கத்தான் நினைத்தாள். ஆனால் அவளால் ''உம்'' சொல்ல மட்டுமே முடிந்தது.

ஓரளவு இருட்டிய நிலையில் அவள் அவனை அவளது வீடு வரை கொண்டு வந்து விட்டுச் சென்றான் வீட்டுக்கு அருகில் வரும் வரை அவன் வேறு கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. அப்படி கேட்டால் கூட பதில் சொல்லும் நிலையில் அவள் இருக்கவில்லை. இருட்டு, அருகில் ஒரு இளைஞன் யாரும் பார்த்து விடுவார்களோ என்ற அச்சம் எல்லாமே அவளை வாய்மூடி மௌனியாக்கின.

வீட்டுக்கு அருகில் வந்ததும் அவள் ''தாங்க்ஸ்'' என்றாள். அந்த நான்கு எழுத்துக்கள் 4 ஆயிரம் கதைகளைக் கூறின. அவன் எதுவும் பேசவில்லை. புன்னகைத்தான் அதாவது தாங்க்ஸை ஏற்றுக்கொண்டான் மற்றும் சசியை புரிந்து கொண்டான். அவள் வீட்டுக்குள் நுழைவதை பார்த்த பின் அவன் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

படிப்பு ஒன்றுதான் தனது குறிக்கோள். காதல் கத்தரிக்காய் என்று எதுவும் எனக்கு அருகில் வரக்கூடாது என்று மனதில் காதலுக்கு தடை போட்டு வைத்திருந்த சசிக்கு அன்று இரவு தூக்கமில்லை. காதல் என்ற நோய் அவளை தொற்றியிருந்தது. அடுத்த நாள் அந்த நோய் உக்கிரமடைந்தது. பாடசாலைக்கு செல்லும் வழியில் அவனைக் கண்டாள் அவனது பார்வையே அவளது காதல் நோய்க்கு மருந்தாகியது.

அவன் பெயர் தமித் படித்துவிட்டு வேலைதேடிக் கொண்டிருந்தான். தமித் - சசி காதல் 2 வருடங்கள் தொடர்ந்தன. தமித்தின் நெருங்கிய தோழர்களுக்கும், சசியின் உயிர்த் தோழிகளுக்கும் மட்டுமே இது பற்றி தெரிந்திருந்தது.

சசி இப்போது சாதாரண தரத்தில் சிறப்பாக சித்திபெற்று உயர் தரத்தில் இரண்டாவது வருடம் படித்துக்கொண்டிருந்தாள். வேலை தேடியலைந்த தமித் இப்போது இராணுவத்தில் சேர்ந்திருந்தான்.

இந்த நிலையில் ஒரு நாள்...

டவுனில் இருந்த சிற்றுண்டிச் சாலையில் தமித்தும் சசியும் ஒன்றாக உட்கார்ந்து ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்ததை கண்ட கிராமவாசியொருவர் சசியின் தாயாரிடம் பற்ற வைத்துவிட்டார். அது நன்றாகவே பற்றிக்கொண்டது.

''படிக்கப் போகிறாள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன் பாவி மகள் யாரோ ஒருவருடன் சுற்றித் திரிகிறாளே'' என்று சசியின் தாயார் ஆத்திரத்தில் கத்தினாள். அன்று மாலை சசி பாடசாலை விட்டு வந்ததும் சசியின் தாய் அவளை வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டாள்.

''விட்டு விடு அடுத்த ஊர் சம்பந்தம் நமக்கு வேண்டாம். உனக்கான ஒரு பையனை மாமா கண்டியில் பார்த்து வைத்திருக்கிறார். பையனுக்கு வங்கியில் வேலையாம் கார், பங்களா என்று நல்ல வசதியான குடும்பமாம். அந்த சம்பந்தத்துக்கு நீ சரி சொல்லாவிட்டால் என்னை உயிருடனேயே பார்க்க முடியாது'' என்று சசியின் தாயார் எச்சரிக்கை விடுத்ததுடன் ''நான் நினைத்ததை செய்து காட்டுபவள்'' என்று ஒரு சவாலையும் போட்டு வைத்தாள்

பயந்து விட்டாள் சசி. ஏதாவது ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டிய கட்டாய சூழ்நிலை. இரண்டு தீர்மானங்கள் அவர் முன் தோன்றின. காதலன் தமித் அல்லது கண்டி மாப்பிள்ளை...

தனது குடும்ப சூழ்நிலை, அம்மாவின் எச்சரிக்கை, தனது எதிர்காலம் ஆகிய மூன்று தராசுகளில் தமித்தையும், கண்டி மாப்பிள்ளையையும் வைத்துப் பார்த்தால் மூன்று முறையும் கண்டி மாப்பிள்ளை தான் கீழே சென்றார் தமித் மூன்று முறையும் மேலே சென்றான். கண்டி மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்ட தீர்மானித்தாள் சசி.

தனது தீர்மானத்தை அம்மாவிடம் சொன்னாள் சசி. அம்மா அவளைக் கட்டிப்பிடித்து கொஞ்சினாள்.

''நானும், நீயும் அடுத்த கிராமத்தில் அந்தப் பையன் வீட்டுக்கு சென்று வருவோம். உன்னுடைய மாமா கண்டியில் உனக்காக ஒரு பையனைப் பார்த்து சம்மதம் கூறிவிட்டார் என்று விஷயத்தை கூறி அவர்களுக்கு தெளிவுபடுத்துவோம். அப்போது எந்தப் பிரச்சினையும் வராது என்று கூறிய சசியின் தாய் சசியையும் தனக்கு அண்ணன் முறையிலான உறவினர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு தமித் வீட்டுக்குச் சென்றாள்.

தமித்தின் தாயாரிடமும் சகோதரியிடமும் விடயத்தை கூறினார்கள். தமித் வீட்டில் இல்லாத நேரமாகப் பார்த்து அவர்கள் சென்றது அனைவருக்கும் சௌகரியமாகப் போய்விட்டது.

விஷயத்தை முழுதாக பேசி முடித்துவிட்டு அவர்கள் திரும்பத் தயாராகிய போது எவருமே எதிர்பார்க்காத நிலையில் தமித் வீட்டுக்குள் நுழைந்தான். விடுமுறையில் இப்போது தான் வந்திருக்கிறான். வந்தவுடன் நேராக வீட்டுக்குத்தான் வருகிறான். சசியையும் அவளது தாயாரையும் கண்டதும் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. தன்னுடைய திருமணத்தை பற்றிப் பேசத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று அவன் நினைத்தான்.

அந்த எண்ணத்தில் சசியின் தாயாரின் கால்களில் விழுந்து வணங்கினான். அவனை மெதுவாக உள்ளே அழைத்துச் சென்று அவனிடம் விஷயத்தை கூறினாள் தமித்தின் சகோதரி.

சசி தனக்கு இல்லாமற்போவாள் என்று கனவிலும் நினைத்திராத தமித்துக்கு இந்த செய்தி இடி போல் இறங்கியது. அவனால் அதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உணர்ச்சிகள் அவனுக்குள் கொதித்தன. (31ஆம் பக்கம் பார்க்க)

கோப்பிக்காலத்தில்...

# இந்தியத் தொழிலாளர் பெருந்தோட்டங்களை நாடிச் சென்றது ஏன்?

மாசி

தேங்காய், தேயிலைத் தூரில் விளைகிறது என்பதை நம்பி இந்தியத் தொழிலாளர்கள் இலங்கை வந்தனர் என்ற காரணத்தை விடவும் சில முக்கிய காரணங்கள் இருந்தன. பிரிட்டிஷ் ஆட்சி தென்னிந்தியாவில் வேரூன்றுவதற்கு முன்னர் பணம் மக்களுக்கு முக்கியமானதாக இருக்கவில்லை. அவரவர் தத்தமது வேலைகளை செய்து கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியின் போது இங்கிலாந்தில் இருந்தும் வேறு நாடுகளில் இருந்தும் பாவனைப் பொருட்கள், உடுதுணிகள், நாகரிகப் பொருட்கள் என்பன சந்தைக்கு விடப்பட்டன. இது பாரம்பரிய தொழில்களைப் பாதித்தது. மக்கள் இவற்றை வாங்கத் தொடங்கியதும் பாராம்பரிய தொழில்களான கைத்தறி, கிராம கைப்பணிப் பொருள் உற்பத்தி என்பன மங்கிமறைந்தன. மேலும் ஆங்கிலேயே நிர்வாகத்தின் நிலவரி, உற்பத்திவரி, காணி உறுதி முறை என்பனவும் விவசாயிகளை குழப்பத்தில் ஆழ்த்தின. கடன் பெறுதல், நிலத்தை ஈடுவைத்து கடனை திருப்பிச் செலுத்த முடியாத பட்சத்தில் அவற்றை நிலச் சுவான்தார்களிடம் இழத்தல் என்பன அவர்களுக்கு மேலதிக சுமையாகவும், அச்சுறுத்தலாகவும் அமைந்ததோடு நிலத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழலையும் தோற்றுவித்தது.

ஆங்கிலேய ஆட்சிக்கு முன்னரேயே விவசாயத் தொழிலாளர்கள் என்ற ஒரு பிரிவினர் தென்னிந்தியாவில் இருந்தனர். இவர்களில் பெரும்பாலானோருக்கு சொந்தக்காணி இருக்கவில்லை. சாதி அமைப்பின் கீழ்மட்டத்தில் இருப்போரால் சொந்தக்காணி வைத்திருப்பது சாத்தியமானதாக இருக்கவில்லை. இவற்றைத் தவிர, மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் 19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட வரட்சியும் பஞ்சமும் விவசாயிகளையும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களையும் அவர்களின் இடங்களில் இருந்து வெளியேற்றியது. கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களின் வாழ்க்கை புதிய நுகர்வுப் பொருட்களின் வருகையால் பாதிக்கப்பட்டதால் அவர்கள் விவசாயிகளா-கவும் விவசாய கூலிகளாகவும் மாறினர். இச் சமயத்தில் தான் இலங்கையிலும் பர்மா, மலேசியா, பிஜி, தென்னாபிரிக்கா, மொரிஷியஸ் போன்ற பிரிட்டிஷ் காலனி நாடுகளிலும் பாரிய விவசாய பண்ணைகள் மற்றும் பெருந்தோட்டங்கள் திறக்கப்பட்டன. அயல்நாடுகளில் விவசாயத் தொழில் கிடைக்கிறது என்றதும் எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் செல்ல அவர்கள் தயாராக இருந்தனர். இலங்கையில் அப்போது கோப்பி, பின்னர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய பெருமளவு தொழிலாளர்கள் தேவையாக இருந்ததால் இச்சந்தர்ப்பத்தை இலங்கைத் தோட்டத்துரைமார் தவறவிடவில்லை. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு பல்லாயிரக் கணக்கில் வருவதற்கு இவையே காரணமாயின.



இலங்கைப் பயணத்துக்காக தூத்துக்குடியில் காத்திருக்கும் தொழிலாளர் குடும்பங்கள்

# மொழிக்கொள்கையும் இனப்பிரச்சினையும்

நீண்டகாலமாக எமது நாட்டில் சமூக அமைப்பை வாட்டி வதைக்கும் இனப்பிரச்சினையின் முக்கிய அம்சமாகவும் உணர்ச்சிப்பூர்வமான காரணியாகவும் மக்களின் அன்றாட வாழ்க்கையின் பல்வேறு துறைகள் மீது செல்வாக்கு செலுத்தும் காரணியாகவும் மொழிக்கொள்கை காணப்படுகிறது.

எமது நாட்டின் இனப்பிரச்சினையை பொறுத்தமட்டில் ஒன்றின் பின் ஒன்றாக ஆட்சியை கைப்பற்றி ஆட்சி நடத்திய பல்வேறு அரசுகள் கடைப்பிடித்த மொழிக்கொள்கை, இனப்பிரச்சியின் வடிவத்தையும் அதன் உணர்ச்சி பூர்வமான சுபாவத்தையும் தன்மையையும் ஜனரஞ்சகமான தன்மையையும் கூர்மைப்படுத்தியதில் அச்சாணியாக விளங்கியது.

ஆகவே ஒன்றின் பின் ஒன்றாக ஆட்சி நடத்திய அரசுகளினால் மேற்கொள்ளப்பட்ட மொழிக்கொள்கைக்களையும் அவை இனப்பிரச்சினை மீது செலுத்திய செல்வாக்கினையும் அக்கொள்கைகளை நகர்த்திச் சென்ற விதத்தினையும் ஆராய்ந்து பார்ப்பது இக்கட்டுரையின் முக்கியநோக்கமாகும்.

அது தற்கால தேவையையும் கூட, குறிப்பாக தமிழ் பேசும் சமூகத்துக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும். அதற்கு பல காரணங்கள் உள்ளன.

1. எமது நாட்டின் இனப்பிரச்சினையின் தன்மையை புரிந்துக்கொள்வதற்கு
2. காலத்துக்கு காலம் முன்வைக்கப்பட்ட மொழிக்கொள்கைகள் மீது செல்வாக்கு செலுத்திய சமூக சக்திகள் என்ன என்பதனையும் விளங்கிக்கொள்ளல்.
3. மொழிக்கொள்கைகளை அமுல் நடத்துவதில் ஏற்படும் சமூக கொந்தளிப்புக்களின் தீய விளைவுகளைத் தடுத்துக்கொள்வதற்கு
4. தேசிய ஒன்றுமையை கட்டியெழுப்பக்கூடிய நியாயமான மொழிக்கொள்கையொன்றினை தொடருவதற்கான அடிப்படைகள்.
5. இனப்பிரச்சினையை தீர்ப்பதில் மொழிக்கொள்கையொன்றினை வளர்த்து அமுல் நடத்துவதன் மூலம் சமூகத்தின் பொறுப்பை உணர்த்துவதற்கு.

மொழி என்பது ஒரு சமூகத்தின் அல்லது ஒரு இனத்தின் கலாசார தனித்துவத்தினை பிரதிபலிக்கும் சின்னம் என்றே கூறலாம். இதனால்தான் HERDER என்ற ஜெர்மன் அறிஞர் மொழியை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதம் (Linguistic Nationalism) ஒன்றைப் பற்றி கூறுகிறார்.

பல்லின சமூகம் ஒன்றைக் கொண்ட எமது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் போன்ற இனங்கள் வசித்து வருவதுடன் குறிப்பாக சிங்கள, தமிழ் மக்கள் தத்தமது மொழிகளை தமது அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் பிரயோகித்து வருகிறார்கள்.

பண்டைய காலத்தில் அரசவையில் சிங்கள மொழி பிரபல்யம் பெற்று விளங்கியபோதிலும் தமிழ் மொழியும் குறிப்பிடத்தக்க செல்வாக்கினை பெற்று வந்தது. கண்டிய அரசர்களுடைய காலத்திலும் 15, 16 ஆம் நூற்றாண்டு கோட்டை நகரத்திலும் தமிழ் மொழி இலங்கை சமூகத்திலே பிரபல்யம் பெற்று விளங்கியது.

காலனித்துவ ஆட்சியின் பொழுது அதாவது போர்த்துகேய, ஒல்லாந்து காலங்களில் அடுத்து வந்த ஆங்கில ஆட்சி நிலவியபோது அரச நிர்வாகத்தில் ஆங்கில மொழியே முதன்மை மொழியாக பயன்படுத்தப்பட்டது. ஆங்கில மொழி கல்விகள் வளர்ப்பதிலும் அவர்கள் கரிசனை கொண்டிருந்தனர்.

19ம் நூற்றாண்டுகளில் தமிழ், சிங்கள வேறுபாடின்றி ஆங்கிலம் கற்ற ஒரு மத்திய வகுப்பு உருவாகியதைக் காணலாம். இவர்கள் அரசியலிலும், நிர்வாகம், வைத்தியத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை போன்ற துறைகளிலே உயர்ந்த அந்தஸ்த்தையும் பெரும் செல்வாக்கினையும் பெற்றிருந்தார்கள்.

இவ்வாறு ஆட்சி மொழி அரச கருமங்களில் முதன்மை பெற்றிருந்தது. மேலும் உயர்க் கல்வியைத் தொடரவும் ஆங்கில மொழி அவசியப்பட்டது.

சோல்பரி ஆணைக்குழுவின் விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு ஆக்கப்பட்ட அரசியல் யாப்பில் ஆங்கிலம் அரச கருமமொழியாக தீர்மானிக்கப்பட்டது. இக்கொள்கை ஆங்கிலம் படித்த மத்திய வகுப்பிற்கு ஏற்றதாக இருந்தாலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைத் தாய்மொழியாக கொண்ட சாதாரண பாமர மக்களுக்கு தமது தினசரி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல இடையூறுகளை சந்திக்கவேண்டியதாயிற்று. கிராமப் புறங்களில் கல்வி கற்பதிலும் உயர் கல்வியை தொடர்வதிலும் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இது பற்றி பல மக்கள் நிறுவனங்களும், அரசியல் தலைவர்களும் கரிசனை கொள்ளாமல் இருக்கவில்லை. 1938ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்த யோசனைகள் அரசாட்சி சபையில் முன்வைக்கப்பட்டபோது அவை அங்கீகரிக்கப்பட்டன. இதற்கமைய தேசிய சங்கத்தின் கொள்கைகள் மாற்றப்படவேண்டும் என்று கூறி அதன் தலைவர்கள் ஒரு குழுவை 1939 ஆம் ஆண்டில் நியமித்தனர்.

அதன் இறுதி அறிக்கை 1939 ஆகஸ்ட் 25ஆம் திகதி வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக துறைகளில் முன்னேற்றத்துக்கான விதப்புரைகள் முன்வைக்கப்பட்டது. இதையடுத்து அவ்வறிக்கையின் இலக்கம் 27 கொண்ட விதப்புரையிலே ஆங்கில மொழியை மேலதிக மொழியாக வைத்துக்கொள்வதென்றும் சகல கற்றல் நடவடிக்கைகளுக்கும், தாய் மொழியை பயன்படுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

பிற்காலத்தின் சிறுபான்மை மக்களுக்கும், பெரும்பான்மை சமூகத்திற்கும் இடையே சச்சரவு ஏற்படுத்திய மொழி பிரச்சினை இவ்வாறே மேடையேறியது.

1939ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கண்டியில் நடைபெற்ற தேசிய சங்க கூட்டத்தின்போது இவ்வறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் இவ்வறிக்கை இந்நாட்டு அரசியல் வரலாற்றிலே மிக முக்கியமான ஆவனமாக விளங்கியது.

அதுவரையும் தமது உரிமைகளைப் பற்றி சந்தேகத்துடன் செயற்பட்ட சிறுபான்மையினர் மொழிப்பிரச்சினை தொடர்பில் சந்தேகத்துடன் உற்றுநோக்குவதற்கு தள்ளப்பட்ட சந்தர்ப்பம் இதுவே என சில அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இது இவ்வாறிருக்க, 1936 ஆம் ஆண்டுக்குப் பின்பு சிங்கள, தமிழ் மொழிகளிலும் நிர்வாகங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அரசாங்கம் சபையில் முதன் முதலில் முன்வைத்தவர் பிலிப் குணவர்தன ஆவார்.

1944ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சிங்கள, தமிழ் இரு மொழிகள் இந்நாட்டின் கல்வியில் கற்றல் மொழிகளாக இருக்கவேண்டுமென்று S.W.R.D பண்டாரநாயக்க, J.R ஜயவர்தன, C.W.W கன்னங்கர ஆகியோர் குரலெழுப்பினர்.

ஆயினும் இவர்கள் தமது நிலைப்பாடு உண்மையானது என உணர்ந்திருந்த போதிலும் பெரும்பான்மை மக்களின் உணர்ச்சிகளுக்கு அழுத்தப்பட்டு தமது அரசியல் வாழ்க்கையை காப்பாற்றிக்கொண்டனர்.

> 1944ஆம் ஆண்டு மே 25ஆம் திகதி இதுபற்றி முதல் முறையாக களனிய பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய ஜே.ஆர் ஜெயவர்தன அரசாங்க சமைக்கு ஒரு பிரேரணையை முன்மொழிந்திருந்தார். அதன் மூலம் சிங்கள மொழியை அரசகரும மொழியாக பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். இப்பிரேரனை பற்றி தமது கருத்தை தெரிவித்த எஸ்.டப்ளியு.ஆர்.டி பண்டாரநாயக்க, ஆங்கிலம் தற்போது அரச கரும மொழியாக பயன்படுத்தப் படுகின்ற காரணத்தால் பெறும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதை ஜே.ஆரின் இப்பிரேரணை புலப்படுத்துகிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

1944 ஆம் ஆண்டு மே 25ஆம் திகதி இதுபற்றி முதல் முறையாக களனிய பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய ஜே. ஆர் ஜெயவர்தன அரசாங்க சமைக்கு ஒரு பிரேரணையை முன்மொழிந்திருந்தார். அதன் மூலம் சிங்கள மொழியை அரசகரும மொழியாக பயன்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இப்பிரேரனை பற்றி தமது கருத்தை தெரிவித்த எஸ்.டப்ளியு.ஆர்.டி பண்டாரநாயக்க, ஆங்கிலம் தற்போது அரச கரும மொழியாக பயன்படுத்தப்படுகின்ற காரணத்தால் பெறும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதை ஜே.ஆரின் இப்பிரேரணை புலப்படுத்துகிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

அதேபோன்று, சில நாடுகளில் ஒன்றுக்கும் மேலான அரசகரும மொழிகள் பிரகடனப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக அரச நிருவாகம் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்ட ஜி.ஜி. பொன்னம்பலம், இப்பிரேரணை மூலம் புதிய துரைமார் பிரிவொன்றை உருவாக்க நேரிடும் என்று கூறியதுடன் தமிழ் இலக்கியத்தை மேம்படுத்திக்கொள்வதற்கு தமிழ் மொழி கட்டாயம் தேவை எனவும் கூறியிருந்தார்.

1950 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதி ஆகும் பொழுது இந்நாட்டின் சிங்கள பௌத்த மறுமலர்ச்சியொன்று ஏற்பட்டதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற விருத்தி 2500 ஆம் ஆண்டு பௌத்த ஜயந்தியின் அடிப்படையாக விளங்கியது. அதுவரை ஆட்சி நடத்திய அரசுகளினால் சிங்கள பௌத்தத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட அநியாயங்கள் பற்றி சமூகத்தில் ஆழமான உரையாடல் உருவாக்கிக்கொண்டிருந்தது.

குறிப்பாக தொழில்துறை, கல்வித்துறை மற்றும் வர்த்தகத்துறை போன்றவற்றில் சிங்கள பௌத்த மக்களுக்கு பல்வேறு அநீதிகள் இழைக்கப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்பட்டது. நாட்டின் பெரும்பான்மை இனத்துக்கு ஏற்பட்ட இந்த அநீதியை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று பௌத்த பிரமுகர்கள் இக்காலக்கட்டத்தில் பல அமைப்புக்களை ஏற்படுத்திக்கொண்டனர்.

டி.எஸ் சேனாநாயக்க அரசும் 1951 ஆம் ஆண்டில் அரச மொழி ஆணைக்குழு ஒன்றினை நியமித்தது. அதன் தலைவராக சேர் ஆர்தர் ஜெயவர்தன செயற்பாட்டது. அந்த ஆணைக்குழு அரச மொழிப் பிரச்சினையை ஆராய்ந்து 1953 மற்றும் 1954 ஆண்டுகளில் இடைக்கால அறிக்கைகள் இரண்டினை முன்வைத்தது. இதன்மூலம் இலங்கையின் அரச கரும மொழியாக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் பயன்படுத்தாது, சிங்கள மொழியை மட்டும் பயன்படுத்துதல் பொருத்தமானது என குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேபோன்று 1954இல் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையில் நாட்டில் நிர்வாகம் மற்றும் கற்கை மொழியாக ஆங்கில மொழிகளை பயன்படுத்துவதால் ஆங்கிலம் கற்ற சிறு சாரார் பெரும்பாலான சிங்கள மக்களின் உரிமைகளை சுவீகரித்துக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது

> டி.எஸ் சேனாநாயக்க அரசும் 1951 ஆம் ஆண்டில் அரச மொழி ஆணைக்குழு ஒன்றினை நியமித்தது. அந்த ஆணைக்குழு அரச மொழிப் பிரச்சினையை ஆராய்ந்து 1953 மற்றும் 1954 ஆண்டுகளில் இடைக்கால அறிக்கைகள் இரண்டினை முன்வைத்தது. இதன்மூலம் இலங்கையின் அரச கரும மொழியாக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் பயன்படுத்தாது, சிங்கள மொழியை மட்டும் பயன்படுத்துதல் பொருத்தமானது என குறிப்பிடப்பட்டிருந்தது.



ஜே.ஆர்


பிலிப்


எஸ்.டப்ளியு.ஆர்.டி



டி.எஸ்.


ஜி.ஜி



# இன்னும் 2 மாதங்களில் உலகம் அழிந்துவிடுமாமே!

மணி ஸ்ரீகாந்தன்




சுமார் பத்துலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் குரங்கு போன்ற ஒரு விலங்கில் இருந்து பிரிந்த ஒரு கிளையே படிப்படியாக வளர்ச்சி பெற்று சுயமாக சிந்தித்து செயலாற்றும் வல்லமை கொண்டதும் இரண்டு கால்களினால் நடக்கக்கூடிய மனிதனாக பரிணாமம் பெற்றது. உலகில் தோன்றிய உயிரின பரிணாம வளர்ச்சியில் அறிவில் கூடிய இனம் மனிதனாக இருப்பதாலேயே முதன்மை உயிரினமாக உலகில் பல்கிப் பெருகியிருக்கிறது. இத்தகைய கீர்த்தி பெற்ற மனித இனத்தின் ஆயுள் இன்னும் இரண்டு மாதங்களில் நிறைவடைந்து விடப் போவதாக மாயன் கலண்டர் குறிப்புகள் சுட்டிக் காட்டுகிறது.

மாயன் கலண்டர் குறிப்பிடுவது போல உலகம் அழிந்தால், இந்த உலகம் சூன்யமாகி விடும். அதற்குப் பிறகு பல மில்லியன் வருடங்களுக்குப் பிறகு தோன்றக் கூடிய ஒரு அறிவுள்ள உயிரினம் இவ்வுலகில் நடமாடுமானால் மனிதர்களின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அழிவை அது ஆய்வுகளின் அடிப்படையில் பதிவு செய்யும். எண்ணிப் பார்க்க கொஞ்சம் வேடிக்கையாக இல்லை? ஏனெனில் நமக்கு முன் தோன்றிய இன்னொரு உயிரினமான டைனோசர்கள் பற்றி நாம் தேடித் தேடி பதிவு செய்து வருகிறோம். இந்த டைனோசர்கள் ஐந்து முதல் ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உலகெங்கும் அரசாண்டுக் கொண்டிருந்தன. அப்போது பாலூட்டிகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. உலகெங்கும் திரிந்த இந்த மெகா உயிரினங்கள் பற்றியும் அதன் அழிவைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். டைனோசர்கள் சுமார் 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் தோன்றிய முதல் பாரிய இனமாகக் கருதப்படுகிறது. இதில் ஹொராசரஸ் என்ற ராட்சத டைனோசர்தான் முதல் தோன்றிய பெரிய உயிரினமாகும். அதற்குப் பிறகு செஸ்மோசரஸ், புறண்டோசரஸ், டெஜோனிசஸ், இகுவானோடன், செரடொப்சியன், டிருடன், ஹட்ரோசர்ஸ், நனோ டைரானஸ், டைரானோசரஸ் ரெக்ஸ் உள்ளிட்ட பல ரகங்களில் பல அளவுகளில் பல்வேறு குணாம்சங்களைக் கொண்டதாக இவை விளங்கின. டைனோசர் என்பது இவற்றுக்கு மனிதன் சூட்டியிருக்கும் பொதுப்பெயராகும். இந்த டைனோசர்களில் மாமிச பட்சிணி, தாவர பட்சிணி என இரு வகை டைனோசர்கள் வாழ்ந்துள்ளன. டைனோசர்ஸ் வாழ்ந்த அந்தக் காலப் பகுதியை மெசசோயிக் என அழைக்கிறார்கள். அந்தக் காலப் பகுதியில் உலகம் முழுவதும் சுமார் 14 கோடி வருடங்களாக இந்த டைனோசர்களின் ஆட்சியே நடை பெற்று வந்திருக்கிறது. இதோடு ஒப்பிடும் போது, இந்த உலகை மனிதன் பொறுப்பேற்று ஆளத் தொடங்கியிருக்கும் காலப்பகுதி, தூசுக்கு நிகரானது. இத்தனை குறுகிய காலத்தில் மனிதன் அழிந்து விடுவதா?

உயிரின வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் மிகவும் வெற்றிகரமான முறையில் மிக நீண்டகாலமாக உயிர்வாழ்ந்த உயிரினம் டைனோசர்கள் தான். மனிதனால் இவ்வளவு காலம் தாக்குப் பிடித்து வாழ்வது சாத்தியமில்லை. என்பதே மானிடவியலாளர்களின் பொதுவான அபிப்பிராயம். ஏனெனில் டைனோசர்கள் மனிதனைப் போல சுற்றுச் சூழலையும் இயற்கை அமைப்பையும் அழித்துக் கொண்டும் எதிர்த்துக் கொண்டும் வாழவில்லை.

டைனோசர்கள், ஆரம்பத்தில் எலி அளவிலும் முயல் அளவிலும் தான் தோற்ற அமைப்பைக் கொண்டிருந்தன. ஆனால், திடீரென்று என்ன நடந்ததோ தெரியவில்லை அவை அசுர வளர்ச்சிப் பெற்று ராட்சத உருவங்களாயின. சுத்தமான காற்று, தின்னத்தின்னக் குறையாத தாவர வளம், புதிய சத்துகளைக் கொண்ட புதிய தாவரங்களின் தோற்றமும் பெருக்கமும், கனிம வளங்களும் டைனோசர்கள் பெரு வளர்ச்சி பெறக் காரணங்களாக இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

டைனோசர்களில் மிகப் பெரிய டைனோசராக 'சிஸ்மோசரஸ்' அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் நீளம் 140 அடியாகவும், ஒரு தொன் எடை கொண்டதாக இருந்ததாக அறியப்படுகிறது. டைனோசர்கள் ஆரம்பத்தில் தாவர உண்ணிகளாகவே இருந்திருக்க வேண்டும். வேட்டையாடுவதற்கான போதிய உயிரினங்கள் வளர்ச்சி அடைந்த பின்னரேயே மாமிச பட்சணிகள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். டைனோசர்களோ ஒன்றை ஒன்று தாக்கிக் கொன்று உணவாகக் கொண்டிருக்கலாம். மற்ற வேட்டையாடும் விலங்குகளைப் போலவே இவையும் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த தாவர பட்சிணி டைனோசர்களை வேட்டையாடி உணவாகக் கொண்டிருக்க முடியும். டைனோசர்களில் பாலூட்டிகளும், அதே சமயத்தில் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் டைனோசர்களும் வாழ்ந்துள்ளன. முட்டையிடும் டைனோசர்களை டக்கில் டைனோசர்ஸ் என்று அழைக்கிறார்கள்.

நீங்கள் வீட்டில் வளர்க்கும் கிளி, மைனாக்கள் தோன்றுவதற்கு அடிப்படை ஆதாரம் இந்த டைனோசர்கள் தான். பறவைகளாக இருந்த டைனோசர்களே பின்னர் மரத்தில் இருந்து கீழிறங்கி டைனோசர்களாக பரிணாமம் பெற்றன. அதனால்தான் ஆரம்பகால டைனோசர்கள் தாவர பட்சணிகளாகவும் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவையாகவும் இருந்தன. டைனோசர்கள் காலத்துக்கு முன்னர் பறவை என்றொரு இனம் இருக்கவில்லை. டக்கில் டைனோசர் பெரிய வௌவால்கள் போன்ற தோற்றம் கொண்டவை. முட்டையிட்டு குஞ்சு பொரித்து பிறகு சிறகு முளைத்து வானில் பறந்தன. இன்று வௌவாலையும் கழுகுகளையும் டைனோசர்கள் பறவைகளை ஞாபகப்படுத்தும் பறவையினங்களாகும் எனவே பறவை இனத்தின் ஆதி மூதாதையர் இந்த டைனோசர்கள் தான். பெரிய உருவமும், பகாசுரப் பசியையும் கொண்ட இந்த டைனோசர்களின் தோற்றத்தை இயற்கையின் அற்புதம் என்றுதான் சொல்ல வேண்டும். தாவர பட்சிணி டைனோசர்கள், மிகவும் உயரமான மரங்களின் உச்சாணிக் கிளையையும் உடைத்து சாப்பிடும் அளவிற்கு அதன் கழுத்து நீண்டிருந்தது. பெரும் பசி கொண்ட இந்த மிருகங்களின் வேட்டையாடலுக்கு ஈடுகொடுக்க முடியாத மரம் செடி கொடிகள், தமது இனத்தை காப்பாற்றிக் கொள்ள இனப் பெருக்கத்தை பாரிய அளவில் மேற்கொள்ள பூக்களை உருவாக்கியதாகவும், பூக்களில் இருந்து விழுந்த விதைகள் செடி, கொடி, மரங்களாக வளர்ந்து டைனோசர்களின் பசிக்கு ஈடு கொடுத்ததாகவும் அதன் பின்னரே உலகில் பழங்களும், மரங்களும் அதிகமாக வளர்ச்சி பெற்றதாகவும், தாவரவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே பூக்கள் தோன்ற ஆதாரமாக டைனோசர்களே இருந்துள்ளன. டக்கில் டைனோசர் முட்டை பொரித்ததும் அதன் குஞ்சு 14 அங்குல நீளம் கொண்டிருந்தது. இந்தக் குஞ்சுகள் 4 ஆண்டுகளில் 20 அடி உயரமாக அசுர வளர்ச்சிக் கண்டதாம். டைனோசர்களின் கட்டுப்பாட்டில் உலகம் இருந்த போது, ஏனைய பாலூட்டிகள் தோற்றம் பெற வழி இல்லாமல் போய்விட்டது. எலி, முயல் போன்ற சிறிய உயிரினங்களே டைனோசர்களோடு உயிர் வாழ்ந்திருக்கின்றன. டைனோசர்கள் தொடர்ந்து வாழ்ந்திருந்தால் மனித இனம் மண்ணில் தோன்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்காது. 14 கோடி ஆண்டுகளை வெற்றிகரமாக வாழ்ந்து முடித்த டைனோசர்களுக்கு வளைந்து கொடுக்கும் தன்மை அதிகமாக இருந்திருக்கிறது. அதனால்தான், அந்தக் காலத்தில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி, எரிமலை சீற்றம், கடற்கோள், வி நட்சத்திரங்களின் தாக்குதல் உள்ளிட்டவைகளை தாக்குப் பிடித்திருக்கிறது. இழப்புகளுக்கு மத்தியில் தொடர்ந்து உயிர் வாழ்ந்திருக்கிறது. ஆறு கோடியே ஐம்பது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக டைனோசர்கள் அழிந்த போது சுமார் 12க்கும் குறைவான வகையைச் சேர்ந்த டைனோசர்களே உயிர்வாழ்ந்திருக்கின்றன. உலகெங்கும் பரவியிருந்த டைனோஸர்கள் அழிந்து போனதற்கு பலவித காரணங்கள் ஆய்வாளர்களினால் முன் வைக்கப்படுகின்றன.



எழுபதுகளில் மெக்ஸிகோவில் யுகடான் தீபகற்பப் பகுதியில் பெட்ரோலியம் தேடுதல் செய்து கொண்டிருந்த கிளென் பென் பீல்ட் (Glen Pen Field) என்பவர் சீக்ஷுலுப் (Chicxulub) எனுமிடத்தில் 180 கி.மீ விட்டமுடைய பள்ளம் ஒன்றைக் கண்டு, ஆய்வுகள் மேற்கொண்டார். அவற்றின் அடிப்படையில் அது ஒரு பெரிய விண்கல் தாக்கத்தால் உண்டானது என்பதையும் அந்த விண்கல் தாக்கம் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது என்பதையும் கண்டுபிடித்தார்.

(31ஆம் பக்கம் பார்க்க)

# உலகைக் கட்டியாண்ட டைனோசர்கள் எப்படி அழிந்தன?



# யாழ்ப்பாணத்தில் நசிந்துவரும் சுருட்டுக் கைத்தொழில்

இலங்கையில் சுயதொழில் முயற்சி என்று சொல்லப்படும் வகையில் அமைந்திருந்த சுருட்டுக் கைத்தொழிலானது வடக்கு, கிழக்கு பகுதிகளில் மட்டுமின்றி நீர்கொழும்பு, வியாங்கொட மற்றும் தென்னிலங்கையில் கூட ஒரு குடிசைக் கைத்தொழிலாகவே இயங்கி வந்தது. இந்தத் தொழில் வடபகுதியிலுள்ள பெரும்பாலான கிராமங்களில் பெருமளவு வருமானம் பெறக்கூடியதாக மிகவும் உயர்ந்த நிலையில் அமைந்திருந்தது என்றுதான் சொல்லவேண்டும். 1990ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிகளில் வடபகுதிக் கிராமங்களில் பெரும்பாலானவர்களின் வாழ்வாதாரத்திற்கு சுருட்டுக் கைத்தொழில் பேருதவியாக இருந்தது.

'சுருட்டுக் கொட்டில்' என்று சாதாரண பேச்சு வழக்கில் அழைக்கப்பட்டு வந்த சுருட்டுக் கைத்தொழில் நிலையங்கள் ஒரு கிராமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகையில் நான்கு, ஐந்து, ஆறு என்ற எண்ணிக்கையில் அமைந்திருந்தன என்பதுடன், அவற்றை நடத்திவந்தவர்கள் பெரும்பாலும் தங்கள் வீடுகளுடன் இணைந்த வகையிலேயே அமைத்திருந்தார்கள்.

யாழ் குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி, தீவுப் பகுதிகளில் குறிப்பாக வேலணை, சரவணை, புளியங்கூடல், மண்டைதீவு போன்ற இடங்களில் பெருமளவில் புகையிலைச் செய்கை இடம்பெற்று வந்துள்ளது. இவ்வகையில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுவந்த சிலர், உற்பத்தியுடன் நின்றுவிடாது சுருட்டுக் கைத்தொழில் நிலையங்களையும் ஆரம்பித்து நடத்தி வந்துள்ளனர். பெரும்பாலான புகையிலைச் செய்கையாளர்கள், அறுவடை செய்த புகையிலைகளை காயவைத்து பதப்படுத்தி பாவனைக்குரிய புகையிலையாக மாற்றி, சுருட்டுக் கைத்தொழில் நிலையங்களுக்கு விநியோகித்தும் வந்துள்ளனர்.

நீண்டகாலமாக புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு வருபவரும், சுருட்டுக் கைத்தொழில் நிலையத்தை நடத்தி வருபவருமான கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த செல்லப்பா இராஜதுரை ''செல்வம் கொழிக்கும் தொழில் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் சுருட்டுக் கைத்தொழிலை நடத்தி வருபவர்கள். ஒரு காலத்தில் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு டாக்டர், என்ஜினியர் போன்ற பெரும் பதவி வகிப்பவர்களை கணவன்மார்களாகப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுத்தது என்றால் இந்த தொழிலின் தனித்துவம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம்'' என்கிறார்.

''யாழ் குடாநாட்டில் சீவுகாம்பு, தோட்டுவட்டு என சொல்லப்படும் வட்டக்காம்பு ஆகிய இருவகையான புகையிலையை சந்தைப்படுத்துகிறார்கள். இவற்றுள் கோட்டு வட்டு புகையிலையே 'பாணிப்புகையிலை' தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. பாணிப்புகையிலை தயாரிப்பு கோண்டாவில் மற்றும் வடமராட்சி பகுதியில் பருத்தித்துறை, தம்பசிட்டி போன்ற இடங்களில் பெருமளவு இடம்பெறுகின்றன.

யாழ் குடாநாட்டில் கடந்த காலங்களில் இணுவில், கோண்டாவில், கொக்குவில், தாவடி, அச்செழு, ஊரெழு, உரும்பிராய், குரும்பசிட்டி, வசாவிளான், கோப்பாய், நீர்வேலி, அளவெட்டி, நவக்கிரி போன்ற வலிகாமம் பகுதியிலுள்ள பல கிராமங்களிலும், வடமராட்சி பகுதியிலும் மற்றும் தீவுப் பகுதியில் குறிப்பாக வேலனை, சரவணை, மண்டைதீவு, புளியங்கூடல் போன்ற இடங்களிலும் சுருட்டுக் கைத்தொழில் நிலையங்கள் அதிகமாக இயங்கி வந்தன. தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பு, காலி, மாத்தறை மற்றும் மலையகப் பகுதிகளில் யாழ்ப்பாணச் சுருட்டுக்கு பெரிதும் வரவேற்பு இருந்தது. முன்னர் யாழ்ப்பாணத்தில் கனகலிங்கம் சுருட்டு வை.சி.சி.சுருட்டு, யானை மார்க் சுருட்டு என்பன பலரது அபிமானத்தைப் பெற்றிருந்தன. மண்டான் புகையிலை, தாவடி புகையிலை, அச்செழு புகையிலை என்பன பலராலும் விரும்பிக் கேட்டு வாங்கப்படுவது வழக்கம்.

வடபகுதியின் புகையிலைச் செய்கையும் சுருட்டுக் கைத்தொழிலும் எண்பதுகளின் இறுதிப் பகுதியிலிருந்து படிப்படியாகவே குறைய ஆரம்பித்தன. போர்க்காலச் சூழ்நிலைகள் மற்றும் பாதைப் போக்குவரத்து தடை என்பனவற்றுடன் புகையிலை உற்பத்திக்குத் தேவையான பசளை, எரு மற்றும் கிருமிநாசினிகளின் விலை ஏற்றம், நீர் இறைப்புக்கான மண்ணெண்ணெய் மற்றும் மின்சாரக் கட்டணம் உயர்வு, கூலி அதிகரிப்பு மற்றும் சந்தைவாய்ப்பு குறைபாடு, உள்ளூரில் சுருட்டு பாவனை குறைவடைந்தமை, இளைஞர்கள் பலர் இத்தொழிலை பழகுவதற்கும், மேற்கொள்வதற்கும் முன்வராமை என்பவையே இவற்றின் வீழ்ச்சிக்கு காரணிகளாக அமைந்துவிட்டன என்று சொல்லலாம்'' என்கிறார் செ.இராஜதுரை.

முன்னைய காலத்தில் சுருட்டுக் கைத்தொழில் நிலையங்கள் அறிவுக்



படம்: கதிரவேல்

கூடமாகவும் விளங்கின என்பதற்கு எடுத்துக்காட்டாக செ.இராஜதுரை இவ்வாறு ஒரு தகவலை தருகிறார்.

''சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொழுது போக்கிற்கும், தகவல் அறிவதற்கும் வசதியாக, ஒவ்வொரு சுருட்டுத் தொழிலகங்கள் தோறும் ஒருவரை அமர்த்தி செய்திப் பத்திரிகைகளையும், மகாபாரம், இராமாயணம் போன்ற நூல்களையும் நாளாந்தம் வாசிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். இந்தப் பணியில் ஈடுபடும் இவருக்கு வெகுமதியாக சுருட்டு அல்லது சிறுதொகைப் பணத்தை வழங்கிவந்துள்ளார்கள்'' என்கிறார் இவர். முன்னைய காலத்தில் கல்வி அறிவில் பின் தங்கியவர்களின் புகலிடமாக விளங்கியது. பத்திரிகை மற்றும் நூல்கள் வாசிப்பு என்பன அங்கு தொழில் செய்து கொண்டிருந்தவர்களுக்கு கல்வியின் அருமையைத் தெரிந்து கொள்ள வைத்ததுடன், அறிவுசார் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. அதனால் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு கிரமமாக அனுப்பி அவர்கள் உயர்கல்வி வரை நடத்திச் செல்வதில் ஆர்வம் காட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அ.கனகசூரியர்

அளவெட்டிக்கு வடக்கு அரசொல்லை என்ற இடத்தில் சுருட்டுக் கைத்தொழில் நிலையமொன்றை நடத்தி வரும் சிற்றம்பலம் அருந்தவம் நாற்பது வருடகால தொழில் அனுபவம் கொண்டவர். இப்போது தனது வீட்டுக்கு அருகே சிறியதொழில் நிலையமொன்றை நிறுவியிருப்பதுடன், புகையிலையை கொள்வனவு செய்து சிலரை வேலைக்கு அமர்த்தி சுருட்டுத் தொழிலை செய்வித்து வருகிறார். இவரை சந்தித்தோம்.

''சிறிய அளவிலேயே எனது தொழிலை செய்து வருகிறேன். இங்கு ஏழுபேர் வேலை செய்கிறார்கள். சற்று வயதானவர்களை வைத்தே தொழில் செய்விக்க வேண்டியிருக்கிறது. இங்கு தயாரிக்கப்படும் சுருட்டுகளை நெல்லியடி, கொடிகாமம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம். இப்போதெல்லாம் புகையிலையொன்றை எழுபத்தைந்து ரூபா விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஒருவர் சாதாரணமாக ஒரு நாளில் ஐநூறு சுருட்டுகளுக்குமேல் சுற்றுவது சிரமமான காரியம். இதற்கான ஊதியமாக 450 ரூபா கொடுக்கிறோம். ஏனைய தொழில்களுடன் இதனை ஒப்பிடும் போது இது குறைவு என்றே சொல்ல வேண்டும். புகையிலையை அறுவடை செய்து பதப்படுத்தி, பாவணைக்குரிய புகையிலையாக தயாரிப்பதற்கு செலவு அதிகம். நாகரிக வளர்ச்சி சமூக மாற்றங்கள் காரணமாக இளவயதினர் இத்தொழிலைப் பழக முன்வரவில்லை. சுருட்டுத் தொழில் செய்வதை நிறுத்திக் கொள்ளும் படியும். தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாம். எனவும் தங்கள் பரம்பரை வழிவந்த மூத்தோரிடம் வேண்டுகோளும் விடுத்து வருகிறார்கள். இத்தகைய காரணங்களால் காலப்போக்கில் புகையிலைச் செய்கை மட்டுமல்ல, சுருட்டுத் தொழிலும்கூட வெகுவாகக் குறைந்துவிடலாம் அல்லது அற்றுப்போய்விடலாம்'' என்கிறார் அருந்தவம்.

சுருட்டுகளுக்காக பயன்படுத்தப்படும் புகையிலையை விட 'பாணிப் புகையிலை' என இன்னொரு வகையான புகையிலையும் தயாரிக்கப்பட்டு வருகிறது. சிறிது காலம் பாணிப்புகையிலைத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த கோண்டாவில் இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் இது பற்றி சொல்வதைப் பார்ப்போம்.

''பாணிப் புகையிலையை சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுத்து வெற்றிலையுடன் சேர்த்து பயன்படுத்துவார்கள். சர்க்கரையும் கோதுமை மாவும் கலந்து நீர்விட்டு காய்ச்சுவதன் மூலம் பெறப்படும் பாணியில் பதப்படுத்தப்பட்ட புகையிலையை

(31ஆம் பக்கம் பார்க்க)



ஐம்பதுகளின் குறிப்பிடத்தக்க நடிகையாக விளங்கியவர் பி.பானுமதி. நடிகையாகவும் பாடகியாகவும் திகழ்ந்த பானுமதி நடித்த காதல் காட்சிகளில் கதாநாயகன் எட்ட இருந்துதான் நடிக்கவேண்டும். பரணி ஸ்டுடியோவை நடத்தி வந்த பானுமதி திரையுலகில் கௌரவம் மிக்க நடிகையாகவே திகழ்ந்தார்.



குருவும் சிஷ்யனும்

இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்



நூறு வருடங்களுக்கு முன்னர் பம்பலப்பிட்டி காலி வீதி எப்படி இருந்தது என்பதை முதல் படமும் அதன் இன்றைய தோற்றத்தை இரண்டாவது படமும் சித்தரிக்கிறது. எதை நீங்கள் விரும்புகிறீர்கள்?

### மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்

# மரண வீடாக மாறிய மங்கள வீடு

ஏ. மதுரை வீரன்

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

அது தனது மகள் வயதுக்கு வந்துவிட்டதை ஊரெல்லாம் சொல்லும் சுபாவம் நகர்ப்புறத்தை விட கிராமப்புறத்திலேயே அதிகம். கிராமங்களில் இதற்கென ஒரு தனி கொண்டாட்டமே நடத்துவார்கள் கையில் கொஞ்சம் பசை இருந்தால் ஊரையெல்லாம் கூட்டி விருந்தும் வைப்பார்கள்.

கண்டிப் பகுதியில் இருந்த அந்த கிராமத்திலும் இந்த பழக்கம் நினைவு தெரிந்த நாள் முதல் நிலவி வந்தது. அந்த கிராமத்தில் பத்மாவதி நல்ல வசதி படைத்தவள் கிராமத்தின் மையப் பகுதியில் அமைந்திருந்த சில்லறைக் கடைக்கு சொந்தக்காரி அவள்.

அந்தக் கிராமத்தை பொறுத்தவரை அங்கு வசித்தவர்களில் 90 சதவீதத்தினர் அன்றாடங் காய்ச்சிகள். அவர்களுக்கு அந்த சில்லறைக்கடை ஒரு மொத்தக் கடையாகவே இருந்தது. மாதம் முழுவதும் சில்லறையாக பொருட்களை வாங்கும் மொத்த வாடிக்கையாளர்கள் அவர்கள். இதன் காரணமாக பத்மாவதிக்கு அந்த ஊரில் நல்ல செல்வாக்கு. அந்த செல்வாக்கை காசாக்கிப் பார்க்கும் நப்பாசையில் தனது மூத்த மகள் சுரங்கனி வயதுக்கு வந்ததை ஊருக்கெல்லாம் விருந்து வைத்து கொண்டாட வேண்டும் அதன் மூலம் நாலுகாசு பார்க்கவேண்டும் என்ற ஆவலில் தடபுடல் விருந்துக்கு ஏற்பாடு செய்தாள் பத்மாவதி.



வெறுமனே சாப்பாடு போட்டு ஊரார் வயிற்றை நிரப்பினால் மட்டும் போதாது. கெவுன், கொகிஸ், அல்வா, அக்கல என்று திண் பண்டங்களை பரப்பி வைத்து அதனை தின்று தீர்க்கச் செய்து அந்த ஊராரை திருப்திப்படுத்த வேண்டும் என்பது அவளது ஆசைகளில் ஒன்று.

மகளின் திருமணத்துக்கு இன்னும் காலமிருந்தது. நான்கைந்து வருடங்கள் காத்திருக்க வேண்டும். அதுவரை பொறுமையாக காத்திருக்க பத்மாவதியால் முடியவில்லை. அவள் 'இப்போதே' இந்த நிமிடமே என்ற ரகம். எனவே தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள மகளின் வயதுக்கு வந்த நிகழ்வையே பயன்படுத்திக்கொள்ள விழைந்தாள் பத்மாவதி.

குறிப்பிட்ட நாள் வந்தது. அதற்காக பச்சை ஓலை வேய்ந்த மண்டபம் அதற்குள் 20 மேசைகள், அலங்கார விரிப்புகள் லந்தர் லாம்புகள், அலங்கார ஜோடனை என்று மாறியது பத்மாவதியின் கடைக்கு முன்னால் இருந்த தென்னந்தோப்பு.

பகலில் ஊர் மக்கள், இரவில் ஊர் பிரமுகர்கள் என்று இரு நேர சாப்பாடு. பகலில் ஸ்பெஷல் இரவில் அதி ஸ்பெஷல் இதுதான் பத்மாவதியின் விருந்து ஸ்டைல்.

பகல் விருந்துக்கு ஏகப்பட்ட கூட்டம்.

வந்தார் வராதார் என்று எவரேனும் மிஞ்சவில்லை. பத்மாவதி வீட்டில் வைத்த விருந்து என்று ஒரு புதுக்குறளே பாடலாம். அந்த அளவுக்கு தடபுடலாக நடந்து முடிந்தது பகல் விருந்து.

பகல் விருந்து முடிந்த அடுத்த அரை மணி நேரத்துக்குள் இரவு விருந்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பித்தன.

முற்றத்தில் இருந்த ரபான், பாவம் அடி வாங்கி வாங்கியே கத்திக் கொண்டிருந்தது. சுற்றியிருந்த 10, 12 பெண்கள் அந்த ரபானை வாங்கு வாங்கு என்று வாங்கிக் கொண்டிருந்தனர்.

ஊருக்கெல்லாம் வெற்றிலை வைத்து பத்மாவதி வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தது அந்த ரபான் சப்தம். சுற்றி இருந்த பெண்களின் தாள சுதியில் மயங்கி நூற்றுக்கு மேற்பட்டோர் அந்த ரபான் 'விளையாட்டை' ரசித்துக் கொண்டிருந்தனர்.

பத்மாவதியின் சமையலறையில் இரவு விருந்தின் தயாரிப்பு பெரும் பரபரப்பாக இருந்தது.

எனினும் அடுத்த ஊரில் இருந்து ரபான் அடிக்கும் விற்பன்னிகள் அங்கு வருகை தந்ததையடுத்து அங்கிருந்த அனைவரும் (சமையற்காரர்கள் உட்பட) மண்டபத்துக்கு முன் இருந்த முற்றவெளியில் குவிந்தனர்.

ரபான் அடித்தல் போட்டி ஆரம்பமாகியது. வாசிப்பு லாவகம், வாசிப்பவர்களின் கண்ணசைவு, கழுத்தசைவு ஆகியவற்றை நேரில் பார்த்தால் தான் ரசிக்கலாம். எனவே தான் அங்கு கூட்டம் குழுமியது.

இதே நேரம்...

சமையலறையில் இருந்த ஒரு பெரிய தாச்சியில் நிறைய மீன் பொரிந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில்தான் பத்மாவதியின் சின்னமகள் சுரேகா அங்கு சென்றாள். சரியாகச் சொல்வதென்றால் மீன் பொரியலின் வாசம்தான் அவளை அங்கு இழுத்து வந்தது.

அடுத்த நிமிடம் வேகமாக வெளியே ஓடினாள் ரபான் திடலில் அம்மாவைத் தேடி எதையோ காதில் கூறினாள்.

'எனக்கு வரமுடியாது. சிகப்பு போத்தலில் எண்ணெய் இருக்கும். எடுத்து ஊற்று' என்று சுரேகாவின் காதில் ஓதினாள் அம்மா பத்மாவதி.

மீண்டும் சமையலறைக்கு ஓடினாள் சுரேகா. சுற்று முற்றும் பார்த்தாள் சிகப்பு போத்தல்...

எங்கே... எங்கே?

கீழே பார்த்தாள்.

லீட்டர் சோடா போத்தலொன்று கீழே இருந்தது. அதில் அரைவாசிக்கு எண்ணெய் இருந்தது.

'அப்பாடா போத்தல் இங்கிருக்கிறது. நான் எங்கெங்கோ தேடிக் கொண்டிருக்கிறேனே' என்று கூறிக் கொண்டே சிகப்பு போத்தலில் இருந்த எண்ணெயை தாச்சிக்குள் ஊற்றினாள்.

தாச்சியில் கொதித்துக் கொண்டிருந்த தேங்காய் எண்ணெயில் போத்தலில் இருந்த மண்ணெண்ணெய் விழுந்த அடுத்த கணமே...

'குபீர்'

கொழுந்து விட்டது நெருப்புக் கோளம் சுரேகாவையும் எரித்துக் கொண்டு...

'அம்மா' என்று சுரேகா அலறிய சத்தம் ரபான் சத்தத்தையும் மீறி ஒலித்தது.

நெருப்புக் காயங்களினால் ஏற்பட்ட மரணம் என்று சுரேகாவின் மரண அறிக்கையில் மரண விசாரணை அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.





# பழிக்குப் பழி

செ. குணரத்தினம்

ஒரு வாரம் கழிந்தும் கோபித்துக் கொண்டு தாய் வீடு சென்ற சுந்தரி இன்னும் திரும்பவில்லை. தனிமையிலேயே அரவிந்தனின் இரவுகள் கழிந்து கொண்டிருந்தன.

கடந்த ஓராண்டுகாலமாக அவன் இப்படித் தனிமையில் சுவருக்குப் பக்கத்தில் படுத்துறங்கியதில்லை. சுந்தரியின் அரவணைப்பில் தூங்கியவனுக்கு ஒவ்வொரு இரவும் பயங்காட்டி அவனைக் கொல்லவருவது போலவே தோன்றியது. சுந்தரி திரும்பி வராமல் அப்படியே நின்று விட்டால் அதை நினைக்கவே அவன் இதயம் வெடித்து விடும் போலிருந்தது.

ஆத்திரத்தில் சுந்தரியின் கன்னத்தில் அறைந்ததற்காக பிள்ளையையும் தூக்கிக் கொண்டு, தாய் வீட்டுக்குப் போவாளென்று அரவிந்தன் எண்ணவேயில்லை. சே, என்ன பெண்ணிவள்?

பக்கத்திலிருக்கும் சிவலிங்கம், அவன் மனைவிக்கு நேரகுசி போட்டுக் கொண்டு தினமும் அடிக்கவில்லையா? அவள் ஓடிப் போனாளா? குடித்து வெறியுடன், அவன் புரியும் அட்டகாசங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு அவள் சீவிக்கவில்லையா? அவளைப் போல வேறு யாராகவும் ஏன் சுந்தரியாக இருந்திருந்தால் கூட பொலிஸ், கோடென்று போயிருப்பாள்!

''என் மனைவி கண்ணகியை விடவும் பொறுமை மிக்கவள்!'' என்று நண்பர்களிடம் சொல்லிப் பெருமைபட்டதற்காகவா ஒரு அறையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் ஓடிப் போனாள்?

சுந்தரி அடக்கமானவள், பொறுமை மிக்கவள், படித்தவள், பண்புள்ளவள், அழகானவள், கணவனே கண்கண்ட தெய்வமென்று மதித்து வாழக்கூடியவள்! என்றெல்லாம் சுந்தரியைப் பற்றி அவளுடைய பெற்றோர்கள் மாத்திரமல்ல; ஊரவர்களே அரவிந்தனுக்கு நற்சாட்சிப்பத்திரம் கொடுத்திருந்தார்களே! எல்லாமே கள்ளச் சேட்டிபிக்கட்தானா?

அப்படி என்னதான் அவன் பாரதூரமாக சொல்லிவிட்டான்?

''குழம்புக் கறிக்குள் சரியான உப்பு.. உனக்கு எப்படிச் சோறுகறி ஆக்குவதென்றே தெரியாது; எங்கம்மா உன்னைப் போல ஹோம்சயன்ஸில் பெரிசாப் பாஸ் பண்ணாமலேயே எவ்வளவு சோக்கா ஆக்கித் தருவா தெரியுமா?'' என்று அரவிந்தன் சொல்லிவிட்டால் அதற்கு அவள், ''நான் ஆக்கிற சோறு கறி புடிக்காட்டி உன்ர கொம்மாவப் போய்க்கட்டித்துக்கிட!'' என்று சொல்லலாமா?

அவன் உண்மையைத்தானே சொன்னான்! அதுவும் ஒருவருடம் கழித்து! இவ்வளவு காலமும் பட்டும் படாமலும் சொல்லி வந்திருக்கிறான். ஆனாலும் அவளுடைய சமையலில் எதுவித மாறுபாடும் ஏற்படாமலிருப்பதைக் கண்டு, இனிமேலும் மனதில் வைத்துக் கொண்டிருக்க முடியாமல்தானே வெளிப்படையாகவே சொன்னான்! அவன் எவ்வளவு பொறுமைசாலி. அதுவும் அன்று காரியாலயத்தில் வைத்து காரியாலய அதிகாரி ஏசாமல் விட்டிருந்தால் அதையும் சுந்தரியிடம் கேட்டிருக்கவே மாட்டான், ஆத்திரத்தில் அவனையும் மறந்து கேட்டு விட்டான். இது பெரியதவறா? அவன் அப்படிக் கேட்கக் கூடாதா? வாய்க்கு உருசியாகச் சாப்பிட வேண்டுமென்று அவனுக்கு மாத்திரம் ஆசையிருக்காதா?

பக்கத்து வீட்டுக்காரன் சிவலிங்கம் சோற்றுக்குள் ஒரு கல் கிடந்தாலே சோற்றுக் கோப்பையை வேலிக்கு மேலால் பறக்கும் தட்டு விடுவதையுமல்லவா அவன் மனைவி பொறுத்துக் கொண்டிருக்கிறாள்.

''கோவிக்காதீங்க இண்டைக்குக் கறிக்கு உப்புக் கொஞ்சம் கூடித்தான் போயித்து, நாளையிலயிருந்து நல்லா ஆக்கித்தாறன்!'' என்று சுந்தரி சொல்லியிருந்தால் ஒரு பிரச்சினையும் வந்திருக்காதே! என்னதானென்றாலும் குடும்பப் பெண்களுக்கு இப்படி மூக்கு நுனியில் கோபம் வரவே கூடாது.

குடும்ப வாழ்க்கையில் சொல்லிக் கொள்ளாமல் இப்படிப் பிரச்சினைகள் வருவது இயல்புதான். அதையெல்லாம் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக நில்லாமல், அஜஸ்ட் பண்ணிக் கொள்வதுதான் இரண்டுபேருக்குமே அழகு.

இப்படியான பெண்கள் இன்றும் வாழ்வதால்தானே கண்ணகி, சீதை திரௌபதைக்குக் கோவில்கள் கட்டியிருப்பதைப் போல இவர்களெல்லாம் கோவில்கள் இல்லாமல் அழிந்து போகிறார்கள்.

அரவிந்தன் சுந்தரிக்குக் கன்னத்தில் அறைந்தபோது ஒருவிரல் உதட்டில் பட்டுச் சாடையாக இரத்தம் கசிந்ததும், அதைத் தொட்டுபார்த்துவிட்டு, ''இந்த ரத்தத்திற்கு ரத்தம் நானும் எடுக்காமல் விடமாட்டேன்!'' என்று அவள் தலைவிரி கோலமாக நின்றதும் அரவிந்தனால் இலேசில் மறந்துவிடக் கூடியதா?

இப்படியெல்லாம் ஏச்சுவாங்கி, அக்கம் பக்கத்வர்களுக்கு கூட முகம் கொடுக்க முடியாமல் தலை குனிந்து வாழ்வதற்காகவா அவன் தன்னுடைய ஏழைப் பெற்றோர்களையும் சகோதரிகளையும் பிரிந்து வந்து இவளை மணம் முடித்தான்?

சுந்தரி ஓரளவு வசதியுள்ள நல்ல குடும்பத்தவள் என்பது மாத்திரமல்ல அவளுக்கு மூன்று நான்கு ஆண் சகோதரர்களும் இருக்கிறார்கள். சுந்தரியை மணம் முடிப்பதால் அவர்களின் உறவும் தனக்கு கிடைக்கும். அது மாத்திரமல்ல வாழா வெட்டியாகவிருக்கும் தனது தங்கைகளுக்கும் நல்ல வாழ்வு கிடைக்கும் என்று நம்பித்தானே அவன் அவளை மணம் முடிக்க ஒப்புக் கொண்டான். இதெல்லாம் சுந்தரிக்கும் தெரியும் தானே!

கலியாணம் முடியுமட்டும் ஏதேதோ ஆசை வார்த்தைகளையெல்லாம் அள்ளிக் கொட்டிவிட்டு காரியம் முடிந்ததும் நாயிலிருந்து உண்ணி கழன்றதைப் போல எல்லோரும் ஒதுங்கிக் கொண்டதையும், தலைப் பிள்ளை பிறந்ததற்குக் கூட ஒருத்தராவது வந்து எட்டியும் பார்க்காமல் இருந்ததையும் மனதில் போட்டுக் கொண்டு வாழ்ந்தவன்தானே அரவிந்தன்! ஏன் அவனுக்கு இதையொரு சாட்டாக வைத்துக் கொண்டு சுந்தரியோடு சண்டை பிடித்துப் பிரிந்து போகத் தெரியாதா?

இதெல்லாம் குடும்பத்துக்கு அழகில்லை. குடும்பமும் பிரியாமல் பெற்றோர் சகோதரிகளின் வாழ்வும் கெட்டழிந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தானே எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருந்தான்! இதை இவள் சுந்தரி வேறு விதமாகவல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறாள்...

சுந்தரியின் சகோதரர்கள் ஊர்ச்சண்டியர்கள். இவர்கள் யாருக்காவது அடித்தால் அதற்கு எதிராக எவரும் சாட்சி சொல்ல முன்வரமாட்டார்கள். அப்படி முன்வந்தால் அடுத்தநாள் அவர்களுடைய மண்டை உடையும் அல்லது கைகால் முறியும். இப்படி இவர்களது சனத்திற்கு ஊரெல்லாம் பயந்து இருப்பதைப் போலத்தான் அரவிந்தனும் பேசாமல் இருக்கிறான் என்று அவள் தவறாக நினைத்திருக்க வேண்டும். அதனால் தான் அவன் அறையை வாங்கிய கையோடு, இரத்தத்துக்கு இரத்தம்! என்று சாபம் போட்டுக் கொண்டு, தாய் வீட்டுக்கு ஓடினாள்.

''திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகவும் தாரமும், கல்வியும் தலைவிதிப்படிதான் நடக்குமென்றும் சொல்லக் கேட்ட அரவிந்தனுக்கு, திருமணம் நரகத்திலும் நிச்சயிக்கப்படுகின்றதா? என்று யோசிக்கத் தோன்றியது.

இவ்வாறெல்லாம் மூளையைக் குழப்பிக் கொண்டு அரவிந்தன் கட்டிலிலே கிடந்து உருண்டான். எப்போது தூங்கினான் என்பதே அவனுக்குத் தெரியவில்லை.

பளபளத்து விடிந்தது.

வேலைக்குப் போகும் அவசரத்தில் மளமளவென்று காரியங்களை முடித்துக்கொண்டு கிளம்பினான். வேலை முடிந்து வீட்டுக்கு வர அன்று சற்றுத்தாமதமாகி விட்டது. தனிச்சீவியம் தானே! எப்போது வந்தால்தான் என்ன? என்று எண்ணிய படி வரும்போது வீட்டுக்கு முன்பாக சுந்தரியும், அவளுடைய சகோதரர்களும் நிற்பதைக் கண்டதும் அவனுக்கு நெஞ்சுக்குள் திக் கென்றது. அவனையுமறியாமல் உடல் லேசாக நடுக்கமெடுத்தது. என்றாலும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எதையும் எதிர்க்கும் துணிச்சலோடு சைக்கிளை விட்டிறங்கி நின்றான்.

''இவன்தானா சுந்தரி உனக்கு அடிச்சவன்?'' சுந்தரியின் மூத்த சகோதரன் அரவிந்தனைச் சுட்டிக் காட்டி, ஆவேசத்தோடு கேட்டான்.

''இவன்தான் இவனே தான்!''

அடுத்த கணம் ''பளார்! பளார்!'' என்று சுந்தரியின் இருகன்னங்களிலும் அறைகள் விழுந்தன. அவள்தடுமாறிப் போனாள்.

''என்ன திமிர் உனக்கு! என்னதான் கொடுமை செய்திருந்தாலும் கணவனை இவனென்று சொல்லுமளவுக்கு நீயென்ன பெரிய மனிசியாப் பொயித்தியா? போ! போய் அத்தான்ட காலில விழுந்து மன்னிப்புக் கேள்! கலியாணம் முடிச்ச ஒரு பொண்ணுக்கு அப்பா, அம்மா, அண்ணன், அக்கா எல்லாமே கணவன்தான்''.

சுந்தரி ஓடிப்போய் அரவிந்தனின் கால்களில் விழுந்தாள். பல எதிர்பார்ப்புகளோடு புதினம் பார்க்க நின்ற அயலவர்களுக்கு இந்த முடிவு 'சப்' பென்று போய் விட்டது. மின்சாரம் தடைப்பட்டு சினிமாக் கொட்டகைக்குள்ளிருந்து வெளியேறிய ரசிகர் கூட்டம் போல அவரவர் வீடுகளுக்குச் சென்றார்கள்.




ஜெ.எம்.அஜுஞ்சன்


ஜாஹிர் - அஸீமா, புத்தளம்



மனைவி: என்னங்க, சொர்க்கத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ முடியாதாமே!


கணவன்: அதனாலதாண்டி அது சொர்க்கம்.

- ரஸ்வி, புத்தளம்




கண்டுபிடிக்க முடியாவிட்டால் புரட்டுங்கள் 28ஆம் பக்கத்தை...

# போட்டுத் தாக்கும் எழில்!



எழில் வேந்தன் ஒரு திறைமைசாலி கருத்துவேறுபாடு இருக்க முடியாது. ஒரு சமயத்தில் சக்தி எப்.எம். மை பாராட்டி சீராட்டி வளர்த்தெடுத்தவர். அவர் இப்போது எங்கே இருக்கிறார்? இருக்கலாமா? என்றெல்லாம் சிலர் கதைத்தாலும் அந்த மனிதர் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு முடிந்தவரை நன்றாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தேசிய சேவையில் காலை வேளையில் அவர் தன் சகாவுடன் இணைந்து நடத்தும் நிகழ்ச்சி கேட்கும்படியாக இருக்கிறது. அரசாங்க ரேடியோ தானே என்று அலட்சியமாக பலர் மீட்டரை திருப்பாமால் இருந்தாலும். திருப்பித்தான் ஒரு தடவை பாருங்களேன் என்று இங்கே சொல்லி வைக்க வேண்டியிருக்கிறது.

அது ஒரு ஊதுகுழல் நிகழ்ச்சியாக இருக்கும் என்று பலர் மெத்தனம் காட்டுவதில் நியாயம் இருக்கலாம். ஆனால் எழிலின் காலை நேர நிகழ்ச்சியை ஒரு தடவை கேட்டுத்தான் பாருங்களேன்!

அரச வானொலியாக இருந்தாலும் சிலர் அன்றைய தினம் விவாதப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளின் மறுபக்கத்தைக் கடுமையாகவும் வெளிப்படையாகவும் விமர்சிக்கிறார்கள். அரசுக்கு எதிரான பார்வையாகவும் சில சமயங்களில் அது அமைந்து விடுகிறது. ஊதுகுழல் என்ற பொதுவான அந்த மனப் பான்மை தவறு என்கின்ற மாதிரி எழில் பேசுகிறவர்களுக்கு இடம் அளிக்கிறார். இது ஒரு ஆரோக்கியமான போக்கு. எழில் துணிச்சலாக நிகழ்ச்சியை நடத்துகிறார் என்பது பரவலாகத் தெரிய வந்தால் அந்த அலைவரிசை கேட்கும் நேயர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இந்தத் துணிச்சலைப் பாராட்டுவோம்.

இதே போல பத்திரிகை வாசிக்கும் போதும் இருவருமாகச் சேர்ந்து அதை ஜொலியாகச் செய்கின்றனர். குட்டு வைக்க வேண்டிய இடத்தில் குட்டும் வைக்கின்றனர். சமீபத்தில் ஒரு பத்திரிகையை வாசிக்கும்போது அதில் எழுத்து மற்றும் வசனப் பிழைகள் இருக்கக் கண்டு அது பற்றி குறிப்பிடவும் செய்தனர்.

''நாங்கள் பிழை விட்டால் பரவாயில்லை. காற்றில் கரைந்து விடும், ஆனாலும் பிழை பிழைதான். இதே பிழைகள் அச்சு ஊடகங்களில் நிகழும் போது அது நிலைத்து விடுகிறது. எனவே அச்சுத் தாள்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

கவனமாக இருக்க வேண்டும்தான்.

# எப்.எம்.சேவைகளும் ஈயடிச்சான் கொப்பியும்

சூரியன், சக்தி, தென்றல், வசந்தம், வெற்றி ஆகிய வானொலிகள் இப்போது தமிழ் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றவை. சூரியனும் சக்தியும் நேயர்களுக்கு பழகிப் போனவை. இவற்றுக்கு மத்தியில் அலை எப்.எம். இப்போது களத்தில் குதித்து ஆறு மாதங்களாக சவாலான நிகழ்ச்சிகளை, முன்னோட்டமாக நடத்திக் கொண்டிருக்கிறது. விரைவிலேயே, புதுமை, இளமை, திருப்புமுனை என்று புதுப்புது அனுபவங்களை நேயர்களுக்கு தருவோம் என தினமும் சத்தியம் செய்கிறது.

சூரியனும் சக்தியும் அசைக்க முடியாத அலைவரிசைகள் தான். ஆனால், நீங்கள் தென்றலைத் தவிர்த்து ஏனைய, அலை உட்பட, அலைவரிசைகளை செவிமடுப்பீர்களானால் அனைத்துமே அசப்பில் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. தொடர்ந்து எல்லா நிகழ்ச்சிகளும் தொலைபேசி நிகழ்ச்சிகளாகத்தான் இருக்கின்றன. ஆணும் பெண்ணும் வளவளவென ஓயாமல் தமக்குள் பேசிச் சிரிக்கிறார்கள். ஜோக் சொல்லி சிரிக்கிறார்கள். செல்லமாக ஒருவரை ஒருவர் வசைபாடுகிறார்கள். தொடர்பில் வரும் நேயர்களிடம் ஜோக் அடித்து கிண்டலும் பண்ணுகிறார்கள். இரவு நிகழ்ச்சியானால் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்? கணவன் எங்கே போனார்? தனியாகவோ இருக்கிறீர்கள்? என்றெல்லாம் பெண்களிடம் வம்படிக்கிறார்கள். தனியாகவா இருக்கிறீர்கள்? நான் வரலாமா? என்கிற அளவுக்கும் சில சமயம் 'கஸ்டமர் ரிலேஷன்ஷிப்' எல்லை மீறவும் செய்கிறது. இன்றைய காலக்கட்டத்தில் தனியாக இருக்கும் பெண்ணிடம் தனியாகவா இருக்கிறீர்கள்? என்று கேள்வி கேட்டு அந்தத் தனிமையை பகிரங்கப்படுத்துவது நல்ல அணுகுமுறை அல்ல. அந்தக் கோல் எங்கிருந்து வந்தது என்பதை மூன்றாம் நபரால் அடையாளம் காணக்கூடிய காலம் இது. இதைப் படிக்கும் அறிவிப்பாளர்கள், நிகழ்ச்சி அமைப்பாளர்கள் மற்றும் இவர்களை ஆட்டுவிப்போர் நினைக்கலாம், எழுதுவது சுலபம் 24 மணித்தியாலமும் பேசுவது லேசுப்பட்ட வேலையா என்ன? என்று.

உண்மைதான். ஆனால், அனைத்து செனல்களிலும் அனைத்து அறிவிப்பாளர்களும் உட்கார்ந்து கொண்டு ஒரே மாதிரி வம்படித்துக் கொண்டிருந்தால், நேயர்கள் களைத்துப் போக மாட்டார்களா என்பதுதான் எமது கவலை! எவ்வாறான வித்தியாசங்களைப் புகுத்துவது என்பதை இந்த அலைவரிசைகாரர்கள் மூளையைக் குடைந்து புதுசு புதுசாகக் கண்டு பிடிக்க வேண்டும். இங்கே சொல்ல வந்த விஷயம் ஆளுக்கு ஆள் ஈயடிச்சான் கொப்பி பண்ணிக் கொண்டிருந்தால் நேயர்கள் களைத்துப் போய் ரிமோட்டைக் கையில் எடுப்பார்களே என்ற கவலைதான் எமக்கு!

# என்ன நடந்தது புதிய தலைமுறைக்கு?

புதிய தலைமுறை என்ற புதிய தொலைக்காட்சி அலைவரிசை தமிழகத்தில் சில மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. குறுகிய காலத்தில் அதன் செயற்பாடு, அணுகுமுறை, புதிய தொழிநுட்பம் மற்றும் முயற்சி என்பன அந்தத் தொலைக்காட்சியை உச்சாணிக் கொம்புக்கே உந்தித் தள்ளியது. குறுகிய காலத்தில் ஏராளமான விளம்பரங்களுடன் புதிய தலைமுறை வீறுநடை போடத் தொடங்கியது. பல சன், கலைஞர் ரசிகர்கள் புதிய தலைமுறை நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தொடங்கினர். கலைஞர் குடும்ப டி.வி. சனல்களுக்கு புதிய தலைமுறை சவாலானது.

இப்போது சன் டிரெக்ட் செய்மதி அலைவரிசையில் இருந்து புதிய தலைமுறையைத் தூக்கி விட்டார்கள். இதற்கு சில தினங்களுக்கு முன்னரேயே புதிய தலைமுறையில் ஒரு விவாத நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் தொலைக்காட்சி அலைவரிசை சேவை வழங்கும் பெரிய நிறுவனங்கள் வஞ்சகத் தன்மையுடன் நடந்து கொள்வதாகவும், தனது சொந்த அலைவரிசைகளுக்கு சவாலாக விளங்கக் கூடிய அலைவரிசைகளை முடக்கும் நோக்கில் செயல்படுவதாகவும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் விமர்சனங்களை முன்வைத்தார்கள்.

இது நடைபெற்று இரண்டு நாட்களில் சன் பெக்கேஜில் இருந்து புதியதலைமுறை தூக்கப்பட்டு விட்டது. இப்படித்தான் தமிழக சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் தேர்தலின் பின்னர் கெப்டன் டி.வி.யும் சன் பெக்கேஜில் இருந்து நீக்கப்பட்டுவிட்டது. என்ன சமரசம் நிகழ்ந்ததோ தற்போது கெப்டன் டி.வி மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. (புதிய தலைமுறை இல்லாதது வருத்தத்துக்குரியது தான்)

- ஜீனோதயன், சாவகச்சேரி

# பாராட்டுகள் உமா வரதராஜன்!

## பழைய பாடல்களை யார்தான் கேட்க விரும்புவதில்லை?



தமிழகத்தில் முரசு டி.வி, சன் லை.்.ப் என இரண்டு அலை வரிசைகள் 24 மணி நேரமும் பழைய பாடல்களை இதனால்தானே ஒளிபரப்பி வருகின்றன.

கண்மணிச் சேவையில் ஞாயிறு இரவு ஏழு முதல் எட்டு மணிவரை பழைய பாடல் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாகி வருகிறது. முன்னர் விஸ்வநாதன் பழைய பாடல்களை துணை விவரங்களுடன் ஒளிபரப்பி வந்திருக்கிறார். இப்போது உமா வரதராஜன் இந்த நிகழ்ச்சியை திறமையாக நடத்தி வருகிறார். பாராட்டுகள் உமா வரதராஜன்!

ஒவ்வொரு பாடல் ஒளிபரப்புக்கும் முன் அப்பாடல் தொடர்பாக நிறைய தகவல்களை அவர் அளிப்பதும் சில சமயம் வேடிக்கையாக பேசுவதும் ரசிக்கும் படியாக இருக்கிறது. படகோட்டி பாடல் ஒன்றை ஒளிபரப்புதற்கு முன்னர் இந்தப் படகோட்டி எந்தவொரு காட்சியிலும் மீன் பிடித்ததாக காட்டப்படவே இல்லை என்றும் அழகிய புதிய ஆடைகளை அந்த ஏழை படகோட்டி (எம்.ஜி.ஆர்) அணிந்து வருவதாகவும் நகைச் சுவையாகக் குறிப்பிட்டது ரசிக்கும் படியாக இருந்தது. படம் வெளிவந்த காலத்தில் தமிழ்வாணன் தன் கல்கண்டு இதழில் இதை அப்போது குறிப்பிட்டிருந்தது ஞாபகத்துக்கு வருகிறது.

உமா தன் நிகழ்ச்சியை திறமையாகக் கையாண்டு வருவது உண்மை. ஆனால் பக்கம் பக்கமாக எழுதி வாசிப்பதுதான் நெருடலாக இருக்கிறது, மனசுக்குள் உள்வாங்கி பேசினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

# பழைய பாடல்களை ஆராதிக்கும் Sun Life, முரசு டி.வி அலைவரிசைகள்

முன்னர் இலங்கை வானொலியில் காலைவேளையில் பழைய தமிழ்ப் பாடல்களை ஒலிபரப்புவார்கள். இரவு பத்து பத்தரைக்கும் பழைய பாடல்கள் ஒலிக்கும். அவை புத்துணர்வையும் இரவின் தாலாட்டையும் நமக்குத் தந்தன. பழைய பாடல்களுக்கு என்றைக்கும் ஒரு மவுசு இருக்கத்தான் செய்கிறது. தமிழகத்தில் செனல் கலாசாரம் வந்த பின்னர் பழைய பாடல்களை ஒளி வடிவிலும் ஒளிபரப்ப ஆரம்பித்தன. குறிப்பாக மெகா மற்றும் வசந்தம் டி.வி. களை உதாரணமாகச் சொல்லலாம்.

இச் சமயத்தில் தான் சக்தி டி.வி. இரவு வேளைகளில் பழைய தமிழ்ப் பாடல்களை ஒளிபரம்பும் ஒரு நிகழ்ச்சியை ஆரம்பித்தது. எல்ரோய் கணாதீபன் கூட்டணியாக அந்த நிகழ்ச்சி நன்றாகவே போகிறது. இதே சமயம் கண்மணிச் சேவை யிலும் பழைய பாடல் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்று வருகிறது. பழைய மற்றும் இடைக்கால பாடல்களை அவற்றின் பின்னணி தகவல்களோடு சுவைபட அளித்துவரும் தொகுப்பாளர் பாராட்டுக்குரியவர்.

இந்தப் பின்னணியில் தமிழகத்தில் இரண்டு பழையபாடல் அலைவரி சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கலைஞர் டி.வி, முரசு டி.வி என்ற பெயரில் ஒரு அலைவரிசையை ஆரம்பித்துள்ளது. 24 மணித்தியாலமும் பழைய பாடல்கள், திரைப்படங்கள் ஒளிபரப்பாகி வருகின்றது. இனி சும்மா இருக்குமா சன் டி.வி? சன் லை.்.ப் என்ற பெயரில் புதிய அலை வரிசை இப்போது ஆரம்பமாகி இருக்கிறது. 24 மணித்தியாலமும் பழைய பாடல்களும் திரைப்படங்களும் ஒளிபரப்பாகி வருகின்றன.

இந்த இரண்டு டி.வி. சனல்கள் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக இயங்குமோ தெரியவில்லை. ஆனால் 40 வயதைத் தாண்டிய அனைவரையும் இந்த அலைவரி சைகள் ஈர்க்கும் என்பது திண்ணம். இலங்கையில் 'சன் டிரெக்ட்' வசதி உள்ளவர்களுக்கும் கேபிள் டி.வி, வசதி உள்ளவர்களுக்கும் இந்த அலைவரிசைகள் தெரிகின்றன.

முன்னர் இரவின் மடியில் மட்டும் கேட்டுக்கொண்டு படக் காட்சிகளை மனத்திரையில் விரித்துக் கொண்டிருந்தவர்களுக்கு பாடலோடு படக் காட்சியையும் பார்க்கும் வசதி கிட்டியிருப்பது உண்மையிலேயே பெரிய விஷயம்தான்!

# நொண்டி வந்த மாணவன்

இலங்கேஸ்வரன்

நான் 1973ம் ஆண்டில் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இருந்தேன். இரண்டாம் வருட மாணவனாகிய என்னுடன் 50பேர் படித்தார்கள். எல்லோருமே என்னைப் போலவே இளைஞர்கள் என்பதால் மகிழ்ச்சிக்கும் விளையாட்டுக்கும் குறைவிருக்கவில்லை.

என்னுடன் படித்த ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொருரகம். சிலர் தனித்தனியே இருப்பார்கள் சிலர் கூட்டம் கூட்டமாக இருப்பார்கள். நானும் தர்மலிங்கம் என்னும் ஆசிரிய மாணவனும் நெருங்கிய நண்பர்கள். எங்கள் நேக்கமெல்லாம் ஒரு நிகழ்ச்சியைப் பற்றியே இருந்தது. அடுத்தவாரம் புதிய மாணவர்கள் வரப்போகிறார்கள். அவர்களை எப்படி றக் பண்ணுவது என்பதுதான் எங்கள் சிந்தனை.

நாம் எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தோம். புதிதாக வரும் மாணவர்களில் முரட்டுமாணவர்களை றக்பண்ணுவதற்குப் பொறுப்பாக தர்மலிங்கம் இருந்தான். அப்பாவி மாணவர்களை றக் பண்ணுவதற்கு நான் பொறுப்பாக இருந்தேன். எங்கள் இருவருக்கும் இரண்டாம் வருட மாணவர்கள் பலர் உதவிக்கு வந்தார்கள். அந்தநாள் ஆம்! புதிய மாணவர்கள் காலசாலைக்கு வரும் தினம் தான் அது. கலாசாலையில் வந்த புதிய மாணவர்கள் படிப்பு முடிந்து; மாலை 4.00 மணிக்கு எங்கள் விடுதிக்கு வந்தார்கள். எங்கள் கைகளில் அகப்பட்டார்கள்.

அங்கு வந்த புதிய மாணவர்களை வடித்தெடுத்து அப்பாவி மாணவர்களை என்னிடம் அனுப்பினார்கள். அந்த அப்பாவி மாணவர்களில் கால் ஊனமுள்ள ஒரு மாணவனும் வந்தான் அவனது பெயர் சித்திரவேலு. மாலை 6.00 மணிக்கு முதலாம் வருடமாணவர்கள் எல்லோரையுமே விளையாட்டு மைதானத்துக்கு வரவழைத்தோம். தங்கள் உடுப்புப் பெட்டிகளை தலையில் வைத்துக் கொண்டு வரவேண்டும் என்றோம். எல்லோரும் தமது உடுப்புப் பெட்டிகளை தலையில் சுமந்தவாறு விளையாட்டு மைதானத்துக்கு வந்தார்கள் சித்திரவேலுவும் தனது உடுப்புப் பெட்டியை தலையில் வைத்துக் கொண்டு நடக்க கஷ்டப்பட்டான். உடனே அவனை அழைத்து, நீ உடுப்புப் பெட்டியை தலையில் வைக்கத் தேவையில்லை ஒரு பக்கத்தில் இருந்துகொள் என்றேன். அவன் நொண்டியவாறே ஒரு பக்கத்தில் அமர்ந்துகொண்டான். இப்படியே முதலாம் வருடமாணவர்கள் பலருக்கு றக்கிங் என்ற பெயரில் பல தொல்லைகளைக் கொடுத்தோம். நொண்டி மாணவன் சித்திரவேலுவுக்கு மட்டும் எந்தவித தொல்லைகளும் கொடுக்கவில்லை. அவன் அமைதியாகவே இருந்துகொள்வான். அவன் மீது உள்ள அனுதாபம் காரணமாக அவனுக்கு எந்த வேலையுமே கொடுப்பதில்லை. ஒரு வாரத்துக்குப் பின், றக்கிங் எல்லாம் முடிவுற்று ஒரு விழா வைப்போம் அவ்விழாவிலே புதிய மாணவர்கள் தம்மை மேடையில் அறிமுகப்படுத்திக் கொள்வார்கள் அதன் பின்பு அவர்களை எவரும் றக் பண்ணமாட்டார்கள் புதிய மாணவர்களுக்கான றக்கிங் எல்லாம் முடிவடைந்து, அவர்களை அறிமுகப்படுத்தும் விழா நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு நானே தலைமை தாங்கினேன். மேடையில் இருந்தவாறே நான் அழைக்கும் புதிய மாணவர்கள் மேடைக்கு வந்து தம்மை அறிமுகப்படுத்திவிட்டு இறங்கிச் சென்று கொண்டிருந்தார்கள். நொண்டி மாணவனின் பெயரை நான் அழைத்தேன். அடுத்து சித்திரவேல் தன்னை அறிமுகப்படுத்துவார் என்றேன்.




சித்திரவேல் கதிரையில் இருந்து எழுந்து மேடைக்கு வந்தான். எல்லோருமே அவனது நடையைப்பார்த்து அதிர்ந்து போய்விட்டார்கள். காரணம் எப்பொழுதுமே நொண்டி நொண்டிச் சொல்லும் அவன் இப்பொழுது நிமிர்ந்து கம்பீரமாக நடந்து மேடையில் ஏறி தன்னை அறிமுகப்படுத்தினான். அவன் பேசினான். 'இங்கு பழைய மாணவர்கள் புதிய மாணவர்களை றக் பண்ணினார்கள் ஆனால் புதிய மாணவனாகிய நான் பழைய மாணவர்களை றக்பண்ணிவிட்டேன். எனக்கு கால்நொண்டி இல்லை. ஒரு வாரமாக நொண்டியாக நடித்தேன் என்று கூறி முடித்துவிட்டு கம்பீரமாக இறங்கினான்!


அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

# மரணத்தின் சாலை

உலகின் மிக ஆபத்தான சாலை என்றும் மரணசாலை என்றும் சொல்லப்படுவது. தென் அமெரிக்காவில் உள்ள யூங்காஸ் சாலையைத்தான் பொலிவியாவில் உள்ள கோராய்கோ என்ற பகுதிக்கும், யூங்காஸ் பகுதிக்கும் இடையே உள்ள 43 மைல் நீளம் கொண்ட ஒரே போக்குவரத்து வழி இது தான் என்பதால் இந்த பாதையில் பயணிக்கும் சாதாரண மனிதர்களைக் கூட இந்த சாலை சாகச மனிதர்களாக மாற்றிவிடுகிறது.

1930-ம் ஆண்டு பராகுவே நாட்டுச் சிறையில் இருந்த கைதிகளை கொண்டு இந்த சாலை அமைக்கப்பட்டது. சாலைபோடும் போதே ஏகப்பட்ட மனித உயிர்களை இந்த சாலை பலிவாங்கியுள்ளது. அமேசான் காடுகளை வட பொலிவியாவுடன் இணைப்பது இதுதான். மிகக் குறைந்த அகலம் கொண்ட இந்த சாலையின் ஆரம்பமே பயங்கரமானதாகத்தான் இருக்கிறது. சுமார் 5 மைல் நீளத்திற்கு உயரமாக ஏறும் சாலை, சடாரென்று 1,079அடி கீழே கிடுகிடு பள்ளத்தில் இறங்கும். இப்படி பாதை முழுவதுமே குன்றுகளில் ஏறி இறங்கி, சேறும் சகதியும் நிறைந்து இருக்கும் பாதையில் போக வேண்டும். இதில் ஆங்காங்கே ரோட்டுக்கு மேல் இருந்து அருவிபோல் தண்ணீர் கொட்டும். அந்த அருவிக்குள் புகுந்து போக வேண்டும். பாறைகள் அவ்வப்போது உருண்டு வந்து விழுவது திகிலின் உச்சம்.

ஒரு வாகனம் போவதற்கே திணறக்கூடிய இந்த சாலையில் இருபுறமும் இருவழி போக்குவரத்து நடைபெறுகிறது என்பது இன்னும் அதிர்ச்சி. எதிரே வரும் வாகனம் உரசாமல் போவது எவரெஸ்ட் மலை மீது ஏறுவதற்கு சமம். சாலை ஓரங்களில் தடுப்புகளோ, தடுப்பு சுவர்களோ, மரங்களோ எதுவும் கிடையாது. நமது ஊரில் மலையேறும் போது ஏறும் வாகனங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற அறிவிப்பு பலகை இருக்கும். அதேபோல் இந்த பாதையில் கீழே இறங்குபவர்கள் சாலையின் ஓரத்தில் மட்டுமே செல்லவேண்டும் என்ற விதி இருக்கிறது. மிக குறுகலான சாலையின் ஓரத்தில் போகும் போது கொஞ்சம் தவறினாலும் எலும்பு கூட மிஞ்சாது. ஒவ்வொரு வருடமும் சுமார் 300 பயணிகளாவது இந்த சாலையில் விபத்தில் சிக்கி இறக்கிறார்கள். குறைந்த பட்சம் வாரம் ஒரு வாகனமாவது மலையில் இருந்து கீழே விழுகிறது. 1983-ம் வருடம் ஜூலை மாதம் ஒரு பஸ் விழுந்ததில் அதில் பயணம் செய்த 100 பேரும் பலியானார்கள். உலகிலேயே அதிக அபாய எச்சரிக்கை அறிவிப்புகள் இருக்கும் சாலையும் இதுதான். இப்படி ஆபத்துகள் குவிந்து கிடப்பதால் மலையில் பைக் ஓட்டும் ''சாகச வீரர்கள் இங்கு அதிகம் வருகிறார்கள். அதனால் இந்த பாதை ஒரு சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. இந்த சாலைக்கு ஸ்பானிய மொழியில் ''எல் கேமினோ திலா மூர்ட்'' என்று பெயர். இதற்கு மரணத்தின் சாலை என்று அர்த்தம்.





என்னை புரட்டிப் போட்ட புத்தகம்

# பகத்சிங்கும் இந்திய அரசியலும்

நூலாசிரியர் : சுபவீரபாண்டியன்
முதல் பதிப்பு : 1987 மார்ச்
வெளியீடு : பொன்னி பதிப்பகம், மடிப்பாக்கம், சென்னை
விலை : ரூ.50.00 (இந்திய நாணயம்)


தை அரும்பும் காலமொன்றில், 2005ம் ஆண்டு நான் சென்னையில் இருந்தபோது சென்னை புத்தகக் கண்காட்சிக்கு கவிஞர் இன்குலாப்புடன் சென்றிருந்தேன். அங்கே நூல்களைப் புரட்டிக்கொண்டிருந்தபோது இன்குலாப் ஒரு புத்தகத்தை எடுத்துத் தந்தார். அது நான் வாசிக்கவேண்டும் என்று தேடிக் கொண்டிருந்த நூல். ஆசையுடன் புரட்டி, விலை கொடுத்து வாங்கினேன்.


மு.சிவலிங்கம்

இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தவர் காந்திஜி என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானோர் இந்திய விடுதலைக்காகப் போராடி, உயிர்த் தியாகம் செய்து, சொல்லொணாக் கொடுமைகளை ஏற்று அதை ஒரு வேள்வித் தீயாக வளர்த்து வந்திருக்கிறார்கள். இவர்களின் அர்ப்பணிப்புகளால் விடுதலைக்கான சாதாகமான சூழல் படிப்படியாக எழுந்தது. இந்த வரிசையில் இறுதியாக காந்திஜி வந்தார். ஏற்கனவே போடப்பட்டிருந்த பாதையால் காந்திஜியால் அஹிம்சை வழிப் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது.

இவ்வாறு தன்னுயிரை ஆகுதியாக சுதந்திர வேள்வியில் கொடுத்தவர்களில் பகத்சிங்கும் ஒருவர். நான் இந்த நூலை ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். நூலாசிரியர் சுபவீரபாண்டியன் நிறைய வரலாற்று தகவல்களை திரட்டி, எளிமைப்பட இதை எழுதியிருக்கிறார்.

கருணாமூர்த்தி, அறவழி போராட்ட வீரர், மகாத்மா என்றெல்லாம் ஒரு அப்பழுக்கற்ற மாமனிதராகவே நான் காந்தியை சிறுபராயத்தில் அறிந்தேன். காந்திஜி மீதான எந்த மாற்று விமர்சனத்தையும் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. பிற்காலத்திலேயே காந்திஜியை மறுஆய்வுக்கு உட்படுத்த முடிந்தது. அப்போது பல உண்மைகள் தெரிய வந்தன. காந்திஜியை ஒப்பற்ற கருணாமூர்த்தி, மகாத்மா என்பதை பிரமாண்டமாக சித்தரிப்பதற்காக ஏனைய




போராட்ட வீரர்களை காங்கிரஸ் சிறுமைப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியது. சுாபஷ் சந்திரபோஷ், பகத்சிங், உத்தம்சிங் உட்டபட பல போராட்ட வீரர்கள் வெறும் வன்முறையாளர்களாகவே சித்தரிக்கப்பட்டனர்.

எனினும் காந்திஜியின் அறவழிப் போராட்டத்துக்கு வன்முறையாளர்கள் என வர்ணிக்கப்பட்ட, அடக்குமுறைக்கு எதிராகக் கிளம்பியவர்களின் பங்களிப்பும் இருந்தது. உதவவும் செய்தது. சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகம் செய்ய ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தயாராக உள்ளனர் என்பதும் நேதாஜி ஜப்பான் உதவியுடன் போரிடவும் தயார் என்பதும் பிரிட்டிஷ் அரசை சிக்கலான நிலைக்குத் தள்ளியது என்பதையும் காந்திஜியின் போராட்டத்துக்கு இது ஒத்தாசையாக அமைந்தது என்பதும் மறுப்பதற்கில்லை. காந்திஜி நினைத்திருந்தால் பகத்சிங்குக்கான தூக்குத் தண்டனையை ஆயுள்தண்டனையாக மாற்றி அமைத்திருக்கலாம் என்ற ஒரு கருத்து பின்னர் வலுவாக முன்வைக்கப்பட்டது.

மறுவாசிப்பு என்பது ஏற்கனவே அறிந்த ஒன்றை மீண்டும் தேவையற்ற ஆராதனைகளும் ஆலாபனைகளுமின்றி உள்ளதை உள்ளபடி அறிந்து கொள்ளுதல் என்ற பொருளுடையது. இந்த நூல் அந்த அனுபவத்தை தந்தது.

பகத்சிங் வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர். படித்தவர். நூல்களை எழுதிய பஞ்சாபி பையன். 24 வயதில் தூக்குக் கயிற்றை தைரியமாக முத்தமிட்டவர். சிறையிலிருந்து அவர் எழுதிய கடிதங்கள் நூலாகவும் வெளிவந்துள்ளது. சேகுவேராவைக் கொண்டாடுவோர் நிச்சயம் பகத்சிங்கையும் கொண்டாடவேண்டும்.

இந்த நூலை வாசித்து முடித்தபோது பல உண்மைகள் பளிச்சிட்டன. இதன்பின்னர் பலருக்கும் இந்த நூல் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். வாசிக்கும்படி சிபாரிசு செய்திருக்கிறேன். தேங்கிக் கிடந்த எண்ணங்களை என்னில் உசுப்பிவிட்டது இந்த நூல்.

# ஒக்டோபர் மாத பலாபலன்கள்

01-10-2012 தொடக்கம் 31-10-2012 வரை

சோதிடமாமணி நவா

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் வியாழன் இரண்டிலும், சனி ஏழாம் வீட்டிலும் சஞ்சரிப்பதால் சகல விடயங்களிலும் முன்னேற்றம் தரும். செய்தொழில் நன்மைகளுடன் பணவரவும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். சுபகாரிய மகிழ்ச்சியுண்டு உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் பலவிதத்திலும் நன்மையடைவர். முதலீட்டாளர்களுக்கு முதலீடுகளால் இலாபம் கிடைக்கும். மேட இராசியினருக்கு மேன்மைதரும் மாதமாக அமைவு பெறும். அதிஷ்ட திகதிகள் 09,27

## இடபம்

கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் ஜென்மத்திலும், சனி ஆறிலும் இம்மாதம் சஞ்சரிப்பதால் சகல விடயங்களிலும் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. செய்தொழில்களில் சிறிது கஷ்டங்கள் தோன்றும், பணவரவும் சீராக அமையாது, குடும்பத்தில் வீண் செலவுகளுக்கு இடமுண்டு, உத்தியோகத்தர்கள், மாணவர்கள் தமது கடமைகளில் பொறுமையுடன் செயற்படுவது நல்லது. முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்து கொள்வது நன்மை தரும். இடப இராசியினருக்கு சிறிது இன்னல்கள் காட்டிடும் மாதம். அதிஷ்ட திகதி 05,23.

## மிதுனம்

மிருக சீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் 12ஆம் வீட்டிலும், சனி ஐந்தாம் வீட்டிலும் இம்மாதம் சஞ்சரிப்பதால் நன்மையும், தீமையும் கலந்த மாதமாகும். செய்தொழில்களில் சிறிது பிரச்சினைகளும், பண நெருக்கடியும் தோன்றி மறையும். குடும்பத்தில் எதிர்பார்த்த விடயங்களில் தாமதம் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் கல்வி நிலை, தொழில் நிலைகளில் மனக் கஷ்டங்கள் உண்டாகும். முதலீட்டாளர்கள் முதலீடுகளை அளவுடன் வைத்துக் கொள்வது நன்மை தரும். மிதுன இராசியினருக்கு மனக் குழப்பங்கள் தந்திடும் மாதம். அதிஷ்ட திகதிகள் 03,21 ஆகும்.

## கடகம்

புனர்பூசத்து, நாலாங்கால், பூசம் ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் பதினோராம் வீட்டிலும், சனி நான்காம் வீட்டிலும் சஞ்சரிப்பது நன்மைக்குரியதாகும். செய்தொழில்கள் யாவும் சீராக அமைந்து மனதிற்கு நிம்மதி தரும். எதிர்பார்த்த பணவரவுகள் வந்துசேரும். உத்தியோகஸ்கர்கள், மாணவர்கள் விழிப்புடன் தமது கருமங்களில் நடந்து கொள்வது நல்லது. முதலீட்டாளர்கள் முதலீடுகளில் கூடிய கவனம் செலுத்துவது நன்மை தரும். கர்க்கடக இராசியினருக்கும் கூடிய கஷ்டம் தராத மாதம். அதிஷ்ட திகதிகள் 04,22.

## சிங்கம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் பத்தாம் வீட்டிலும், சனி மூன்றாம் வீட்டிலும் சஞ்சரிப்பது சுமாரான பலன்களை தருவதாக அமையும். தொழில் நிலையில் சிறிது கஷ்டங்கள் தோன்றி மறையும். புதிய முயற்சிகளில் தடையுண்டாகும். குடும்பத்தில் மனக்கஷ்டகளுக்கு இடமுண்டாகும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், வீண் கஷ்டங்களை எதிர்கொள்வர். முதலீட்டாளர்கள் முதலீடுகளை அளவுடன் வைத்துக் கொள்வது நன்மைதரும். சிங்க இராசியினருக்கு பெரிதாக சிக்கல்களை தராது. அதிஷ்ட திகதிகள் 07,25.

## கன்னி

உத்தரத்து பின்முக்கால், அந்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் ஒன்பதாம் வீட்டிலும், சனி இரண்டாம் வீட்டிலும், சஞ்சரிப்பது நன்மைக்குரியதே தொழில் நிலைகள் சீராக அமையும். பணவரவுகளில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்களின் மனக் கஷ்டங்கள் குறைவடையும், முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் கன்னி இராசியினருக்கு பெரிதான கஷ்டம் ஏற்படாது அதிஷ்ட திகதிகள் 05,23 ஆகும்.

## துலாம்

சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் எட்டிலும், சனி ஜென்மத்திலும் சஞ்சரிப்பதால் சகல கருமங்களிலும் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. தொழில் நிலைகளில் கஷ்டங்கள் தோன்றும். பணத் தட்டுப்பாடு நிலவும், குடும்பத்தில் வீண் மனஸ்தாபங்களும், செலவுகளும் உண்டாகும், உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக்குழப்பமடைவர் முதலீட்டாளர்கள் எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது. துலா இராசியினருக்கு சிறிது துயர் தந்திடும். அதிஷ்ட திகதிகள் 06,24.

## விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் ஏழாம் வீட்டிலும், சனி பனிரெண்டாம் வீட்டிலும் சஞ்சரிப்பதால் இம்மாதம் பலவழிகளிலும் நன்மைகளை தரும். செய்தொழில்கள் யாவும் சீராக அமைந்து பணவரவுகளை தரும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். சுபகாரிய நன்மையும் இடம்பெறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் உயர்வடைவர். முதலீட்டாளர்கள் முதலீடுகளால் மன மகிழ்ச்சியடைவர். விருட்சிக இராசியினருக்கு நன்மைகள் பல தரும் மாதம் அதிஷ்ட திகதிகள் 10, 19.

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் ஆறாம் வீட்டிலும், சனி பதினோராம் வீட்டிலும் சஞ்சரிப்பதால் மனக்கவலைகள் மறைந்திடும் மாதம். செய்தொழில்களில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கிடும். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். குடும்பத்தில் இருந்து வந்த தொல்லைகள் நீங்கும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள் நீங்கும். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்துக் கொள்வது நன்மைதரும். தனு இராசியினருக்கு சிறு தளம்பல் தரும் மாதம். அதிஷ்ட திகதிகள் 01,27 ஆகும்.

## மகரம்

உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் ஐந்தாம் வீட்டிலும், சனி பத்தாம் வீட்டிலும் சஞ்சரிப்பதால் சகல விடயங்களிலும் முன்னேற்றம் தரும். செய்தொழில்கள் சிறந்து விளங்கி பணவரவு தரும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக் கவலைகள் மறையும் உத்தியோகஸ்தர்கள், மாணவர் கருமங்களில் முன்னேற்றம் உண்டாகும். முதலீட்டாளர்களின் முதலீடுகளில் துரித முன்னேற்றம் ஏற்படும். மகர இராசியினருக்கு மகிழ்ச்சி தரும் மாதமாக அமையும். அதிஷ்ட திகதிகள் 12,30.

## கும்பம்

அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் நான்காம் வீட்டிலும், சனி ஒன்பதாம் வீட்டிலும் சஞ்சரிப்பதால் ஓரளவு மன நிறைவு தரும் மாதம். செய்தொழில்கள் திருப்தி தரும் பணவரவுகளில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக் குழப்பங்களிலிருந்து விடுபடுவர். முதலீட்டாளர்கள் முதலீடுகளில் குழப்படைந்து தெளிவு பெறுவர். கும்ப இராசியினருக்கு மனக்குறைகள் விலகிடும் மாதம். அதிஷ்ட திகதிகள் 04, 22.

## மீனம்

பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் மூன்றாம் வீட்டிலும், சனி எட்டிலும் சஞ்சரிப்பதால் சகல கருமங்களையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். செய்தொழில்கள் சீராக அமையாது, பணக் கஷ்டங்களால் சிலர் கடன்படும் நிலையுண்டாகும். குடும்பத்தில் அநாவசிய செலவுகள் ஏற்பட்டு மனக்குழப்பம் தரும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் தமது கருமங்களில் வீண் தொல்லைகளை எதிர்கொள்வர். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்துக் கொள்வது நன்மை தரும். மீன இராசியினருக்கு மனக்குழப்பம் தரும் மாதமாகும். அதிஷ்ட திகதிகள் 05, 23 ஆகும்.

## வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK) மகற்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்*

**கடந்த ஐந்து ஆண்டுகளாக மாதவிடாய் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளேன். வயது 43. குறித்த நாளுக்கு முன்னரேயே மாதவிடாய் ஏற்பட்டு பத்து தினங்களுக்குத் தொடரும். வயிறு, முகம், மார்பு வீங்கிவிடும். ஆரம்பமாவதற்கு மூன்று தினங்களுக்கு முன்னரேயே ஒற்றைத் தலைவலி ஆரம்பமாகும். மூன்று நாட்களுக்கு உதிரப்பெருக்கு கடுமையாக இருக்கும். சிகிச்சைகள் பலன் அளிக்கவில்லை. தயவு செய்து எனக்கு ஆலோசனை வழங்குங்கள்.**

**- எஸ்.வி.எம். மன்னார்**

**பதில்:** 45 வயதைத் தாண்டினால் பெண்களுக்கு, உங்களுக்கு

**பதில்:** கர்ப்பம் தரிக்கும்போது உடலில் சில மாற்றங்கள், உபாதைகள், பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. கால்களில் நாளங்கள் வீங்கும். அதேபோல் மலவாய்த் துவாரத்தைச் சுற்றியுள்ள நாளங்களும் வீக்கமடையும். நாலு கால்களில் நடக்கும் மிருகங்கள் கர்ப்பம் அடையும்போது அவை இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வதில்லை.

ஏனெனில் அதிகரிக்கும் உடல் பருமன் நான்கு கால்களினால் சமன்படுத்தப்பட்டு விடுகிறது. இரண்டு கால் மனிதனுக்குத் தான் இப்பிரச்சினை. தனது எடையையும் வயிற்றில் உருவாகும் கருவின் எடை மற்றும் உபரியாக போடும் சதையையும் ஒரு பெண் இரண்டு கால்களினால் தான் தாங்க வேண்டும். இதனாலேயே கால் வீக்கம், நரம்பு புடைத்தல், மலவாய் நாளங்கள்

உங்கள் விஷயத்துக்கு வருவோமானால், பிரசவத்தின் பின்னரும் மூலப் பிரச்சினை தொடர்வதால் பொது வைத்தியர் ஒருவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது.

**எனக்கு வயது 23, மனைவியாகப் போகிறவருக்கு 18 வயது. திருமணமானதும் மகப்பேற்றைத் தள்ளிப்போட விரும்புகிறோம். இதற்கான சரியான வழிமுறையை சொல்வீர்களா? மாதவிடாய் ஏற்பட்ட 15, 16ம் நாட்களின் பின்னர் உறவு கொண்டால் பாதுகாப்பானது என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டா?**

**- செல்லத்துரை**

**பதில்:** குழந்தை பெறுவதற்கான உசிதமான காலமாக 22, 23,24 வயது பருவம் கொள்ளப்படுகிறது. ஆகவே தற்காலிக கருத்தடை செய்து கொள்வதில் தவறு இல்லை. எவ்வாறான கருத்தடை கைக்கொள்ளப் பட வேண்டும் என்பதில் கவனம்

# கர்ப்ப காலத்தில் மூலநோய் ஏற்படுவது ஏன்?

ஏற்பட்டிருப்பதைப் போலவே மாதவிடாய் கோளாறுகள் ஏற்படுவதுண்டு. ஹோர்மன்கள் சமதன்மையுடன் இல்லாதிருப்பது, கருப்பையில் கட்டி ஏற்படுவது, கருப்பையை சூழவுள்ள இடங்களில் கிருமித் தாக்கம் ஏற்படுதல் எனப் பல காரணங்களினால் இக்கோளாறுகள் ஏற்படுகின்றன. சிலருக்கு நீங்கள் குறிப்பிட்டதைப் போல வயிற்றுவலி, தலை, இடுப்பு வலி, மார்பு வீக்கம் போன்ற குணக்குறிகளும் ஏற்படுவது உண்டு. புற்றுநோயும் ஏற்படலாம். ஆனால் இந்த வயதில் மாதவிடாய் போக்கில் கோளாறுகள் ஏற்படும்போது அது புற்று நோயையே குறிக்கிறது என்று பலர் முடிவு செய்து விடுகிறார்கள். ஊடகங்களும் கருப்பை புற்றுநோயைப் பற்றி அதிகம் பேசுவதாலும் நடுத்தர வயது பெண்களுக்கு இந்த அச்சம் ஏற்பட்டு விடுகிறது.

உங்கள் பிரச்சினைக்கு நீங்கள் ஒரு V.O.G யை நாட வேண்டும். ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும். 'பெப்ஸ்மெயார்' என்ற பரிசோதனை கருப்பைக் கழுத்துப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு அப்பகுதியில் புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். DNC எனப்படும் வயிறு கழுவுதல் மூலம் கருப்பையில் இருக்கக்கூடிய கோளாறுகள் கண்டறியப்பட முடியும். மேலும் எல்லா ஆதார வைத்தியசாலைகளிலும் Well Woman Cliic என்றழைக்கப்படும் மகளிர் மருத்துவ பிரிவுகள் இயங்கி வருகின்றன. அங்கே சென்று உங்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்லுங்கள்.

**வயது 24. மூல வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறேன். முதல் தடவையாக கர்ப்பவதியாக இருக்கும்போதே மூலம் தள்ளிவிட்டது. பிரச்சினை இப்போதும் நீடிக்கிறது. குணப்படுத்த என்ன செய்யலாம்? கர்ப்ப காலத்தில் மூலப் பிரச்சினை ஏற்படுவது இயற்கை என்கிறார்கள் உண்மையா?**

**- பெயர் குறிப்பிட விரும்பாதவர், சம்மாந்துறை.**

புடைத்தல் ஆகிய பிரச்சினைகள் எழுகின்றன.

ஹோர்மோன்களில் ஏற்படும் மாற்றங்களும் இதற்குக் காரணம். கர்ப்பிணிகளுக்கு மலச்சிக்கல் ஏற்படுவது வழமை. பிரசவத்தின் பின்னர் சரியாகிவிடும்.

கர்ப்பமாக இருக்கும்போது பெண்கள் அதிக அளவு நீரைப் பருக வேண்டும். கீரை வகைகள், பழங்கள் உணவில் தாராளமாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கார உணவுகளையும் கொழுப்பு சார்ந்த உணவுகளையும் குறைத்துக் கொள்வதோடு கர்ப்பிணிகள் உணவை நன்கு மென்று விழுங்க வேண்டும். நீர்ப்பதார்த்த உணவுகளை அவர்கள் அதிகம் உட்கொள்ளலாம். முக்கியமாக இவர்கள் நார்த்தன்மை கொண்ட உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்வது அவசியம். நாம் வழமையாக உட்கொள்ளும் உணவுகளிலேயே அதிக நார்த்தன்மை காணப்படுகிறது. பருப்பு வகைகள், காய்கறிகள் நார்த்தன்மை கொண்டவை. இவற்றைத் தவிர்த்து நவ நாகரிக உணவுகளான சொக்கலேட், கிழங்குப் பொரியல், Fast Food எனப்படும் கவர்ச்சியான உணவுகள் கர்ப்பிணிகளுக்கு நன்மையான செய்யாது. கர்ப்பகால பிரச்சினைகள் அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகிறது.

மலைச்சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு செயற்கை நார்த்தன்மை கொண்ட நவீன மருந்துகள் உண்டு. இம் மருந்துகளுக்கு பழக்கப்படுத்திக் கொள்வது நல்லதல்ல. ஆண்களில் சிலருக்கு காலையில் எழுந்து சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டால்தான் மலம் கழியும்.

சிகரெட் புகைக்கு உடலை பழக்கப்படுத்திக் கொண்டதால் வரும் வினை இது. ஆகவே கர்ப்பிணிகள் சரியான உணவு, பழக்க வழக்கங்கள் மூலம் மலச்சிக்கலை தவிர்த்துக்கொள்ள முயல்வதே சரியானது. அதாவது தகுந்த உணவு சரியான உணவு உட்கொள்ளும் முறை, சரியாக மலம் கழிக்கும் முறை ஆகியவற்றை கர்ப்பகாலத்தில் கைக்கொள்ள வேண்டியது அவசியம்.

தேவை. ஒரு பெண்ணின் 28 நாள் மாதவிடாய் சக்கரத்தை எடுத்துக்கொண்டால் 11வது நாள் முதல் 17வது நாள் வரையிலான காலப்பகுதியே கருவளம் கொண்ட நாட்களாக கருதப்படுகின்றன.

இக்காலம் தவிர்த்து ஏனைய நாட்களில் பாதுகாப்பான தாம்பத்திய உறவு வைத்துக் கொள்ளலாம். இது இயற்கையான வழி. ஆனாலும் தற்காலிகக் கருத்தடை முறை ஒன்றை கைக்கொளவதே நல்லது.


நீங்கள் இதற்காக ஊசி மருந்தையோ, 'லூப்'பையோ தெரிவு செய்யக் கூடாது.

ஏனெனில் கருத்தடை நிறுத்திய உடனேயே கருத்தரிப்பதற்கு மனைவி தயாராக இருக்க வேண்டியது அவசியம். இதற்கு உகந்த மாத்திரையாக Triphasec விளங்குகிறது. டாக்டரின் சிபாரின்படி பாவிக்கலாம். ஒரு பெண் நோய் மகப்பேற்று மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றுக் கொள்ளவும்.

*கர்ப்பம் தொடர்பான நோய்கள், வருத்தங்கள், பெண் நோய்கள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்*
***எஸ். எப். எல். அக்பர்***
*பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். உங்கள் கேள்விகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் நெடுநாள் நோயானால் ஏற்கனவே எடுத்துக் கொண்ட சிகிச்சைகளின் போட்டோ பிரதிகளையும் இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். வயதை குறிப்பிட மறக்க வேண்டாம். பெயர் குறிப்பிட விரும்பாதவர்கள் அதை தனிக் கடிதத்தில் தெரிவிக்கலாம். எனினும் பெயர் முகவரி குறிப்பிட மறக்க வேண்டாம். இது எமது தேவைக்காக.*

வானவில் மருத்துவம்,
த.பெ. எண். 1218
கொழும்பு.
e-mail: vannavaanavil@gmail.com

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 23



### இடமிருந்து வலம்

1. இங்கு அண்மையில் மாகாண சபை தேர்தல் நடந்தது (6)
5. போட்டால் சமாளிக்க வேண்டும் (3)
8. இதற்கேற்ற மூடி (2)
9. தமிழக தொலைக்ககாட்சிகளில் ஒன்று (2)
10. சிவாஜி, பத்மனி நடித்தது (10)
13. சூப்பர் ஸ்டார் (6)
15. வலிமை (3)
18. முற்றிப்போய் விட்டது (2)
19. நேரம் (3)
20. ஒரு இறாத்தலில் 454 உண்டு (3)
22. பயம்
23. கிருஷ்ணனின் இரண்டு மனைவியரில் ஒருவர் (4)
24. பட்டினி (2)
25. ஒரு நிறம் (4)
28. அதிர்ஷ்டம் கொட்டும்போது இப்படி சொல்வார்கள் (6)
29. கிலி (3)
30. பூமி (3)

### மேலிருந்து கீழ்

1. நிலா (5)
2. சூரியன் (2)
3. பணம் சேர்த்து வைக்கப்படும் இடம் (3)
4. மயிர் (2)
5. ஒரு ராகம் (3)
6. வாசனை (3)
7. நெஞ்சு (2)
9. மாத கடைசியில் கிடைக்கும் (5)
11. வெட்டும் (3)
12. இணைக்கும் (3)
16. பாதணி (3)
17. பயம் (3)
18. கடினமான மரம் (5)
19. மன்மதன்(3)
21. ஆட்சிப் பிரதேசம்(5)
22. பறவை (2)
24. பழசு (3)
26. இரண்டு சேர்ந்தது (3)
27. தேர்வு (3)
28. ஒன்றும் இல்லை (2)

*சரியான விடைகளை எழுதி 25. 10. 2011க்கு முன்*

குறுக்கெழுத்துப் போட்டி - 23
வண்ண வானவில்
த.பெ. இலக்கம் 1218
கொழும்பு

*என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல 22க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 22ஆம் பக்கத்தில்....**






# மேற்குலக வயதானவர்களை வாட்டும் தனிமை





வெளிநாட்டு அரசுகள், இளைஞர் குழுக்களை தமிழகத்துக்கும் இலங்கைக்கும் அனுப்பி முதியோரைக் கனம் பண்ணுவது எப்படி என்பதை அவர்களுக்குக் கற்றுத்தர முயல வேண்டும். ஆனால் ஒன்று. நம் ஆட்களுக்கு தமது பெற்றோரை முதியவர் இல்லங்களுக்கு அனுப்பி வைப்பதில் ஆர்வம் அதிகரித்து வருகிறது. வெள்ளைக் காரர்களிடம் இருந்து எவற்றை எடுத்துக் கொள்ளக் கூடாதோ அவற்றை விரும்பி ஏற்றுக் கொள்வது ஒரு புதிய கலாசாரமாகி வருகிறது.

நாங்கள் எப்பொழுதும் முதியவர்களை கரிசனையுடன் பார்த்துக் கொள்கிறோம். கலியாணம் முடித்த புது தம்பதிகளுக்கு, தலைப்பிள்ளை பொம்பிளை பிள்ளை பிறந்தால் சந்தோஷமாக இருக்கும். வயதான காலத்தில் தண்ணி வென்னி வைச்சுத் தர ஒரு பெண் பிள்ளை வந்துவிட்டதே என்ற மகிழ்ச்சி தான் அது.

பெரும்பாலான வயதான பெற்றோர் பிள்ளைகளையே எப்பொழுதும் நம்பி வாழ்பவர்கள். இலங்கையில் இது சர்வ சாதாரணம். ஏன் எமது தமிழர் வாழ்வில் முதியவர்களை கனம் பண்ணுதல், மதித்தல், வாழ்தல் என்று ஒரு கலாச்சாரமே இருக்கிறது. இது சாதாரணமான ஒரு விடயமல்ல. ஏனெனில் வெளிநாடுகளில் முதியவர்களை ஒரு சுமையாகவே பிள்ளைகள் நினைக்கிறார்கள்.

முதியவர்களை வீட்டில் வைத்து பராமரிப்பது, வெள்ளைக்காரர் மத்தியில் அரிதாகவே இருக்கிறது. கிராமப் புறங்களில் பெரிய வீடுகளில் இருக்கும் வெள்ளைக்காரர் தங்கள் முதிய பெற்றோர்களை வீட்டில் வைத்து நன்றாக கவனித்து அவர்களை சந்தோஷமாக வைத்திருப்பதையும் கண்டிருக்கிறேன்.

ஆனால், லண்டனில், நகர்ப்புறங்களில், முதியவர்களை அரசாங்கம் முதியோர் இல்லங்களில் வைத்துத்தான் பராமரித்து வருகிறது. எனது வீட்டுக்கருகில் கூட மூன்று பெரிய முதியோர் இல்லங்கள் இருக்கின்றன. அந்த முதியவர்களும் பிள்ளைகள் தொடர்பான அக்கறை இல்லாதவர்களாக தனிமையில் அரசாங்கம் கவனிப்பதை ஏற்றுக் கொண்டு வாழ்கிறார்கள். ஏனெனில் இப்பொழுது முதியோர் இல்லங்களில் இருக்கும் வயதாளிகள் ஏற்கனவே நல்ல திடகாத்திரத்துடன் இருந்த போது அவர்களது பெற்றோர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பியவர்கள் தானே! அதனால் இப்பொழுது அவர்கள் அனுபவிப்பது முதலில் அவர்களின் பெற்றோர்களுக்கு செய்தவினை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்கமும் எங்களிடம் இருந்து என்.ஐ நம்பருக்கான பணம், வரிப் பணம் என்று மாதாந்தம் 450 பவுணுக்கு மேல் சம்பளத்தில் இருந்து வெட்டி எடுக்கிறது அது நாங்கள் முதியவர் ஆன பிறகு எங்களுக்கு தரும் பென்சன் மற்றும் எமது வயதான கால பராமரிப்புக்கான செலவு. இதனை இப்பவே வெட்டி எடுத்து விடுகிறது அரசாங்கம்.

எங்களது வீட்டில் அம்மய்யாவும், அம்மம்மாவும் முதியவர்களாக எனது கண்களாக இருந்தார்கள். இது நான் சொல்வது 43 வருஷங்களுக்கு முந்திய ஊர்க்கதை. அதில் இருவரும் நல்ல திடகாத்திரமானவர்களாக சாகும்வரை இருந்தார்கள். அம்மய்யாவுக்கு தான் சாகுறதுக்கு ஒரு வருஷத்துக்கு முந்தி வருத்தம் வந்தது. அவருக்கு சீனி வியாதி இருந்தது. ஆனால் அது அவருக்கு தெரியாமலேயே போய்விட்டது. இப்பொழுதை போல சீனி வியாதி பரிசோதனை பண்ண என்று யாரும் ஆஸ்பத்திரிக்கு போனதை நான் அந்தக் காலத்தில் பார்க்கவில்லை.

அவருக்கு சீனி கூடித்தான் வருத்தங்கள் வந்திருக்க வேண்டும். கடைசி காலத்தில் அம்மய்யாவை எங்களது அம்மா கண் கலங்காமல் பார்த்து வழி அனுப்பி வைத்தார். ஆனால் அவர் சாகும் போது அவருக்கு இருந்த கடைசி ஆசை என்னை ஒரு தரம் கண்ணால் பார்த்துவிட வேண்டுமென்பது. அது அவருக்கு நிறைவேறாத ஆசையாகவே அமைந்தது.

நான் ஊர் ஊராக அலைந்து திரிந்தபோது அவர் கவலைப்பட்டிருக்கிறார். மூத்த ஆம்பிளைப்பிள்ளை பேரன் நான். எனது வாழ்க்கை முழுவதும் திக்விஜயத்தில் தான் கழிந்தது. அம்மா தான் கண் தூங்காமல் அம்மய்யாவை பார்த்து ஒப்பேற்றினார். அம்மம்மா திடகாத்திரமாக சாகும்வரை இருந்திருக்கிறர். அவ இறந்தபோது நான் ஏதாவது ஒரு வெளிநாடொன்றில் இருந்திருப்பேன்.

இப்பொழுது தான் லண்டனில் முதியோர் மீதான அக்கறை வந்திருக்கிறது. அதுவும் 'கிறடிட் கிறஞ்சுக்கு' பிறகு.

இளையவர்களுக்கு, துடிப்பாக இருப்பவர்களுக்கு, ஒரு அறிவித்தலை டேவிட் கமரூன் அரசு விடுத்திருக்கிறது.

இங்கு லண்டனில் முதியோர் இல்லங்களில் இருக்கும் முதியவர்களை கவனித்துக் கொள்ள நேர்ஸ் மார்கள் இருக்கிறார்கள். ஆனால் முதியவர்களோடு இருந்து ஆறுதலாக பேசி அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொண்டு அவர்களை ஆறுதல்படுத்த யாருமேயில்லை. நேர்ஸ்மாருக்கு சம்பளம் தரவேண்டும். நேரத்துக்கு சாப்பாடு, நேரத்துக்கு சிற்றுண்டி, நேரத்துக்கு மருந்து, நேரத்துக்கு மருத்துவ பரிசோதனை என்று எல்லாம் நடக்கிறதே தவிர அவர்களின் மனதறிந்து கதைக்க, மதிக்க முதியோர் இல்லங்களில் யாருமில்லை. பிள்ளைகள் யேசு பாலன் பிறந்தநாள், புதுவருடம், பெற்றாரின் பிறந்ததினம் என்று மட்டும் வந்துவிட்டு போவார்கள் மற்ற நேரங்களில் முதியவர்கள் தனிமையில் வாடுகிறார்கள்.

எனவே தான் முதியவர்களை, உடல் ஊனமுற்றவர்களை அவர்களோடு இருந்து கவனித்துக் கொள்ள முன்வரும் இளைஞர்கள் தன்னார்வ தொண்டாக இந்த பணியை செய்யவேண்டும். அப்படி செய்தால் முதியவர்களை பார்க்கும் நேரத்தை கணக்கில் எடுத்து அவர்கள் வயதாளிகளாக ஆகும்பொழுது பிறர் கவனித்துக் கொள்ளும் படியான ஒரு ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த பிரிட்டன் அரசு யோசிக்கிறது.

அமெரிக்காவில் ஒரு சில இடங்களிலும் ஜப்பானிலும் இந்த நடைமுறை இருக்கிறது. வயதாளிகளை வேறொருவர் பார்த்து பராமரித்தால் அவர் வயதாகும் போது அவரை ஒருவர் பார்ப்பார்.

முதியோர்களை கவனிப்பது நம் அனைவரினதும் கடமை. அதனை வெகுமதி எதிர்பார்த்து செய்யக்கூடாது என்று ஒரு சாரார் சொல்கின்றனர். ஆனால் முதியோர் இல்லங்களில் பெற்றோர்களை கொண்டு போய்விடாமல் பிள்ளைகளே வைத்து பார்க்கும் படியான பயிற்சிகளை அளிக்கவேண்டும் என்றும் பெற்றோரின் பெறுமதியை பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்த வேண்டும் என்றும் ஒருசாரார் கருத்து தெரிவிக்கின்றனர்.

சிக்கல் என்னவென்றால், இங்கு வெள்ளைக்கார நாடுகளில் சுதந்திரம் என்ற போர்வையில் பிள்ளைகளை 18 வயதுக்கு மேல் அவர்கள் இஷ்டப்படி பெற்றோர் வாழ விட்டுவிடுகிறார்கள். அந்த மாதிரி வளர விட்டு விட்டு பிறகு பெற்றோர்களை கவனியுங்கள் என்றால் எங்கிருந்து வரப்போகிறது பாசமும் அன்பும்? ஆனால் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து போன்ற இடங்களில் இயல்பாகவே பெற்றோர்களை வயதானாப் பிறகு கவனிக்கும் பண்பு இரண்டாம் தலைமுறையினரிடம் உள்ளது.

அது தானாக வரவேண்டும். யாரும் சொல்லி வரமுடியாது. இரக்கமும் ஏனையோரை மதித்தலும் அதே போலத்தான். வயதான பெற்றோரை கவனித்தலும் தமிழர் கலாச்சாரத்தில் வந்து பார்த்து பழக வேண்டிய தொன்று. முதியோரை கனம் பண்ணுதல், கவனித்தல் என்பது தமிழர் கலாசாரத்தில் ஊறிப்போன விஷயம். வெளிநாட்டு அரசுகள், இளைஞர் குழுக்களை தமிழகத்துக்கும் இலங்கைக்கும் அனுப்பி முதியோரைக் கனம் பண்ணுவது எப்படி என்பதை அவர்களுக்குக் கற்றுத்தர முயல வேண்டும். ஆனால் ஒன்று. நம் ஆட்களுக்கு தமது பெற்றோரை முதியவர் இல்லங்களுக்கு அனுப்பி வைப்பதில் ஆர்வம் அதிகரித்து வருகிறது. வெள்ளைக்காரர்களிடம் இருந்து எவற்றை எடுத்துக்கொள்ளக் கூடாதோ அவற்றை விரும்பி ஏற்றுக்கொள்வது ஒரு புதிய கலாசாரமாகி வருகிறது.



# உடற்பயிற்சி செய்யும் நமீ



நமீதாவின் அலை ஓய்ந்துவிட்டதாக சிலர் நினைத்துக்கொண்டிருந்தால் அது மகா தவறு ஐயா! அம்மணி அடுத்த ஆட்டத்திற்கு தயாராகி விட்டது. தமிழில் 'இளமை ஊஞ்சலாடுகிறது' தெலுங்கில் ஒரு படம், கன்னடத்தில் ஒரு படம் என கையில் மூன்று படங்கள் ரெடியாக இருக்கிறதாம். தெலுங்கு படத்தில் சி.ஐ.டி போலிஸ் வேடத்தில் நடிப்பதால் விஜயசாந்தி நடித்த 'வைஜயந்தி ஐ.பி.எஸ்' படத்தை பல முறை பார்த்து, அதிரடியாக நடிக்க பயிற்சி எடுத்து வருகிறாராம் நமீ!

ஆனாலும் குண்டான உடம்பை அம்மணி எப்படி குறைக்கப்போகிறது என்று மச்சான்கள் கவலைப்படுவது நமீக்கு புரியாமலில்லை. அதனால்தான் நுங்கம்பாக்கத்தில் உள்ள தனது வாடகை வீட்டில் லட்சக்கணக்கான ரூபாய் செலவில் உடற்பயிற்சி கருவிகளை வாங்கி குவித்து விட்டு, இப்போ தினமும் இரண்டு மணிநேரம் கடுமையான உடற்பயிற்சி செய்து உடம்பை குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறாராம்.

இதற்கு உணவு கட்டுப்பாடு மிகவும் முக்கியம் என்பதால், தனக்கு பிடித்த சாம்பார் இட்லிக்கும், பெப்பர் சிக்கன் கிரேவிக்கும் டாட்டா காட்டி விட்டாராம்.

# தனுஷ் இந்திப்படம் குளிர்காய்ச்சல்...



தனுஷ் இந்தியில் ஹீரோவாக நடிக்கும் படம் 'ராஞ்சா'. தனுஷ்க்கு ஜோடியாக சோனம் கபூர் நடிக்கிறார். ஆனந்த எல். ராய் படத்தை இயக்க, இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார்.

இப்படத்தின் முக்கிய காட்சிகளை தற்போது டெல்லியில் படமாக்கி வருகிறார்கள். குளிர்க் காய்ச்சலால் அவதிப்பட்டு வந்த தனுஷ் நீண்டகால ஓய்விற்குப் பிறகு மிகவும் சுறுசுறுப்பாக படத்தில் நடித்து வருகிறார்.

# எல்லாம் காசுக்குத் தாண்ட

# ஆனா ஆவன்னா எழுதும் திவ்ய



என்னைப் படவுலகில் ஏற்றி விடுகின்ற மாதிரி ஒரு படம் செய்ய வேண்டும் எ
நல்ல ஒரு தமிழ்ப் படத்தில் நடித்தாக வேண்டும் என நினைக்கிறேன் என்று
சொல்லுகிறார் திவ்யா பண்டாரி. மும்பை நடிகையான இவர் ஊலலலாவில்
எதிர்பார்ப்புகளுடன் நடித்தார். ஆனால் படம் நன்றாக போகவில்லை இதன
தமிழில் திவ்யா எடுபடவில்லை. அதனால் இன்னொரு வாய்ப்புக்காக காத்
திவ்யா.

திவ்யா அப்பா ஒரு மராத்தி மற்றும் குஜாராத்தி பட இயக்குநர்.
படவுலக விஷய ஞானம் புரிந்த திவ்யாவுக்கு தமிழில் நடித்துத்
நடிகை என்ற பெயர் வாங்க முடியும் என்பதும் அதையே ஏணி
பயன்படுத்தி மும்பை படவுலகுக்குத் தாவ முடியும் என்பதும்
தெரிந்திருக்கிறது. இதன்மூலம் சத்தான, வித்தியாசமான கதைத்
தளங்களில் நின்று சத்தான திரைக் கதை, வசனங்கள் அமைத்த
காரமுள்ள படங்களை தமிழர்கள் தான் படைக்கிறார்கள் என்பது தெ
நாமும் சந்தோஷப்படலாம்.

வடநாட்டுக்காரியான திவ்யா இப்போது தமிழ் கற்று வருகிறாராம் ''ந
தமிழ்ப் படங்களைப் பார்க்கிறேன் நிறைய தமிழ் நண்பர்கள் நெட்வேர்
ஏற்படுத்தி வருகிறேன். தமிழ்ப் படவுலகின் ஜாம்பவான்களுடன் பழகு
வாய்ப்புகளை ஏற்படுத்தி வருகிறேன். இதன் மூலம் நினைத்ததை சா
முடியும் என்று நம்புகிறேன்' என்கிறார் பண்டாரி.

ஐஸ்வர்யாவும் இருவர் படத்தில் ஜெயலலிதாவாக நடித்து பின்
சென்றவர்தானே!

# டிஜிட்டல் வடிவத்தில் திருவிளையாடல்

கர்ணன் டிஜிட்டல் ஒப்பனையுடன் வெளியிடப்பட்டு படு வெற்றி பெற்ற பின்னர் பழைய படங்களை டிஜிட்டல் ஒப்பனையில் மறு வெளியீடு செய்யும் காய்ச்சல் கொலிவூட்டைத் தொற்றிக் கொண்டிருக்கிறது. பலரும் பல படங்களைக் குறிப்பிட்டு இவை எல்லாம் டிஜிட்டல் குளியல் செய்து விட்டு வந்தால் நன்றாக இருக்குமே என்று ஐடியா கொடுத்து வருகிறார்கள். ஆயிரத்தில் ஒருவன், எங்க வீட்டுப் பிள்ளை, பராசக்தி, நாடோடி மன்னன் என்று படப் பட்டியல் நீள்கிறது.

இவை எல்லாம் டிஜிட்டல் முறையில் மாற்றம் செய்யப்படுமானால் நன்றாகத் தான் இருக்கும். ஆனால் பட உரிமை, விலை, விநியோகம், எனப் பல சிக்கல்கள் உள்ளன. ஏனெனில் இப் படங்களைத் தயாரித்தவர்கள் எவரும் இன்று உயிருடன் இல்லை. இரண்டாவது, மூன்றாவது தலைமுறையினரில் யார் யாரிடம் சட்டபூர்வமான உரிமம் உள்ளது என்பதில் இருந்து ஏராளமாக சிக்கல்களைத் தீர்த்தாக வேண்டும்.

கர்ணன் வெளியீட்டில் இந்தச் சிக்கல் எதுவுமே கிடையாது. தயாரிப்பாளரின் மகனே இதை வெளியிட்டார். இப்போது ஏ.பி. நாகராஜனின் மகன் பரம் தன் தந்தை இயக்கிய படங்களுக்கான 'கிரியேட்டிவ்' உரிமை இருப்பதால் அவர் 1966ம் ஆண்டு வெளியாகி 25 வாரங்கள் வெற்றிகரமாக ஓடி சாதனை படைத்த திருவிளையாடலை டிஜிட்டல் முறையில் மறுசீரமைத்து விரைவி-லேயே வெளியிடவுள்ளார்.

திருவிளையாடலின் திருத்தப்பட்ட சில பகுதிகளை சிவாஜியின் மகன் ராம்குமாருக்கு சமீபத்தில் போட்டுக் காட்டினாராம் பிரேம். உடல் புல்லரித்துப் போன அவர் புதுப்படம் ஒற்றைப் பார்ப்பது போல் அல்லவா இருக்கிறது என்றாராம்.



திருவிளையாடலுக்குப் பின் தில்லானா மோகனாம்பாள், ராஜராஜ சோழன் ஆகிய சிவாஜி படங்களும் டிஜிட்டல் குளியல் எடுக்கப் போகின்றன என்ற தகவலையும் சொல்கிறார் பிரேம்.

ஏ.பி. நாகராஜன் 49 வயதில் இறந்துபோனார் சிவாஜியை வைத்து மாத்திரம் 16 திரைப்படங்களை அவர் இயக்கியிருக்கிறார். திருவிளையாடல் நிச்சயம் படுவெற்றி பெறும்.

# சமந்தாவின் தேன்மழை!

சரும நோய்க்காக ரகசிய சிகிச்சை பெற்ற சமந்தா, முழுமையாக குணமடையாத நிலையில், 'நீதானே என் பொன்வசந்தம்' விழாவுக்கு வந்தார். அவரைப் பார்த்து அனைவரும் ஆச்சரியமடைந்தனர். இதையடுத்து அப்படத்துக்கான டப்பிங்கிலும் கலந்துகொண்டார். சமந்தாவுக்கு நல்ல குரல்வளம். படப்பிடிப்பு ஓய்வு நேரத்தில் தனக்கு பிடித்த பாடல்களை மென்மையாக பாடுவார். வெளியாட்கள் யாராவது கேட்டால் பாடுவதை சட்டென்று நிறுத்திவிட்டு, வெட்கத்துடன் சிரிப்பார்! சொந்தக் குரலில் இனி அவர் பாடலாம்.

# இந்தியில் கொடிக

# முயற்சியில் இலிய



தென்னிந்திய சினிமாவில்
பிரபலமாகும் ஒவ்வொரு
நடிகைக்குமே அடுத்து பாலிவுட்டில்
கொடியேற்ற வேண்டும்
என்பதுதான் தீராத கன
இருக்கும். அந்த வ
ஸ்ரீதேவிக்கு பிறகு பல
இங்கிருந்து இந்தி
சென்றதில் அசின் பெ
தற்போது புகழ் பெற்
அதனால் அடுத்தடு
அவர்வால், தமன்னா
நடிகைகள் இந்தியில்
கவனம் செலுத்தி வருகி
இதற்கிடையில் நண்பன் ப
நடித்த இலியானாவும்
படத்தை முடித்த கை
இந்தியில் ரன்பீர் கபூர் நடித்த
படத்தில் நடித்தார். படம்
பெற்றதோடு இலியானாவின் ந
அங்குள்ளவர்களை வெகு
கவர்ந்து விட்டது. இதனால்
புதிய படங்களை கைப்பற்றும்
முயற்சியில் இறங்கியிருக்கும்
இனி அசினைப்போன்று மும்பை
தங்கி முழுநேர இந்தி நடி
போவதாகக்

# பிந்து மாதவியின் சில்க் கண்கள்



அசப்பில் சில்க் ஸ்மிதாவின் சாயலிலும் கிக் ஏற்றும் கண்களுடனும் இருக்கிறார் பிந்து மாதவி. கண்களை இவ்வளவு கவர்ச்சியாக வைத்திருக்கும் அவரை தேடிக்கண்டுபிடித்த பாண்டிராஜ், தனது இயக்கத்தில் உருவாகும் 'கேடி பில்லா கில்லாடி ரங்கா' படத்தில், விமல் ஜோடியாக நடிக்க வைத்துள்ளார். பிந்துவின் கண்களுக்கு மட்டும் சில காட்சிகளில் குளோசப் ஷாட் வைத்துள்ளேன் என்ற பாண்டிராஜ், 'அழகிய அசுரா' படத்தில் நடித்த ரெஜினாவை சிவகார்த்திகேயன் ஜோடியாக நடிக்க வைத்திருக்கிறார்.

# தில்லுமுல்லு



பழைய படங்களை ரீமேக் செய்வது பில்லாவின் வெற்றிக்கு பின்னரும், கர்ணனின் வெற்றியையடுத்து பழைய படங்களை டிஜிட்டல் முறையில் புதுப்பிப்பதும் ஒரு விஷக்காய்ச்சல் மாதிரி கோடம்பாக்கத்தைப் பீடித்திருக்கிறது. பாலசந்தரின் தில்லுமுல்லு இப்போது மறுபடியும் தயாராகி வருவது உங்களுக்குத் தெரியும்.

ரஜினி நடித்த வேடத்தில், 'தமிழ்ப்படம்' சிவா தோன்றுகிறார். மாதவி நடித்த வேடத்தில் இஷா தல்வார் நடிக்கிறார். தேங்காய் சீனிவாசன் கலக்கிய பாத்திரத்தை பிரகாஷ்ராஜ் கையில் எடுத்திருக்கிறார். சௌகார் ஜானகி வேடத்தில் கோவை சரளா, சத்யன், மனோபாலா, பிரம்மானந்தம், இளவரசு, டாக்டர் சீனிவாசன் என ஒரு பட்டாளமே நடித்திருக்கிறது.

கண்ணதாசன், வாலி பாடல்களுக்கு எம்.எஸ் விஸ்வநாதன், யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார்கள். தில்லுமுல்லு தில்லுமுல்லு... ராகங்கள் பதினாறு... ஆகிய இரண்டு பாடல்களையும் எந்த மாற்றமும் செய்யாமல் நவீன வாத்தியங்களை பயன்படுத்தியிருக்கிறோம் என்றார் இயக்குனர் பத்ரி.

# கீர்த்தியின் வேதனை



புதுப்பட வாய்ப்பு கிடைக்காததால் விரக்தி அடைந்த கீர்த்தி சாவ்லா, சென்னையை காலி செய்து விட்டு, மும்பையை தளமாக் கொண்டுவிட்டாராம் என்று யாரோ வதந்தி பரப்ப நொந்து நூடுல்ஸாகி விட்டார் அம்மணி. தேவயானி கணவர் இராஜகுமாரன் ஜோடியாக 'திருமதி தமிழ்' அஷ்வின் சேகர் ஜோடியாக 'நினைவில் நின்றவன்' படங்களில் நடிச்சிருக்கேன். ரெண்டு படமும் எனக்கு வாய்ப்பாக அமையும். தமிழில் நீடிக்க வேண்டும் என்பதால்தான் வட பழனியில் ஒரு வாடகை வீடு பார்த்து தங்கியிருக்கேன். என்னைப்போய் மும்பைக்கு ஓடிப்போனதாக பற்றவைக்கலாமா? என்று வேதனைப் புன்னகை காட்டுகிறார் கீர்த்தி! ஐயோ பாவம்!

# அய்யோவாகிப்போன ரகசியா





அய்யோ பாவம் என்றாகி விட்டார் கவர்ச்சிப் புயல் ரகசியா. கதாநாயகி ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் சினிமாவில் நுழைந்த அவருக்கு பேரதிர்ச்சி. குத்துப்பாட்டுக்கு ஆட்டம் போடுகிற வாய்ப்பு மட்டுமே கிடைத்தது. ஆனால் கதாநாயாகிகள் கவர்ச்சிக் குத்துப்பாட்டுகளுக்கும் ஆட ஆரம்பித்ததில் ரகசியா பிழைப்பில் மண் விழுந்தது.

இந்நிலையில், மும்பையிலுள்ள வீட்டில் சில மாணவர்களுக்கு ட்யூஷன் எடுத்து குடும்பத்தை நிர்வகித்து வந்தார். ரகசியா இப்போது அதையும் விட்டுவிட்டாராம். ஷூட்டிங் இல்லாமல் வீட்டிலேயே இருந்ததால் அவரது உடம்பு குண்டாகி விட்டது. அதை மெலிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். பாவமாக இல்லை?

# கவி முற்றம்



## வேரைப்பாடும் விழுதுகள்

நிலத்தில்
நிமிர்ந்து நிற்க உனக்கு
மூன்றாவது கால்
தேவையாயிருக்கிறது

ஒரு நூற்றாண்டுக்கு முந்திய
உன் குலப் பெருமைகள்
உன் கூனலை நிமிர்த்தா
உணர்ந்து கொள்ள உனக்கு
காலம் வரும்

உன் பூட்டன் காலத்து
வயற்காணி பற்றியும்
அவரிடத்து அண்டியிருந்த
அடிமைகள் பற்றியும் நீ
பழம்புகழ் பாடி
உன்னை நிலை நிறுத்த
முயற்சித்துப் பார்க்கிறாய்.

உன் மூதாதையர் காலத்து
முப்பதேக்கர் விளை நிலங்களும்
ஒரு டசின் ஏவலாளர்களும்
இன்று எங்கே?

உன்னிடத்தில்
அதன் எச்சங்கள்
ஒன்று கூட இல்லாமல்
பழைய பல்லவிபாடுவதால்
நீ என்றும்
ஜனரஞ்சகப் பாடகனாய்
அங்கீகரிக்கப்பட முடியாதவன் தான்

வேரைப்பாடும்
ஒரு விழுது நீ
அரச மரத்தை நீ
ஆழ்ந்து சிந்தித்ததுண்டா?

ஆலின விழுதுகள்
வேர்களோடு ஒத்துழைக்க
விருட்சத்தை
விஸ்வரூபமெடுக்கச் செய்வதை
நீ எப்போது
உணர்ந்துகொள்வாய்

- சம்மாந்துறை,
மஷூறா



## என் தாய்

நிலாச் சோற்றுடன் சேர்த்து சோற்று
பருக்கைகளை கையில் குழைத்து
என் வாயில் ஊட்டும் போது
அவளின் விரல்களை

எனக்கு உணவு வேண்டாம் என்று
கோபமாய் கடிப்பேன் - அவளோ
குழந்தைக்கு எவ்வாறு பசி
பாருங்கள் என்று மேலும் ஊட்டுவாள்
அவள் அன்பை உணவாக.

- டி. ஸாபி,
வவுனியா

## மாணிக்கமாவாய்



ஏ... மாந்தரே
தாகத்தை
தண்ணீரால் அடக்கு
சோகத்தை
மவுனத்தால் அடக்கு
காமத்தை
மனசால் அடக்கு
விரக்தியை
விவேகத்தால் அடக்கு
விசனத்தை
அமைதியால் அடக்கு
பகையை
அன்பால் அடக்கு
உள் மனதை
ஒழுக்கத்தால் அடக்கு
உன் வாழ்க்கையை
அறிவால் அடக்கு
மனிதர்களில் நீ
மாணிக்கமாவாய்!

- கல்லொளுவை,
பாரிஸ்



## வாழ்வெனும் விதி

நெருப்பென இருந்து விட்டால்
சாகும்வரை அடுப்படியோடுதான்
காலத்தைக் கழிக்க வேண்டும்
வாழ்க்கையென இறங்கி விட்டால்
சோதனையும் வேதனையும்
தாண்டித்தான் ஆக வேண்டும்
தாகம் வந்தால் தண்ணீரைக் குடி
சோகம் வந்தால் பாட்டுப்பாடு
எழுதும் பேனாவுக்கு மை முடிந்தால்
புதிய மை விடு
ஆனால் வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல
நல்லதோ கெட்டதோ
இன்பமோ துன்பமோ
வாழ்ந்தே ஆக வேண்டும்
இது தான் விதி

லோ. டிஷா, வட்டக்கச்சி

## காதல் வலி




நான் உயிரோடு
உள்ளவரை
உன் உறவோடு
வாழும் வரை
உன்னை சுவாசித்து
கொண்டே இருப்பேன்
இல்லை நேசித்து
கொண்டே இறப்பேன்

க. சகீலாபேகம்,
ஏறாவூர் - 02.

## நட்பு

வலிகண்ட இதயம் கதறினாலும்
வார்த்தைகள் மொழியின்றிக் கலங்கினாலும்
உணர்வுகள் உணர்வின்றி உறங்கினாலும்
உடலை விட்டு உயிர் கூடப் பிரிந்தாலும்
நாம் கொண்ட அன்பிற்கு ஈடு இணை
இல்லை தோழி...
நம் நட்பு என்றும் வாழ்க!

ந. கஜேந்தினி,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.



## பாவம் போக்குவாய்

பாவங்களை சுமந்தவளாய்
உன் பாதம் தேடுது
என் இரு விழிகள்

மனப்பாரங்களை சுமந்த
என் இதயம்
இன்று மண்டியிட்டு
கிடக்கிறது உன் முன்னே
இறைவா அருள்வாய்!

தவமிருந்து பெற்ற மகள்
நானல்லவா! உன்
தவிப்பால் ஒரு கணம்
தாமதித்து நின்றேனே
உன் அன்பின்றி,
இறைவா, அருள் புரி!

வாழ்வினின்று
பிரியாவிடைக்கேட்டு
உன் வசமாகி வந்துள்ளேன்.
விரைவில் போடு எனக்கு
விண்ணப்பம்
விரைந்து வரவே உன்னிடம்

விளக்கிச் சொல்ல முடியமா
உன் பெருமையை
விம்மி புலம்புகின்றேன் - என்
பாவங்களை கரைப்பாயா?
பார்ப்பவனே என்
பாவக்கறை அகழுமோ?

எம்.எச்.எப். ஸஹாரா
கட்டுகொடை, காலி.

## பாழும் மனங்கள் திருந்தாதோ!



மனித உணர்வுகள் விழிக்காதோ!
மடைமைச் செயல்கள் மறையாதோ
புனித உறவுகள் மலராதோ!
புவிதனில் இன்பம் பிறக்காதோ

இதயத்தில் கருணை சுரக்காதோ
இனங்களின் சண்டை ஓயாதோ
முதலைக் குணங்கள் மாறாதோ
மூர்க்கர் தொல்லைகள் நீங்காதோ

அகமதில் உண்மை ஒளிராதோ
அவலங்கள் அகன்று போகாதோ
இகமதில் தருமம் வளராதோ
இறையவன் கிருபை கிடைக்காதோ

அன்பு நெஞ்சங்கள் பெருகாதோ
ஆறாத் துயர்கள் ஒழியாதோ
பண்புடை வாழ்வு அமையாதோ
பாழும் மனங்கள் திருந்தாதோ

- என்.எம்.எம்.பாறூக், ஏறாவூர்



## பொற்காலம்

காதல் கொள்ள
அழகு வேண்டாம்
அன்பான மனமும்
பொறுமையான குணமும்
போதும்!
வாழ்வின் வெற்றிக்கு
முற்று இல்லாத உழைப்பும்
வினா இல்லாத
மன உறுதியும் போதும்!
வரும் காலம் யாவும்
கனா இல்லாத காலங்கள்
என்றும் பொற்காலமாய்
அமையும்!

- சா.டினேஸ்கிறிஸ்ரி,
பறப்பாங்கண்டல், மன்னார்

### வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com



# அர்த்தம் புரியாமலேயே மந்திரங்களையும் சடங்குகளையும் நாம் ஏன் மேற்கொள்கிறோம்?

உதய சங்கர்

**ஆதி** மனிதன் தன் அறிவு வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் செய்த புராதன மந்திரச் சடங்குகள் இன்றும் நமது வீடுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

அறிவியலின் அற்புதங்கள் எதுவும் சமயத்தின் ஆதிக்கத்தை அசைக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல: மக்களின் பொதுப்புத்தியில் பரம்பரை பரம்பரையாக இந்த மந்திரச் சடங்குகள் சொல்லப்பட்டு கல்வெட்டு போல பதிந்திருப்பதும் ஒரு காரணம். மக்களின் பொதுப்புத்தியில் தலையிடாத வரை இந்த விதமான மந்திரச் சடங்குகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

நான்கு வகையான மந்திரச் சடங்குகள் இருக்கின்றன என்றும் தூய மந்திரம், தீய மந்திரம், உற்பத்தி மந்திரம், பாதுகாப்பு-அழிப்பு மந்திரம், என்றும் மானிடவியலாளர் பிரேசர் வகைப்படுத்துகிறார்.

வீடுகளில் யாருக்கேனும் உடல்நிலை சரியில்லையென்றால் உடனே நேர்த்திக்கடன் செலுத்துவதாக வேண்டிக் கொள்வது இப்போதும் நடைபெறுகிற நிகழ்வு. மாரி நோய் வந்தவர்கள் மாரியம்மனுக்கு கண் உரு செய்து போடுவதாகவும், காலிலோ, மற்ற உடல் பகுதிகளிலோ வரும் நோய்கள் குணமாக அந்தந்த உடல் உறுப்புகளை செய்து காணிக்கையாகப் போடுகிற வழக்கத்தை நாம் இன்றும் காண்கிறோம்.

அதே போல குழந்தை இல்லாதவர்கள் குறிப்பிட்ட கோவில்களில் உள்ள மரங்களில் தொட்டில் செய்து போடுவதும் சாதகமான விளைவை உருவாக்கும் என்ற மந்திரச் சடங்கின் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றது. உண்மையான உடலுறுப்பை ஒத்த செயற்கையான உடலுறுப்பை செய்து கோவிலுக்குக் கொடுப்பது ஒரு சாந்தப்படுத்தும் வேலை. தொட்டிலில் தன்னுடைய குழந்தையைப் போட்டு ஆட்ட வேண்டுமென்பது எல்லாப் பெண்களினதும் ஆசை. அந்த ஆசையை கோவில் மரத்தில் பாவனையான பொம்மைத் தொட்டிலை தொங்க விட்டு குழந்தைப் பொம்மையை இட்டுக் கட்டி விடுவதும் பழைய மந்திர நம்பிக்கையின் எச்சம் தான்.

## தொத்து மந்திரம்:

சாதாரணமாக வெள்ளிக்கிழமைகளில் அனைவர் வீடுகளிலும் வாசலில் சூடம் எரிவதைக் காணலாம். இது வியாபார ஸ்தலங்களிலும் நடக்கிறது. வீடுகளில் பெண்கள் நாலு சூடக் கட்டிகளை கைகளுக்குள் வைத்துக் கொண்டு வீட்டிலுள்ளோர் தலை, கை, கால், உடல், முழுவதும் மூன்று முறை சுற்றி தூ தூ தூ வென மூன்று முறை துப்பச் சொல்லி வாசலில் கொண்டு போய் கொளுத்துவதை இப்போதும் பார்க்கலாம்.

அதே போல குழந்தைகளை அலங்காரம் செய்து கன்னத்தில் கருப்பாகத் திருஷ்டிப் பொட்டு வைத்து விடுவது, ஒரு கையில் உப்பையும், ஒரு கையில் மிளகாயையும் வைத்து உடல் முழுவதும் தடவி எரிகின்ற அடுப்பில் போடுவது, அப்படிப் போடும்போது ''ஊர்க்கண்ணு, உறவுக்கண்ணு, பாவிக்கண்ணு, பரப்பாக்கண்ணு, நாய்க்கண்ணு, நரிக்கண்ணு, எல்லாக்கண்ணும்...'' என்று சொல்வதும், அடுப்பில் போடுகிற உப்பும், மிளகாயும் வெடித்துச் சிதறுகிற போது ''பார்த்தியா, எவ்வளவு கண்ணேறு பட்டிருக்கு..'' என்று சொல்வதும் இன்றும் நடக்கும் ஒன்று.

அதே போல முச்சந்தியில் பிடி மண்ணை எடுத்து தலை சுற்றி அடுப்பில் எறிவதும், கோழி முட்டையை தலை சுற்றி வீதியில் எறிவதும், பூசணிக்காயைச் சுற்றி நடுச்சாலையில் போட்டு உடைப்பதும், கன்றை ஈன்ற பசுவின் நஞ்சுக்கொடியை பால் வடியும் மரங்களில் கட்டித் தொங்க விடுவதும், தொத்து மந்திரம் என்ற சடங்கின் எச்சம் தான்.

## பாதுகாப்பு மந்திரம்:

இயற்கையின் உற்பாதங்கள் மற்றும் கண்ணுக்குத் தெரியும் மற்றும் தெரியாத எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக, புதுக்கட்டிடங்கள் கட்டும் போது பூசணிக்காயைக் கட்டுவது, அகோரமாய் வைக்கோல் பொம்மை செய்து கட்டுவது, சீனிக்காரம், மிளகாய், எலுமிச்சம்பழம் இவற்றைக் கோர்த்து வண்டிகளில் கட்டுவது, காத்துக்கருப்பு அண்டாமலிருக்க கறுப்புக்கயிறை கையிலோ, காலிலோ கட்டுவது, கர்ப்பிணிப் பெண்கள் வெளியே செல்லும் போது வேப்பிலை, அடுப்புக்கரி, இரும்புத் துண்டு போன்றவற்றை கொடுத்தனுப்புவது, எல்லாம் பாதுகாப்பு மந்திரமாகும்.

நோய்கள் குணமாகவும் நினைத்த காரியம் பலிதமாகவம் தெய்வங்களுக்கு மிருகங்களை, பறவைகளைப் பலி கொடுப்பதாக நேர்ந்து கொள்வது, தீமையை மாற்றித் தருகிற மந்திரமாகும். மழைக்காக கொடும்பாவி எரித்தலும் இத்தகைய மந்திர சடங்கே. தீமைகளை எரித்து நன்மைகளைப் பெறவே இத்தகைய பலிகள் தரப்படுகின்றன. இன்றைய கொடும்பாவி எரிப்பையும் இந்த மந்திரச் சடங்கின் எச்சமாகவே கொள்ளலாம்.

## தச்சுக் கழித்தல்:

ஆவிகள் உறைந்திருக்கும் காடுகளிலிருந்து மரங்களை வெட்டியெடுத்துக் கொண்டு வந்து கட்டடங்கள் கட்டும் போது அந்த மரங்களுடன் அந்த ஆவிகளும் சேர்ந்து வந்து கட்டடங்களில் குடியேறிவிடும் என்பது பழைய நம்பிக்கை. அந்த ஆவிகளை வெளியேற்றவே தச்சுக்கழித்தல் என்ற சடங்கு செய்யப்படுகிறது. கட்டிடங்களில் வேலை செய்த தச்சரே அந்தச் சடங்கைச் செய்கிறார். கோழியின் தலையை அறுத்து அதன் ரத்தத்தை நிலை, கதவு, ஜன்னல், மற்ற மரவேலைகள் உள்ள இடங்களில் தடவுவதின் மூலம் மரங்களின் வழியாக வந்த ஆவிகளுக்கு ரத்தவாடை காண்பித்து வெளியேற்றுகிற சடங்கு தான் தச்சுக்கழித்தல்.

இந்தச் சடங்குகள் எல்லாம் ஆதியிலிருந்தே சிற்சில மாற்றங்களுடன் இன்று வரை தொடர்ந்து கொண்டேயிருக்கும் புராதனச் சடங்குகள். இவற்றில் பிராமணமதத்தின் சடங்குகளும் கலந்து குழம்பியிருக்கின்றன. இன்றளவும் இந்தச் சடங்குகளில் பெரும்பாலானவை வெகுமக்களால் தீவிரமாக பின்பற்றப்படுகின்றன. அர்த்தமற்ற இந்தச் சடங்குகளின் தாத்பரியம் பற்றித் தெரியாமலேயே நமது வீடுகளிலும், அலுவலகங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நாமும் மௌன சாட்சிகளாக மக்களின் பொதுப்புத்தியில் தலையிடும் திட்டங்களின்றி அமைதியாக இருக்கிறோம். அறிவியலின் மகத்தான சாதனைகள் எதுவும் மக்களுடைய பொதுப்புத்தியில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மக்களின் பொதுப்புத்தி என்பது தர்க்க சாஸ்திரத்தையோ, நிருபணங்களையோ, எதிர்பார்ப்பதில்லை.

இதற்கு நம்பிக்கை மட்டுமே போதுமானது. மக்களின் பண்பாட்டை ஒவ்வொரு தலைமுறைக்கும் கடத்திக் கொண்டு போவது இந்தப் பொதுப்புத்தி தான் என்பதை நாம் உணர்ந்தோமானால் இதன் முக்கியத்துவம் புரியும். பழைய நம்பிக்கைகளில் நாம் தலையிடுவதென்பது பழைய பிற்போக்கான பண்பாட்டு விழுமியங்களில் தலையிடுவதென நாம் உணரவேண்டும். அப்போது இத்தகைய சடங்குகளின் காலப்பொருத்தமின்மை குறித்து நாம் மற்றவர்களுக்கு விளக்க வேண்டும். அதன் மூலம் மக்களின் பொதுப்புத்தியில் புதிய அறிவியல்பூர்வமான தர்க்கஞானத்தை உருவாக்க முடியும். இல்லையென்றால் அரசியல் முற்போக்காகவும், பொதுப்புத்தியில் பிற்போக்கான மக்கள் திரளோடு நாம் எதிர் நோக்கும் உன்னத லட்சியத்தை அடைவதற்கு மிகுந்த காலதாமதமாகும்.

புதிய பண்பாட்டு மேலாண்மைக்கான பயணத்திசையில் பயணம் துவங்க வேண்டிய தருணம் இது. அதற்கான வேலைத் திட்டங்களை உடனடியாக உருவாக்க வேண்டும்.

**நன்றி: இணையம்**



**வேலைக்காரி:** எஜமான் நல்ல கலா ரசிகர்மா...

**எஜமானி:** உனக்கு எப்படித் தெரியும்?

**வேலைக்காரி:** நான் நேற்று குளிக்கும்போது கண் சிமிட்டாமல் பார்த்திட்டு இருந்தாரே..!

- குகதீசன், நெடுங்கேணி



**கணவன்:** எனக்கு ஒபரேஷன்ல ஏதாவது ஆச்சுன்னா, நீ டொக்டரை கல்யாணம் பண்ணிக்கோ.

**மனைவி:** ஏன் இப்படிப் பேசுறீங்க?

**கணவன்:** டொக்டரை பழிவாங்க எனக்கு வேற வழி தெரியலை.

- தனு, யாழ்ப்பாணம்



**அப்பா:** டேய், இந்த பரீட்சையில் மட்டும் நீ பெயிலாகிட்டா... அப்புறம் என்னை அப்பான்னு கூப்பிடாத!

**பேரன்:** டாடி... இது ஒண்ணும் DNA டெஸ்ட் இல்லையே...

- தனு, யாழ்ப்பாணம்



**பாட்டி:** டேய், சீக்கிரம் வீட்டுக்குள் போடா. உங்க டீச்சர் தெருவில் போறாங்க. பார்த்தாங்கன்னா நீ லீவ் போட்டதைப் பற்றி கேட்பாங்க...

**பேரன்:** முதல்ல நீ உள்ளே போ! நீ மண்டையை போட்டதா சொல்லித்தான் நானே லீவ் போட்டேன்.

- நதி, கண்டி

# ஜன்னலுக்கு வெளியே...




சரியான விடை:

**ரிச்சா**

1. பிரியா- கொழும்பு
2. அபி- கொக்குவில்
3. டீ. கோபிகா- சுழிபுரம்
4. எப்.நுஸ்ரா- கண்டி
5. கே. சசிகலா- நோர்வூட்
6. அஸ்ரா பானு- கொலன்னாவை
7. எப். மில்லா- வெலிகமை
8. எஸ். பிரமிளா- அக்கரைப்பத்தனை
9. ஆர். மோனிஷா- றைகம் கீ/பி
10. சரண்- வரக்காபொல
11. ரூபா- ஹபுகஸ்தலாவ
12. அனூஸ்- மருதமுனை
13. பாயிமா- ஏத்தாலை
14. ரிஸ்வான்- பத்தாம்பிட்டிய
15. ரதி- கிளிநொச்சி
16. நிரோஷா- இறக்குவானை
17. டீ பிரதீபா- திருக்கோயில்
18. டீ. விஜந்தினி- வவுனியா
19. திலராணி- எல்லவத்தை
20. பிரசான்- புசல்லாவை
21. டீ- பிரதீபா- திருக்கோயில்
22. அஸ்கியா- அக்கறைப்பற்று-04
23. எஸ்.சுஜி- வவுனியா
24. ஜி. கேதீஸ்வரி- எட்டியாந்தோட்டை
25. ஏ. தினேஷ்- தன்னாமுனை
26. ஹசீனா- ஓட்டமாவடி-01
27. நுஸ்கியா- நிந்தாவூர்
28. வை. லாவண்யா- செக்கட்டிபுலவு
29. பிரதீப்குமார்- கண்டி
30. லஷ்மிப்பிரியா- மட்டக்களப்பு

## கே. எஸ். சிவகுமாரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது




கொடகே தேசிய சாகித்திய வருடாந்த விருது வழங்கும் விழா தமிழ் - சிங்கள எழுத்தாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பு 7 ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. கௌரவம் பெற்ற (இடமிருந்து) பேராசிரியர் விமல் ஜீ. பலகல்லே, திருமதி ஜீன். அரச நாயகம், கே.எஸ். சிவகுமாரன் ஆகியோர எழுத்தாளர் ஒன்றியத்தின் ஆலோசகர் சிறிசுமன கொடகேவுடன் இங்கு காணப்படுகின்றனர்.

*(படம் : ஏ. மதுரைவீரன்)*



இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் நான்காம் வகுப்பில், முதலாம் இடத்தைப் பெற்ற றைகம மேற்பிரிவு வாணி அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த தேவகுமார் நிலுக்ஷிக்கு இந்து சமய அலுவல்கள் திணைக்கள உறுப்பினர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.



**டாக்டர்:**
கடவுள் செயலால்தான் உங்கள் நோய் குணமானது.

**நோயாளி:**
அப்பா நான் உங்களுக்கு பீஸ் தர வேண்டியதில்லைதானே?

*- குகதீசன், நெடுங்கேணி*




## சொல் விளையாட்டு - ௨௨

சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

கராம்பு, புரவி, கம்பி, காரம். ரகசியம், புன்னகை

**மேலிருந்து கீழ்**

கடிகாரம், புகழ், ரம்பம், ரகளை, ரம்மி, சியான், சலுகை

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

1. எல்.சகாயமேரி
   நுவரெலியா
2. எம். ஹுசைனியா
   வறக்காப்பொல
3. ஆர். ரஜேந்திரன்
   பதுளை

## படம் சொல்லும் கதை



ரயில் சிநேகம் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நாற்றுமேடை (தவரணை) சினேகம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களா? படத்தில் இருக்கும் நாங்கள் ஏழு பேரும் கஹவத்தை பொறனுவை தோட்டத்தில் உள்ள தேயிலை நாற்றுமேடையில் ஒன்றாக வேலை செய்தவர்கள். இதில் அன்னக்கொடியும், ரதிசெல்வியும் ஸ்ரீமா-சாஸ்த்திரி ஒப்பந்தத்தின்படி 77ம் ஆண்டில் இந்தியா செல்ல தயாரானபோது ஒரு ஞாபகத்திற்காக கஹவத்தை சீதா ஸ்டுடியோவில் இந்தப் புகைப்படத்தை எடுத்துக்கொண்டோம். படத்தில் நிற்பவர்களில் லெச்சுமி, அன்னக்கொடி ஆகியோர் நின்றிருக்க, தயாவதி, கருணாவத்தி, எஸ். டீ. கே பெரேரா ஆகியோர் அமர்ந்துள்ளனர். எங்கள் ஏழு பேரிடமும் இப்புகைப்படம் ஞாபகச்சின்னமாக உள்ளது. எமது தவரணை சிநேகம், அன்னக்கொடி, ரதிசெல்வியின் இந்தியப் பயணத்தோடு முடிவடைந்து விடும் என்றுதான் கண் கலங்கினோம். ஆனால் எங்கள் அதிர்ஷ்டம், ராமனுஜம் கப்பல் சேவை நின்றுபோக, அவர்களின் பயணமும் நின்றுவிட்டது. திருமணமான பின்னரும் இன்றுவரை எங்கள் நட்பு அப்படியேதான் இருக்கிறது என்பது நான் பெருமைப்படும் விஷயம்.

**- கே. லெட்சுமி, கஹவத்தை**

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நிகழ்வுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எங்களுக்கு படத்தின் பிரதியுடன் அனுப்பி வைத்தால் அல்லது இமெயில் மூலம் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.




**ஆறு அதிர்ஷ்டசாலிகள்**

1. கே.வசந்தன் - மஸ்கெலியா
2. ஜி.சுகன்யா - வவுனியா
3. எஸ்.சாந்தகுமாரி - மத்துகமை
4. கே.விஜிதா - கொழும்பு 11
5. ஆர். விஜயகுமார் - ஹெரானை
6. கே.வத்சலா - வத்தளை



**குருவும் சிஷ்யனும்**

கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## குறுக்கெழுத்து போட்டி - 22

விடைகள்

**இடமிருந்து வலம்**

அரண்மனை, துன்பம், ராதிகா, காகம், ஜம்பம், சிரசு, சுழல், பவதாரிணி, பசு, பலகாரம், வேந்தன், சகி, ரம்பா, பாதசாரி, தணல், சிலம்பு, புலம், பிறர்

**மேலிருந்து கீழ்**

அராஜகம், ரதி, மகம், துளசி, பஞ்சு, பந்துகாபன், சிந்தாமணி, கம்பர், பாவம், பரபரப்பு, சுகன்யா, லக், வேதம், தரிசு, சதம், பாலம், சில, சுர்

**சரியான விடைகளை எழுதி பெயர் தெரிவான மூவர்**

1. வஸந்தா பாலேந்திரா
   கொழும்பு- 6
2. மிகாயா ஸ்பென்ஸர்
   கண்டி
3. திருமதி க. பாக்கியநாதன்
   கூமாங்களம்

நானும் என் யாழ். பயணங்களும் 21



தெளிவத்தை ஜோசப்

# இலக்கிய வித்தகன் செ.யோகநாதன்

யாழ் நோக்கிய இந்த இலக்கியப் பயணம் 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ம் திகதி தொடங்கியது.

கொச்சிக்கடை அந்தோணியார் கோவில் தாண்டி பூபாலசிங்கம் புத்தகசாலை சந்தியில் இலக்கியச் சந்திப்பு நடக்கிறது. ஏழெட்டு இலக்கியக்காரர்கள் குழுமிநின்றால் இலக்கிய சந்திப்புதானே!

நானும் கார்மேகமும், மோசசும் ஆமர் வீதியில் சந்தித்து பூபாபால சிங்கம் புத்தகசாலை நோக்கி பொடி நடைபோட்டபோது அதிகாலை ஆறு மணி இருக்கும். செ. யோகநாதன் தலை தெரிந்தது. தினக்குரலின் சிவநேசச்செல்வன், செ. யோவின் தனிமை போக்க சற்று முன்னதாகவே வந்துள்ளார்.

கொழும்பின் தமிழ் சிங்கள இலக்கியவாதிகளை யாழ் கூட்டிவரும் பொறுப்பினை புதுவை செ.யோவிடம்தான் ஒப்படைத்திருக்கின்றார் போலிருக்கிறது.

"வணக்கம் தெளிவத்தை ஜோசப்" சே. யோ என்னை கைகுலுக்கி வரவேற்ற அதேவேளை, வீரகேசரியும் தினக்குரலும் கட்டித் தழுவிக்கொண்டன.

குளிரூட்டப்பட்ட ஒரு சொகுசு பஸ் ஒன்று ஓரத்தில் நிற்கின்றது.

ஈழத்தை விடவும் தமிழகத்தில் கூடுதலாக பிரபல்யம் கொண்டிருந்தவர் செ. யோ. இலங்கையில் இவர் எழுதாத பத்திரிகையே இல்லை எனலாம்.

''என்னுடைய கதையைப் படிக்காமல், புரிந்துக்கொள்ளாமல் விமர்சனம் வைப்பவர்களைப்பற்றி எனக்குக் கவலை இல்லை"என்பார் செ.யோ. ''நான் ஒரு கருதுகோலை முன்வைத்துக் கொண்டுதான் என் கருத்துக்களை எனது படைப்புக்கள் மூலம் வெளிப்படுத்துகின்றேன். எனது கருதுகோளுடன் ஒத்துக்கொள்ளாதவர்கள் என்னை குறை கூறுவதுண்டு. அதற்காக நான் கோபிக்கமாட்டேன்" என்று கூறுவார் செ.யோகநாதன்.

கிட்டத்தட்ட ஒரு 15 வருடம் போல் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர் இவர். இலங்கையை விட தமிழ் நாடு பெரியது. நம்மைப் போல் அலலாமல் அவர்களுக்கு எக்கச்சக்கமான பத்திரிகைகள். அத்தனையத்தனை பத்திரிகைகளிலும் அவர் எழுதினார். ஒவ்வொரு நாளும் எழுதவேண்டி நிர்ப்பந்தம் தனக்கிருந்ததாக அவரே கூறியுள்ளார்.

சுருங்கக் கூறின் தமிழ் நாட்டுப் பத்திரிகை உலகில் ஒரு பத்தாண்டுக் காலம் கொடிகட்டிப் பறந்தவர்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து, பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, ஆசிரியர் தொழிலில் ஆரம்பித்து, உதவி அரசாங்க அதிபராக உயர்ந்து, தமிழ் நாட்டில் வசித்து என்று நிறைய அனுபவம் பெற்றவர் இவர். ஆகவே எழுதுவதற்கு நிறைய விடயங்கள் இருந்தன.

ஈழத்து வாழ்வு, இனப்போராட்டம், தமிழ்த்தேசியம், வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கைப் போராட்டம் என்று தமிழக எழுத்தாளர்களுக்கும், வாசகர்களுக்கும் ஒரு வித்தியாசமான அனுபவங்களை இவருடைய படைப்புக்கள் கொடுத்தன.

வியாபார மற்றும் இலக்கிய ஏடுகள் இவரை மொய்த்தன. அத்தனையையும் சமாளித்தார். ஆனாலும் ஈழத்து இலக்கியவாதி என்கிற கௌரவத்தைப் பாதுகாத்துக் கொண்டார்.

என்று தணியும், அகதி, அன்னையின் குரல், வீழ்வேன் என்று நினைத்தாயோ, கண்ணீர் விட்டே வளர்த்தோம் போன்ற சிறுகதைகள் மூலம் தமிழ்நாட்டு வாசகர்களைக் கட்டிப்போட்டவர்.

ஈழத்துச் சிறுகதை உலகிற்கு செ.யோவின் பங்களிப்பு பாரியது.

அடுத்தது இவருடைய குறு நாவல்கள். சிரித்திரன் குறுநாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'காவி யத்தின் மறுபக்கம்' கணையாழி நடத்திய தி.ஜானகிராமன் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற 'இரவல் தாய் நாடு', அஞ்சலியில் வெளிவந்த 'ஒளி நமக்குவேண்டும்' போன்ற நிறையவே குறுநாவல்கள் எழுதி யுள்ளார்.



இவருடைய குறு நாவல் தொகுதிகளாக

**இரவல் தாய்நாடு**
**கனவுகள் ஆயிரம்**
**காணி நிலம் வேண்டும்**
**ஒளி நமக்கு வேண்டும்**
**தலைவர்கள்**
**கேட்டிருப்பாய் காற்றே**
**சுந்தரியின் முகங்கள்**
**இனிவரும் வசந்தங்கள்**

ஆகியவை வெளிவந்தன.

ஒளி நமக்கு வேண்டும் குறு நாவல் தொகுதிக்காக இலங்கை சாகித்திய மண்டல பரிசினைப் பெற்றுக் கொண்ட செ.யோ, நான்கு தடவை சாகித்திய விருது பெற்றவர்.

சுந்தரியின் முகங்கள் தமிழக அரசின் விருதினையும்; மத்திய அரசின் விருதினையும் பெற்றுக் கொண்டது.

தமிழக அரசின விருதை நான்கு தடவையும்; உயர் விருதான இலக்கிய சிந்தனை விருதை நான்கு தடவையும்; கலை இலக்கிய பெருமன்ற விருதினை இரண்டு தடவையும், திருப்பூர் தமிழ்சங்க விருது- பாரத ஸ்டேட் பேங்க் விருது என்று தமிழகத்தின் இலக்கிய விருதுகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டவர்.

வெறுமனே கதை சொல்பவராக மட்டுமில்லாமல் இலக்கியத்தின் பன்முகத்துறைகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு இயங்கியவர்.

தமிழகத்தில் இருக்கும்போது எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதுவே அவர் என்னுடன் கொண்ட முதல் தொடர்பு.

தினகரனின் மு.கனகராஜன் மூலம் விலாசம் பெற்றேன் என்று கூறி இருந்தார்.

கடிதம் இப்படித்தான் ஆரம்பித்திருந்தது. 'அன்புள்ள தெளிவத்தை என்னை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நான் சே. யோக நாதன்...' என்று.

தான் 'இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சிறு கதைகள்' என்ற ஒரு பெரிய தொகுதியை 'வெள்ளிப்பாதசரம்' என்னும் பெயரில் வெளியிடப் போவதாகவும், எவ்வளவோ முயன்றும் கிடைக்காத ஆனால் சேர்த்தேயாக வேண்டிய சில கதைகளை நீங்கள் தரவேண்டும்' என்றும் எழுதி இருந்தார்.

முக்கியமாக பாலுமகேந்திராவின் 'வடிகால்' என்னும் கதை.

தேனருவி என்னும் சஞ்சிகையை அறுபதுகளில் நடத்தியவர் அருண் மொழித்தேவர். துணையாசிரியராக இருந்தவர் பா.மகேந்திரன் என்னும் பாலு மகேந்திரா. என்னிடம் தேனருவி இருந்தது. என்னுடைய இரண்டொரு சிறுகதைகளும் தேனருவியில் பிரசுரம் கொண்டன. எதுவித சிரமமுமின்றி 'வடிகாலை' அவருக்கு அனுப்பினேன். வேறு சில கிடைக்காத கதைகளும் பிறகு அனுப்பினேன். பாலு மகேந்திரா, லெனின் போன்ற திரையுலகப் பிரமுகர்களுடனும் இணைந்து செயலாற்றியவர் அவர்.

600க்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட இரண்டு தொகுதிகளை செ.யோகநாதன் வெளியிட்டார்.

ஏறத்தாழ ஈழத்தின் சகல எழுத்தாளர்களின் சிறுகதைகளையும் கொண்ட தொகுதிகள் இவை.

முதல் தொகுதியை இலங்கைச் சிறுகதையின் மூலவர்களில் ஒருவரான இலங்கையர்கோனைக் கௌரவப்படுத்தும் பொருட்டு அவருடைய முக்கியப் படைப்பான வெள்ளிப்பாதசரம் என்பதை முதல் தொகுதிக்கு இட்டுக்கொண்டார்.

அதேபோல் மலையக சிறுகதையின் முன்னோடியான என்.எஸ்.எம் ராமையாவைக் கௌரவிக்கும் முகமாக அவருடைய முக்கியப் படைப்பான ஒரு கூடைக்கொழுந்து என்பதையே தனது இரண்டாவது தொகுதிக்கான தலைப்பாகவும் தெரிவு செய்து கொண்டார். இந்த இரண்டாவது தொகுதியினை மலையகத்தின் முன்னோடிக் கலைஞரான சி.வி. வேலுப்பிள்ளைக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்.

இச்செயற்பாடுகள் என்னை அவருடன் நெருக்கமாக்கின. இலக்கிய வாசிப்பில் அவர் மிகவும் கைதேர்ந்தவர். அதுதான் அவருடைய இலக்கியப் பலமாகவும் இருந்தது. எனக்குத் தெரிந்த இன்னொரு அசுர வாசிப்பாளர் கவிஞர் ஏ. இக்பால்.

பிந்திய 90களில் - என் நினைவு சரி என்றால் 96ஆக இருக்கலாம்- செ.யோ இலங்கை வந்து சேர்ந்தார். கொழும்பு வாசியாக வெள்ளவத்தையில் இருந்தார். மீண்டும் அசுர எழுத்துப் பணிகள்.

எம்.டி. குணசேனாவின் தமிழ்ப் பதிப்புகளுக்குப் பொறுப்பாளராக முக்கிய பதவியில் அமர்ந்தார். நிறையவே தமிழ்ப் புத்தகங்களை குணசேனா மூலம் வெளியிட்டார்.

அப்போது தினகரன் வாரமஞ்சரியில் நீண்ட தொடர் கட்டுரையை ஆரம்பித்தார். கட்டுரையின் தலைப்பும் நீண்டதாகவே இருந்தது.

(தொடரும்)

# மண்ணடியில் மணிப்புலவரின் நூல் வெளியீடு

இலங்கைத் தமிழர்களான நாம் அடிப்படையில் தமிழகத்தை அண்ணாந்து பார்ப்பவர்களாகவே இருந்திருக்கிறோம்: இருக்கவும் செய்கிறோம். இலங்கை படைப்பாளிகளின் எழுத்துக்களை வாசித்து விளங்கிக் கொள்வதற்கு அடிக்குறிப்பு தேவை என்றும் இலங்கைத் தமிழர்களின் பேச்சு மொழி விநோதமாக இருக்கிறது என்றும் சொன்ன காலம் ஒன்றிருந்தது. எனினும் இன்றைக்கு நிலைமைகள் நிறையவே மாறிவிட்டன. அவர்கள் எம்மைப் புரிந்துகொள்ள ஒரு ஆயுத போராட்டமும் தேவையாக இருந்திருக்கிறது.

இலங்கையில் தமிழக நூல்களின் வெளியீடுகள் அவ்வப்போது நடக்கின்றன. நிறைய தமிழக நூல்களை தருவித்து நாம் வாசித்து மகிழவும் செய்கிறோம். இந்த உறவு அவசியம்தான். ஆனால் எமது நூல்களை தமிழகத்தவர்கள் பார்ப்பதே அரிது. இலங்கை படைப்பாளர்கள் எழுதி நாம் என்ன படிப்பது என்ற இறுக்கம் அவர்களிடம் இருக்கத்தான் செய்கிறது என்பது ஒருபுறம் இருக்க, நமது படைப்புகளை தமிழகத்துக்குக் கொண்டு செல்வதில் நாமும் அக்கறை காட்டுவதில்லை. நமது நூல்கள் தமிழகத்தில் வெளியிட்டு வைக்கப்படுவது அரிது. பெரும்பாலும் இத்தகைய வெளியீடுகள் வெறும் பாவனையாக-புகைப்பட நிகழ்வாக மட்டுமே அமைந்து விடுகின்றன.

இவ்வகையில் கடந்த செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பேரவை மற்றும் நிலா வட்டத்தின் ஏற்பாட்டில் சென்னை மண்ணடி தமிழ்நாடு முஸ்லிம் லீக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நூல் வெளியீடு முக்கியமானது.



மணிப்புலவரை கௌரவிக்கும் பேராசிரியர் காதர் மொகிதீன் மற்றும் கவிக்கோ

எமது மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் தினகரன் வாரமஞ்சரியில் தொடராக எழுதிய கட்டுரைத்தொகுப்பு 'தமிழ் மொழியின் பூர்வீக வரலாறு, செம்மொழி அந்தஸ்து, சீர்திருத்தங்கள்' என்ற நூலாக வெளிவந்திருக்கிறது. இந்நூலில் நூலாசிரியர் பல வாதங்களையும், ஆய்வுகளையும் முன்வைத்துள்ளனர். இவற்றில் சில விவாதத்துக்குரியவை. எனவே இது பெறுமதியான நூல்.



முதல் பிரதியை சேகு ஜமாலுதீன் கவிக்கோவிடம் இருந்து பெறுகிறார்.

இந்நூல் அன்றைய தினம் தமிழகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையில் எம்.ஜெயினுல் ஆபிதீன், எஸ்.எம்.கனி சிஷ்தி. கே.எம்.இஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் பல படைப்பாளர்கள், கவிஞர்கள், இலக்கிய அன்பர்கள் கலந்து கொள்ள நூல் வெளியீடு அறிமுகம் நிகழ்ந்தது.

நூலின் முதல் பிரதியை சேகு ஜமாலுதீன் (தலைவர் ஏ.எம்.எஸ்.கல்விக் குழுமம்) இந்திய ரூபா பத்தாயிரம் கொடுத்து வாங்கி நூலாசிரியரைக் கௌரவித்தார். பலரும் நூலை பணம் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள். நான் அறிந்த வரையில் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்வோர் பணம் செலுத்தி நூல் வாங்கிக் கொள்ளும் வழக்கம் தமிழக இலக்கிய வட்டத்தில் இல்லை என்றே கருதுகிறேன். அழைக்கப்பட்டவர்களுக்கு நூலாசிரியர் அல்லது பதிப்பித்தவர் நூலை அன்பளிப்பாகவே வழங்குவார். இது அவர் செலுத்தும் கௌரவம்.

வருகை தந்திருந்த பிரமுகர்கள் மருதூர் மஜீதைப் பாராட்டிப் பேசினார்கள். நூலின் உள்ளடக்கம் பற்றியும் குறிப்பிட்டனர். இது ஒரு நல்ல ஆரம்பம்: அறிமுகம். இது தொடர வேண்டும்.

- ஆனாரூனா

# குக்கீஸ் என்றால் என்ன?

பல்தேர்வு வினாக்கள் கொண்ட ஒரு இணையதளத்தைப் பார்வையிடுகிறீர்கள். முதல் வினா முதற் பக்கத்திலும் இரண்டாவது மூன்றாவது வினாக்கள் அடுத்தடுத்த பக்கங்களிலுமுள்ளதாக வைத்துக் கொள்வோம். இரண்டாவது பக்கதிற்குச் செல்லும்போது முதல் பக்கத்தில் இருந்த கேள்விக்கான விடையைத் தெரிவு செய்தவரே இரண்டாம் பக்கத்தை தற்போது பார்வையிடுகிறார் என்பதை அந்த இணைய தளம் சேமிக்கப்பட்டுள்ள வெப் செர்வர் அறிந்து கொள்கிறது. இவ்வாறு பல இணைய பக்கங்களிலுள்ள கேள்விகளுக்கு பதிலளித்த பின்னர் இறுதியாக அனைத்து விடைகளுக்குமான புள்ளிகளை மொத்தமாகச் சொல்லி விடுகிறது அந்த இணைய தளம். இது எவ்வாறு சாத்தியம்?

மேற் சொன்ன செயற்பாட்டின் போது வெப் சேர்வருக்கு உதவுகிறது எமது கணினியில் சேமிக்கப்பட்டிருக்கும் ஒரு சின்னஞ் சிறிய டெக்ஸ்ட் பைல். இதனையே குக்கீ எனப்படுகிறது.

சில இணைய தளங்களைப் பார்வையிடும்போது அந்த வெப் சேர்வர் ஒரு குக்கீ பைலை எமது கணினியின் ஹாட் டிஸ்கில் சேமித்து விடுகிறது. இதன் மூலம் அந்த குக்கீ பைலுக்குரிய நபர் நீங்கள்தான் என்பதை சேர்வர் நினைவில் கொள்ளும். இங்கு குக்கீ பைல் ஒரு அடையாள அட்டை போல் செயல்படுகிறது. மீண்டும் ஒவ்வொரு முறையும் ஒரு குறிப்பிட்ட தளத்தைப் பார்வையிடும்போது உங்கள் வெப் பிரவுசர் அந்த குக்கீயை சேர்வருக்கு அனுப்பி விடுகிறது. இதன் மூலம் வெப் செர்வர் அந்த இணைய தளத்தில் நுளைந்திருப்பது முன்னர் வந்து போன நபர்தான் என்பதை உறுதிப் படுத்திக் கொள்வதோடு அந்த இணைய தளத்தில் எந்த ஒரு பக்கத்தைப் பார்வை யிட்டுக் கொண்டிருந்தாலும் உங்களை சேர்வர் இனங்காணும்

முன்னர் பார்வையிட்ட ஒரு இணைய தளத்தை மறுபடியும் பார்வையிடும்போது குக்கீஸ் நமக்கு உதவுகின்றன. உதாரணமாக ஒரு பயனர் பெயரை குக்கீ பைலாக நமது கணினியில் சேமித்தவுடன் அந்த பயனருக்குரிய பாஸ்வர்ட், ஈ-மெயில் முகவரி, தற்போதைய தேர்வுகள் போன்ற வேறு விவரங்களை சேர்வரில் உள்ள தரவுத் தளத்தில் பதியப்பட்டு விடும். அந்த குக்கீயில் பதியப்பட்ட பயனர் பெயரைக் கொண்டு அவரின் பாஸ்வர்டை மறுபடியும் டைப் செய்யாமலேயே அவர் பற்றிய விவரங்களை அறிந்து கொள்கிறது. இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட இணைய தளத்திற்குள் ஒருவரின் செயற்பாட்டை அறிந்து கொள்ளவும் நேரத்தை சேமிக்கவும் முடியுமாயுள்ளது.

அவ்வாறே இணையம் மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போதும் (online shopping) அந்த தளங்கள் உங்களைப் பற்றிய விவரங்களை குக்கீஸில் போட்டு விடுகிறது. இதன் மூலம் அந்த தளங்களை மறுபடியும் பார்வையிடும்போது உங்கள் பெயர் விவரங்களை மறுபடியும் வழங்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

குக்கீஸ் இனையத்தில் உங்கள் செயற்பாட்டை அவதானிக்கவே உருவாக்கப்படுகின்றன.. ஒரு குக்கீயை உருவாக்கும்போது அவ்விணைய தளத்தின் பெயரும் அந்த குக்கீயில் பதிவாகிவிடும். அதன் மூலம் அந்த குக்கீயைத் திறந்து பார்க்க அவ்விணையத் தளத்திற்கு மட்டுமே அனுமதியளிக்கப்படும். ஏனைய தளங்களால் அந்த குக்கீயைப் பார்வையிட முடியாது.

சில இணைய தளங்கள் வியாபார நோக்கம் கொண்ட நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து அவர்களின் குக்கீகளை நமது கணினியில் சேமித்து விடும். இவை மூன்றாம் தரப்பு குக்கீ (Third party cookies) எனப்படும். இதன் மூலம் அவ்வியாபார நோக்கம் கொண்ட நிறுவனங்கள் தங்கள் குக்கீகளை பயன்படுத்துவோரின் இணைய செயற்பாட்டை அவதானிப்பதோடு அவர்களை இணையத்தில் பின் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதாவது நீங்கள் எவ்வாறான இணைய பயனர், உங்கள் விருப்பு என்ன, எவ்வகையான பொருட்களை இணையத்தின் வழியே கொள்வனவு செய்கிறீர்கள் போன்ற விவரங்களைப் பெற்றுக் கொள்ளும்.

எடுத்துக் காட்டாக ஒரு இணையத் தளத்திலிருந்து ஒரு டிஜிட்டல் கேமராவை வாங்கி விடுகிறீர்கள். அப்போது குக்கீயைப் பகிர்ந்து கொள்ளும் வேறு நிறுவன இணைய தளங்களும் கேமரா போன்ற வேறு இலத்திரனியல் சாதனங்களை உங்களுக்கு விற்பனை செய்ய முயலும்.

ஒரு இணைய தளத்தில் இமெயில் முகவரியை வழங்கும் போது அதன் சக நிறுவனங்களும் அதனை அறிந்து கொண்டு நீங்கள் கேட்காமலேயே உங்களுக்கு வேண்டாத குப்பை அஞ்சல்களையெல்லாம் உங்களுக்கு அனுப்பி விடும். உங்களைப் பற்றி இவர்கள எப்படி அறிந்து கொண்டார்கள் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

குக்கீஸ் என்பவை மிகச் சிறிய டெக்ஸ்ட் பைல்களே. இவை .txt எனும் பைல் நீட்டிப்பைக் கொண்டிருக்கும். அது ஹாட் டிஸ்கில் சேமிக்கப்பட்டிருக்கும். விண்டோஸில் குக்கீ பைல்கள் (C-Drive) சீ - ட்ரைவில் (????????) போல்டரில் சேமிக்கப்பட்டிருக்கும்.

எனினும் இவற்றால் கணினிக்கு எந்த வித பாதிப்பம் ஏற்படாது. இவை வெறும் டெக்ஸ்ட் பைல்களேயன்றி இதன் மூலம் வைரஸை கணினியில் பரவச் செய்திட முடியாது. நீங்கள் ஒரு இணைய தளத்தில் வழங்கிய தகவல்களை அந்த இணைய தளம் மூன்றாம் தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளாதவரை குக்கீஸால் எந்த வித பாதிப்பும் இல்லை.

இணைய தளங்கள் உங்களைப் பற்றிய விவரங்களை நினைவில் வைத்திருக்க குக்கீஸ் உதவுவதால், உங்கள் கணினியை உபயோகிக்கும் வேறொரு நபரால் நீங்கள் ஏற்கனவே பார்வையிட்ட இணைய தளங்களைப் பர்வையிட வழி கிடைத்து விடுகிறது.

குக்கீஸ் மேல் உங்களுக்கு நம்பிக்கையில்லையானால் அதனை அனுமதிக்காது விடலாம் அல்லது குக்கீஸ் எனும் வசதியை வெப் பிரவுசரிலிருந்து முடக்கி விடலாம். எனினும் இவ்வாறு செய்வதால் வேறு சில வசதிகளைப் பெற முடியாது போய்விடும். சிலர் தங்கள் கணினியில் பதிவாகியிருக்கும் குக்கீஸை அவ்வவப்போது அழித்து விடுவதும் உண்டு. இவ்வாறு அழிப்பது சில வேளை சிக்கலை ஏற்படுத்தவும் கூடும். ஏனெனில் சில தளங்கள் குக்கீஸ் இல்லாது தமது தளத்தை அணுக விடாது..

அனேகமான வெப் பிரவுசர்களில் குக்கீஸைக் கட்டுப் படுத்துவதற்கான வசதியுள்ளது. இதன் மூலம் குறிப்பிட்ட சில பாதுகாப்பான இணைய தளங்களிலிருந்து மட்டும் குக்கீஸை அனுமதிக்கலாம்.

### இன்டர்நெட் எக்ஸ்புளோரில் குக்கீகளை எவ்வாறு தடுப்பது?

இன்டர்நெட் எக்ஸ்புளோரரின் Tools மெனுவில் Internet Options தெரிவு செய்யுங்கள். அங்கு pivacy டேபின் கீழ் ஸ்லைடர் கொண்டு குக்கீ அளவினைக் கட்டுப்படுத்தலாம். Block All Cookies, High, Medium High, Medium, Low, Accept All cookies என ஆறு தெரிவுகள் இருக்கும். (Block All Cookies) தெரிவு செய்வதால் அனைத்து குக்கீகளையும் தடுக்க முடியும்.. இத்தகைய செயலமைப்பால், எந்தவொரு இணைய தளமும் கணிணிக்குள், குக்கீகளை உட்புகுத்தி சேமிக்க இயலாது. அனைத்து குக்கீகளையும் தடுத்தால், மிகுதியான இணைய தளங்களை பார்வையிடுவதை தடுக்க நேரிடும்.. அடுத்த இரண்டு நிலைப்பாடுகளான, உயர்வு (High), மிதமான உயர்வு (Medium High), ஆகியவை மிக்க பொருத்தமானவையாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட தளத்திற்கான குக்கீயை மட்டும் தடுக்கவும் இயலும்.

---




### கணினி செயற்பட மறுக்கும் போது...

முறையாக செயற்பட மறுக்கும் ஒரு எப்லிகேசனை Ctrl + Alt + Del விசைகளை ஒரே நேரத்தில் அழுத்துவதன் மூலம் நிறுத்தி விடலாம் இவ் விசைகளை அழுத்தும் போது Task Manager வரவழைக்கப்படுகிறது. Ctrl + Shift + Esc விசைகளை ஒரே நேரத்தில் அழுத்துவதன் மூலமும் டாஸ்க் மேனேஜரை வரவழைக்கலாம்.

டாஸ்க் மேனேஜர் விண்டோவில் செயற்பட மறுக்கும் அப்லிகேசன் பெயரை காண்பிக்கும். அதிலிருந்து உரிய அப்லிகேசனை தெரிவு செய்து End Task பட்டனில் க்ளிக் செய்வதன் மூல்ம் அதனை நிறுத்தி விடலாம்.



டாஸ்க் மெனேஜர் மூலமாகவும் உரிய அப்லிகேசனை நிறுத்த முடியாது போனால் டாஸ்க் மேனேஜர் திறந்திருக்கும் நிலையில் மறுபடியும் Ctrl + Alt + Delete விசைகளை அழுத்துங்கள். கணினி ரீபூட் (reboot / restart) ஆக ஆரம்பிக்கும்.


ரீபூட் ஆக வில்லையெனின் கணினியில் உள்ள Reset பட்டனை அழுத்தி விடுங்கள். அப்பட் ஒரு பட்டன் இல்லையென்றால் கவலை வேண்டாம். கணினியிலுள்ள பவர் பட்டனை ஐந்து வினாடிகள் தொடர்ச்சியாக அழுத்திக் கொண்டேயிருங்கள் கணினி முழுமையாக் சட்டவுன் ஆகிவிடும்.

---

## இந்த மாத டவுன்லோட்

### படங்களின் அளவை மாற்ற Image Resizer

விண்டோஸ் எக்ஸ்பீ இயங்கு தளத்துக்கென முன்னர் பவர்டோய்ஸ் எனும் மென் பொருள் கருவிகளை மைக்ரோஸொப்ட் நிறுவனத்தில் கடமையாற்றிய மென்பொருள் வல்லுனர்கள் அவ்வப்போது வெளியிட்டு வந்தனர். இவற்றுள் இமேஜ் ரீஸைசர் Image Resizer என்பது மிகவும் பயனுள்ள ஒரு யூட்டிலிட்டி. இதன் மூலம் கணினியிலுள்ள ஒளிப்படங்களின் அளவை இலகுவாக மாற்றிக் கொள்ள முடிவதோடு அவற்றின் பைல் அளவையும் (file size) கணிசமாகக் குறைத்துக் கொள்ள முடிகிறது.




எக்ஸ்பீ தளத்துக்கென உருவாக்கப்பட்ட இந்த இமேஜ் ரீசைசர் கருவியை தற்போதைய விண்டோஸ் விஸ்டா விண்டோஸ் செவன் பதிப்புக்களில் பயன்படுத்த முடிவதில்லை. மேலும் பவர்டோய் மென்பொருள்களும் தற்போது வெளிவருவதில்லை.

இக்குறையை நிவர்த்தி செய்ய மைக்ரோஸொப்ட் codeplex.com எனும் இணைய தளத்தை அறிமுகம் செய்துள்ளது. இது மைக்ரோஸொப்ட் நிறுவனத்தின் ஓபன் சோர்ஸ் மென்பொருள்களை உருவாக்குபவர்களுக்கான ஒரு தளமாகும். இத்தளத்தில் கணினி மொழிகளில் தேர்ச்சியுள்ள எவரும் விண்டோஸ் இயங்கு தளத்துக்கென மென்பொருள்ளை உருவாக்கி பதிப்பிக்கலாம். முன்னைய விண்டோஸ் எக்ஸ்பீ இயங்கு தளத்துக்கென உருவாக்கப்பட்ட பவர்டோய்ஸ் இமேஜ் ரீஸைசர் போன்றே codeplex.com இணைய தளத்திலும் புதிதாக இமேஜ் ரீஸைசர் கருவி வெளியிடப்பட்டுள்ளது.

இமேஜ் ரீஸைசர் மென்பொருள் கருவியை நிறுவியதும், கணினியிலுள்ள ஒரு படத்தின் (image) மேல் ரைட் க்ளிக் செய்யும் போது வரும் கன்டெக்ஸ்ட் மெனுவில் Resize Pictures எனும் கட்டளை தோன்றும். அதன் மேல் க்ளிக் செய்ய ஒரு டயலொக் பொக்ஸ் தோன்றும். அங்கு உங்கள் படத்தை மாற்ற வேண்டிய அளவைத் தெரிவு செய்து ஓகே சொல்ல அடுத்த கணமே அந்தப் படம் அதே போல்டருக்குள் சேர்க்கப்பட்டுவிடும்.

படங்களை அடிக்கடி மின்னஞ்சலில் பரிமாறிக் கொள்பவர்களுக்கும் இணைய தள வடிவமைப்பாளர்களுக்கும் இது மிகவும் உபயோகமான ஒரு யூட்டிலிட்டி.886 கேபீ அளவுள்ள இதனை http://imageresizer.codeplex.com இணைய தளத்திலிருந்து இலவசமாக டவுன்லோட் செய்து கொள்ளலாம்.

# face பக்கம்

Share Follow me!

FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம். சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:



facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com















எம்.ஜி.ஆர். தன் நாயுடன் கொஞ்சி விளையாடுகிறார்

Todays Mokka Punch

அமெரிக்கா வுக்கு முக்கியம் ஒபாமா...
உனக்கு முக்கியம் உங்க அப்பாமா...!

படைத்தவர்களுக்காக
உழைத்து உழைத்து
களைத்துத் தூங்குகிறது
கடவுள்...!









மனிதன் தான் செய்யும் தவறுகளுக்குச் சிறந்த வக்கீலாகவும் ;

பிறர் செய்த தவறுகளுக்குச் சிறந்த நீதிபதியாகவும் இருக்க விரும்புகிறான் !!!!

செந்திலையும் கவுண்டமணியையும் இந்தப் பக்கம் வரவிடாதீங்க... அந்த பழம் எங்க, அடுத்த பழம் எங்கன்னு உசிர வாங்குவாங்க...



ரஜனி 'எந்திரனா' இருக்கலாம்..
கமல் 'இந்தியனா' இருக்கலாம்..
விஜய் 'தமிழனா' இருக்கலாம்..
அஜித் 'சிட்டிசனா' இருக்கலாம்..
சூர்யா 'கஜினியா' இருக்கலாம்..
சிம்பு 'மன்மதனா' இருக்கலாம்..
ஏன் தனுஷ் கூட
'பொல்லாதவனா' இருக்கலாம்..
ஆனால் எல்லாருமே..
உன்னை மாதிரி
நல்லவனா இருக்க முடியாது....
ஏன்னா..
நீ என்..
நண்பேன்டா...



காதலித்துப் பார்...
நீ அழகாவது
உனக்கு மட்டுமே தெரியும்...
பின்பு,
நீ அசிங்கப்படுவது
ஊருக்கே தெரியும்..!





சிவாஜி குடும்பம்:
பிரபு, சிவாஜி, சாந்தி, தேன்மொழி, கமலா, ராம்குமார்.

தொகுப்பு: பிரதீப்

தொகுப்பு: ஜெயா, ஸ்ரீ[illegible]



வானவில் மங்கை

# அந்த நாட்களில்...



ஒரு பெண் பூப்படைந்த நாள் முதல் மாதவிடாய் தொல்லையும் ஆரம்பித்து விடும். இந்நாட்களில் பாடசாலை மாணவிகளும், வேலைக்குச் செல்லும் பெண்களும், குடும்பத்தலைவிகளும் பல அசௌகரியங்களை சந்திக்கின்றனர். தலைவலி, கால்வலி, வயிற்றுவலி, முகப்பரு, களைப்பு, எரிச்சல் என்று கூறிக்கொண்டே போகலாம். இவற்றுக்கெல்லாம் காரணம் நம் வாழ்க்கை முறை மாறிவிட்டதேயாகும்.

நம் பாட்டிமார்கள் இச்சமயங்களில் எந்தவேளையும் செய்ய விடமாட்டார்கள். அக்காலப்பகுதிக்கு ஏற்ற சத்தான உணவு வழங்குவார்கள். இதனாலேயே அவர்கள் 7, 8 குழந்தைகளை ஈன்றெடுத்தார்கள். ஆனால் இப்போதோ அவசரயுகத்தில் எல்லாம் தலைகீழாக மாறி உடலுக்கு தேவையற்ற உணவுகளைக் கூட இலகுவாக கடைகளில் பெற்றுக்கொள்கிறோம். இதனால்தான் மாதவிடாய் பிரச்சினைகள் பெருகிக்கொண்டே போகின்றது. சற்று நமது உணவை மாற்றிக்கொண்டாலே இதுபோன்ற பிரச்சினைகளை குறைத்துக்கொள்ளலாம்.

உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டியவை:- உளுந்து, எள்ளு, நல்லெண்ணெய், முருங்கைக்காய், கத்தரிக்காய், முட்டை, கோழி இறைச்சி, வெந்தயம், பூண்டு, இஞ்சி, சுக்கு, பப்பாளி, அண்ணாசி போன்றவற்றை அவர்கள் விரும்பும் வடிவில் இட்லி, தோசையாகவோ, களி வடிவிலோ, பானமாகவோ, உருண்டை வடிவிலோ செய்து கொடுக்கலாம்.

உணவில் தவிர்க்க வேண்டியவை:- எண்ணெயில் பொறித்த உணவுகள், உஷ்ணத்தை அதிகரிக்கக்கூடிய உணவுகள், செயற்கை சுவையூட்டிகளைக் கொண்ட உணவுகள் என்பவற்றை தவிர்த்தாலே பாதி பிரச்சினைகள் தீர்ந்துவிடும். இதையும் தாண்டி மாதவிடாய் காலத்தில் கருப்பை விரிந்து குடல், சிறுநீரகத்தை அழுத்துவதால் வயிற்று வலி ஏற்படலாம். இதை குறைக்க புதினாவை சாறு எடுத்து குடிக்கலாம். அல்லது கட்டிப் பெருங்காயத்தை நீரில் கரைத்து ஒரு தேக்கரண்டி குடித்து வரலாம். வெந்தயத்தை போட்டு நீர் அருந்தலாம். எள்ளுடன் பனங்கற்கண்டை சேர்த்து சாப்பிடலாம்.

இவ்வாறெல்லாம் செய்தும் வலி குறையாதபட்சத்தில் மருத்துவரை அணுகி மாத்திரைகளையோ, பரிசோதனைகளையோ செய்துகொள்ளவேண்டியது அவசியமாகும். இவை அனைத்தையும் விட ஓய்வே மிக அவசியம். பலர் கணவன் மற்றும் வளர்ந்த பிள்ளைகளிடம் கூட கூறுவதில்லை. அதற்கு பதிலாக கோபத்தையோ, எரிச்சலையோ வெளிப்படுத்துவார்கள். இது மிகவும் தவறு. அவர்களிடம் எடுத்துக்கூறினால் அவர்கள் புரிந்துக்கொண்டு நிச்சயமாக உங்களுக்கு உதவுவார்கள். அதுமட்டுமல்ல இது அவர்களின் எதிர்கால மனைவி, குழந்தைகளுக்குக்கூட உதவியாக இருக்கும்!

## திடீர் தோசை வகைகள்

### பாண் தோசை



**தேவையானவை:-**

| | |
|---|---|
| பாண் | - 10 துண்டுகள் |
| ரவை | - 1/2 கப் |
| தயிர் | - 2 மேசைக்கரண்டி |
| அரிசிமா | - 1 மேசைக்கரண்டி |
| இஞ்சி | - சிறு துண்டு |
| பச்சை மிளகாய் | - 3 |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| எண்ணெய் | - தேவையான அளவு |

**செய்முறை:-**

பாண் துண்டங்களின் ஓரப்பகுதியை அகற்றி நடுப்பகுதியை நீர்விட்டு ஊறவிடவும். பின் ரவை, அரிசிமா, தயிர், இஞ்சி, பச்சைமிளகாய், கறிவேப்பிலை, உப்பு, சேர்ந்து அரைக்கவும். பின் அரைத்தவற்றுடன் நீரில் நனைத்த பாண் துண்டுகளை சேர்த்து அந்த நீரையும் சேர்த்து அரைத்து தோசை மா பக்குவத்தில் கரைத்து எண்ணெய் விட்டு சுட்டெடுக்கவும்.

### பார்ளி தோசை



**தேவையானவை:-**

| | |
|---|---|
| பார்ளி | - 1 கப் |
| உப்பு | - தேவைக்கேற்ப |
| நீர் | - தேவைக்கேற்ப |

**செய்முறை:-**

பார்ளிமாவுடன் நீர் விட்டு உப்பு கலந்து ஒரு 10 நிமிடம் கழித்து தோசை வார்த்தால் மெல்லிய தோசையாக வரும்.

### ஓட்ஸ் தோசை



**தேவையானவை:-**

| | |
|---|---|
| ஓட்ஸ் | - 1 கப் |
| உப்பு | - தேவையான அளவு |
| நீர் | - 2 கப் |
| எண்ணெய் | - தேவைக்கேற்ப |

**செய்முறை:-**

ஓட்ஸினை 2 கப் நீர் விட்டு 5 நிமிடங்கள் ஊறவிடவும். பின் ஊறிய ஓட்ஸை நீருடன் சேர்த்து அரைத்து உப்பு கலந்து எண்ணெய் விட்டு சுட்டெடுக்கவும்.

# மார்பக புற்றுநோயைத் தடுக்கும் கேரட்



இயற்கையாக இனிப்புத் தன்மையைக் கொண்ட காய்கறிகளில் முதன்மையாக இருப்பது கேரட்தான். அதனால்தான் பலர் இதனை பச்சையாகவே உண்பார்கள். இதனால் அதில் அடங்கியுள்ள கார்போறைட்ரேட்ஸ். சக்கரை, நார்சத்து, கொழுப்பு, புரோட்டின், கல்சியம், பீட்டா கரோட்டின், இரும்புச் சத்து, மங்னீஷியம், பொஸ்பரஸ், பொட்டாசியம். சோடியம், விட்டமின் A,B1,B2,B3,B6,C போன்ற எல்லாச் சத்துக்களும் முழுமையாக கிடைக்கிறது. இதிலுள்ள பீட்டா கரோட்டினே கண்பார்வைக்கு உதவுகிறது. குடல் புண்களை ஆற்றுவதற்கும் கொழுப்பை அகற்றி இரத்தத்தை சுத்தப்படுத்தி விருத்தியடையவும் செய்கிறது. அதுமட்டுமல்ல, பெண்களுக்கேற்படும் மார்பகப்புற்று நோயை ஆரம்பநிலையிலேயே குணப்படுத்தவும் உதவுகின்றது. உடலுக்கு பொழிவையும், நிறத்தையும் அளிக்கின்றது. இதனால் குழந்தை பிறந்து நான்கு, ஐந்து மாதங்களிலேயே இந்த கேரட்டை ஜூஸாக கொடுக்க தொடங்கினால் குழந்தை மிகவும் அழகாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பார்கள். எனினும் இதனை பெரியவர்கள் பலர் முற்றுமுழுவதுமாக தவிர்க்கின்றார்கள். அது மிகவும் தவறு. கேரட் உடலிலுள்ள கொழுப்பை அகற்ற வல்லது. இரத்த நாளங்களில் கொலஸ்ட்ரோல் சேர்வதை இது தடுக்க உதவுகிறது. சக்கரை வியாதி உள்ளவர்கள் கூட இதனை குறைந்தளவேனும் எடுத்துக்கொள்ளலாம். காரணம் கண்ணில் ஏற்படும் பாதிப்பை இது குறைக்கும். எதையுமே அளவாக எடுத்தலே நன்று. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

## டிப்ஸ்

*தேங்காய் சேர்க்காதவர்கள் கசகசாவை பொடித்து வைத்துக்கொண்டு தேங்காய்க்கு பதிலாக குழம்பு, குருமா, பொரியலுக்கு பயன்படுத்தலாம்.*


*சமையல் பாத்திரங்களில் கரி பிடிக்காமல் இருக்க சமைப்பதற்கு முன் பாத்திரத்தின் அடியில் கொஞ்சம் சோப்பை தடவிவிடுங்கள்.*

*லிப்ஸ்டிக் நிறம் மாறாமல் இருக்க லிப்ஸ்டிக் போடமுன் உதட்டில் சிறிதளவு பவுடரைப் போட்டுவிட்டு பிறகு பூசினால் நிறம் மாறாது.*

*புகைப்பிடிப்பவர்களுக்கு தினமும் ஒரு கரட்டை பச்சையாக உண்ணக்கொடுத்தால் இரத்தத்தில் உள்ள நிகோடினின் அளவு கணிசமாக குறையும்.*

*பாகற்காயை பயிரிடமுன் மெல்லிய துணியில் அவ்விதைகளை கட்டி நீரில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்து பின் பயிரிட்டால் விரைவில் முளைக்கும்.*

## Star Baby



ஆர். செரீஃம் ஷஹீன்

றிஸ்வான் - நஸ்ரீன், மருதானை



# தந்தைக்கு புகழ் சேர்த்த தனயன்

பதினாறாம் நூற்றாண்டில் மார்த்தாண்டவன் என்னும் மன்னன் சோழிங்கபுரியை ஆண்டு வந்தான். மாதம் மும்மாரி மழை, நெல்வயல்களில் நல்ல விளைச்சல் என்று நாடு செழிப்பாக இருந்தது. எந்த விதமான நோய் நொடி-களும் இல்லை. இருந்தாலும் மக்களின் மனதில் மகிழ்ச்சி இல்லை. அவர்களின் முகத்தில் வாட்டமும், வேதனையும் தான் காணப்பட்டன.

காரணம் மன்னனின் இரக்கமற்ற வரி விதிப்புதான். என்னதான் வயல்களும், தோட்டங்களும் நல்ல விளைச்சலைத் தந்தாலும், வரிச்சுமை அவர்களை வாட்டி வதைத்தது. அதனால் வறுமையில் வாடிக்கொண்டிருந்தனர் அந்த நாட்டு மக்கள்.

எல்லா நாட்டிலும் வரி விதிப்பார்கள் தான். அது நியாயமானதாக இருக்கும். ஆனால் இங்கு அப்படி இல்லை. பணம் படைத்தவர்களை கூட இந்த வரி விதிப்பு பலவீனப்படுத்தியது. மார்த்தாண்டனின் வரி விதிப்பு வினோதமாக இருந்தது. அவன் ஒரு படி நெல்லைக் கொடுப்பான். மக்கள் அதற்கு ஈடாக ஒரு படி அரிசி கொடுக்க வேண்டும். இந்த விசித்திரமான வரிவிதிப்பினால் மக்கள் அதிகமான துன்பத்துக்கு ஆளாயினர். ஒரு படி நெல்லுக்கு அரைப்படி அரிசிதான் தேறும். இங்கோ சமமான அளவுக்கு அரிசி தர வேண்டியிருக்கிறது.

ஒரு வீட்டிற்கு இவ்வளவு நெல் என்று அளந்து கொடுத்துவிட்டு அதே அளவு அரிசியைப் பெறும் மன்னன் வளமுடன் வாழ்ந்தான். ஆனால் அப்படிக் கொடுத்த மக்களோ வறுமையில் வாட வேண்டிய தாயிற்று. மன்னனும் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் தனது பொக்கிஷம் நிரம்புவதை மட்டுமே பார்த்தான்.


ஒருநாள் மார்த்தாண்டன் இறந்துவிட அவனுடைய மகன் ஜெயவர்மன் அரியாணை ஏறினான். இறந்துபோன மன்னனுக்கான மக்கள் கொஞ்சம் கூட வருந்தவில்லை. மகனுடைய ஆட்சியிலாவது வரி விதிக்கும் முறையில் மாறுதல் ஏற்பட்டு தங்களுக்கு விடிவு வராதா என்று எதிர்பார்த்தார்கள்.

ஜெயவர்மன் அரச சபையைக் கூட்டினான். இறந்துவிட்ட தனது தந்தையைப் பற்றி குடிமக்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை அறிய விரும்புவதாகக் கூறினான். உடனே அமைச்சர்கள் அவர்கள் கொண்டுவரும் செய்தியை எதிர்பார்த்து அரண்மனையே காத்திருந்தது. இரண்டு வாரங்கள் ஓடின. திரும்பி வந்த ஒற்றர்கள் கூறிய தகவலால் ஜெயவர்மன் அதிர்ந்து போனான். தன்னுடைய தந்தையை கொடுங்கோலனாக நினைத்துக் கொண்டிருக்கிற மக்களின் மனதை எப்படி மாற்றலாம்? என்று சிந்தித்தான். நாடே தூற்றும் தந்தையை இந்த மக்கள் போற்றிப் புகழும்படி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். தந்தையின் வரிவிதிப்பு முறையை மாற்றினால் சரியாகிவிடும் என்ற யோசனை தோன்றியது. உடனே வரிவித்திப்பில் மாற்றம் செய்து புதிய வரிமுறையை முரசறைந்து நாட்டிற்கு அறிவித்தான். அவ்வளவு தான் மார்த்தாண்டனை நாட்டு மக்கள் புகழத்தொடங்கினர்.

''போன மகபாராஜன் எவ்வளவோ தேவலை! அவர் மேலே வருத்தப்பட்டதும், பழி சொன்னதும் தப்பால்ல போயிருக்கு! அவரது வரிமுறையைக் குறை சென்னதற்கா இவ்வளவு பெரிய தண்டனை? அந்தப் புண்ணியவானாவது நெல்லைத் தந்து அரிசி கேட்டார். இவனோ உமியைத் தந்து அதுக்குச் சமமாய் அரிசி கேட்கிறான். அந்த மகாராஜன் எவ்வளவோ நல்லவராய் இருந்திருக்காரே! இன்னும் கொஞ்ச காலத்துக்கு அவர் இருந்து ஆண்டிருக்கலாம். இவன்கிட்ட வசமா மாட்டிக் கொண்டோமே'' என்று ஆற்றாமையோடு மக்கள் புலம்பத் தொடங்கினர்.

'ஒரு படி உமிக்கு ஒரு படி அரிசி தர வேண்டும்' என்று ஜெயவர்மன் வரி விதிப்பை மாற்ற அவன் எதிர்பார்த்தபடி அவனது தந்தையை மக்கள் புகழத் துவங்கி விட்டார்கள்.

## சொல் விளையாட்டு 23



### இடமிருந்து வலம்

1. இலங்கையின் தேசிய விளையாட்டு (6)
5. சானியா மிர்சாவுடன் தொடர்புபட்டது (4)
6. மனிதம் (4)
7. இந்திய கிரிக்கெட் காப்டன் (2)

### மேலிருந்து கீழ்

1. பலகையில் காய்களை சுண்டி விளையாடும் விளையாட்டு (3)
2. சீட்டாட்டத்தில் ஒன்று (3)
3. பூப்பந்து (6)
4. துயரம் (3)
5. அவஸ்திரேலியாவின் பிரபல வேகப்பந்து வீச்சாளரின் பெயரின் முதற்பாதி (3)
6. அளவிடும் கருவி

**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 22ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

## தேள்



தேள்களில் 650 இனங்கள் உள்ளன.

ஆப்பிரிக்கத் தேள்கள் ஓரடி நீளம் வரை வளரும்

மைக்ரோ பூத்தஸ் என்ற தேள் 13 மில்லிமீட்டர் நீளமே வளர்கிறது.

நண்டுத் தேள்கள் கொட்டினால் உடனடியாக மரணம் ஏற்படும்.

வடக்கு ஆப்பிரிக்காவில் தேள்களை உணவாகச் சாப்பிடுகிறார்கள்.





மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தினால் களுத்துறை கொடஹேன தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு அண்மையில் புத்தகப்பை, பாதணி என்பன வழங்கப்பட்டன. மன்ற உறுப்பினர்கள் மாணவர்களுடன் சேர்ந்து எடுத்துக் கொண்டபோது... (படம்: இங்கிரிய மூர்த்தி)

| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி: STAR BABAY, Editor, Vanna Vaanavil Editorial, Lake House Colombo - 10 |
|---|---|

## Star Baby



எம்.எம்.ரிஸாஹ ஷ்ரித்
மஹ்ரூப் - விவி
ஓட்டமாவடி 01



வண்ணம் தீட்டுங்கள்

## நிலக்கரி



நிலக்கரி ஓர் எரிபொருளாகப் பயன்படுகிறது. என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதிலிருந்து நைலோன் துணி, பிளாஸ்டிக் மூலப்பொருட்கள், சாய வகைகள், வாசனைத் திரவியங்கள், கற்பூரம், மருந்துகள், வெடி மருந்துகள், தைலங்கள், தார், அம்மோனிய திரவம், பூச்சிக் கொல்லிகள் போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைக்கின்றன.

ஆர். தர்ஷன், வவுனியா

# ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகர்

A. ஸ்ரீகாந்த்
B. ஷியாம்
C. ராம்சரண்
D. சிபிராஜ்

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்



**காதல் என்பது?**

பிரான்ஸ் - கொமடி
இத்தாலியில் - அதிசயம்
இங்கிலாந்தில் - சோகம்
ஜெர்மனியில் - நாடகம்
நம்மூரில் - பெண்களின்
தேசிய விளையாட்டு!
சோ பீ கேர்.:.புல்

**- எம்.சுதர்ஷன், திருகோணமலை**

காதலியும் பஸ்சும் ஒரே மாதிரி ஓடிப் போனா பின்னால் ஓடி துரத்தக் கூடாது அதே ஸ்டாப்பில் நில், இன்னொன்னு வரும்.

**- சுபாஸ், டிக்கோயா**

# SMS பூக்கள்

*நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.*

0778021501

ஹாய் தூங்கிட்டீங்களா? எனக்கு தெரியும் நீங்க தூங்க மாட்டீங்க ஏன்னா, உள்ளத்தில் நல்ல உள்ள உறங்காதென்பது வள்ளுவன் வகுத்ததடா...

**- சர்மி, அப்புத்தளை**

பெண்ணே, உன்னுடைய முகத்தில் உள்ள வியர்வைத் துளியை பார்த்த பின்பு தான் தெரிந்து கொண்டேன் நிலவிலும் நீர் உள்ளது என்று.

**- எஸ்.ஜெகதீஸ், சம்பூர்**

**ஒரு மனிதன் நிம்மதியாக தூங்கும் 3 அறைகள்**
1. கருவறை
2. கல்லறை
3. வகுப்பறை

**- தனு**

**மகளுக்கு அம்மாவின் ஆலோசனை...**

உன் தோள் மேல் எவனாவது கை போட்டா டோன்ட் டு என்று சொல். உன் இடுப்பு மேல் கையைப் போட்டா ஸ்டொப் என்று சொல்

**ஒரு வாரத்திற்கு பிறகு**

**மகள்:** மம் இன்று ஒரு போய் தோள் மேல் ஒரு கையையும், இடுப்பு மேல ஒரு கையையும் போட்டான்!

**அம்மா:** ஓ! மை கோட் நீ என்ன சொன்ன?

**மகள்:** டோன்ட் ஸ்டொப்னு சொன்னேன்.

**- எம்.எம்.ரிஸ்னி, ஹேனமுல்ல, பாணந்துறை**

சிங்கம் தூங்கும் போது நாம எழுப்பினாலும் நாம தூங்கும் போது சிங்கம் எழுப்பினாலும், சங்கு நமக்குதான். சோ டோண்ட் டிஸ்டர்ப் மீ நான் தூங்கப் போறேன்... ஓகே?

**- எஸ்.எப்.நுஸ்கா, நிந்தவூர்**

எல்லோரும் கரண்ட் கட் ஆனா விளக்கு எடுப்பாங்க, இல்லாட்டி மெழுகுவர்த்தி எடுப்பாங்க, இல்லன்னா டோர்ச்ச எடுப்பாங்க. நீ மட்டும் ஏண்டா உங்க அப்பன் பொக்கட்டில் காசு எடுக்கிற?

**- தபு, அச்சுவேலி**

உங்களிடம் பிடித்தது நல்ல மனசு.. அழகு சிரிப்பு, குழந்தை மனசு இதெல்லாம் பொய்ன்னு தெரிஞ்சும் நம்பும் வெகுளித்தனம்.

**- என்.பிரசன்னா, கஹவத்தை**

ஒரு கையில் பெண்...
இன்னொரு கையில் போன்...
ஒரு காது டீச்சர் கிட்ட...
இன்னொரு காது பிரண்ட் கிட்ட...
ஒரு கண்ணு போர்ட்ல...
இன்னொரு கண்ணு பிகர் மேல...
யாரு சொன்னது ஸ்கூல் லைப் ஈஸின்னு...! எவ்வளவு கஷ்டம்னு பார்த்தீங்களா...

**- கௌசல்யா, தர்காடவுன்**

**பிறந்த குழந்தை:** ஹலோ டொக்டர் உங்க போன்ல SMS அனுப்ப முடியுமா?
**டொக்டர்:** ஏம்மா?
**பிறந்த குழந்தை:** நான் பத்திரமா வந்து சேர்ந்துட்டேன் என்று கடவுளுக்கு SMS அனுப்பனும் அப்புறம் முக்கியமா என்னோட கேர்ள் பிரண்ட குயிக்கா அனுப்பி வைக்கணும்னு சொல்லனும்.

**- எஸ்.ப்ரியா, கண்டி**

இன்பமான நேரங்களில் மௌனம் சம்மதம். உண்மையான உறவுகள் பிரியும் போது மௌனம் துன்பம். நட்பில் மௌனம் நம்பிக்கை. காதலில் மௌனம் சித்திரவதை. தோல்வியில் மௌனம் பொறுமை. வெற்றியில் மௌனம் அடக்கம். இறுதியில் மௌனம் மரணம்.

**- பி.செரின், மஸ்கெலியா**

அம்மா: ஏன்டா இப்படி நீளமா முடி வளர்க்கிறாய்?
மகன்: அந்நியன் ஸ்டைல்.
அம்மா: ஏன்டா மீசையை எடுத்தாய்?
மகன்: கஜினி ஸ்டைல்
அம்மா: ஏன்டா ஐந்து நாளா குளிக்கவில்லை?
மகன்: இது SMS படிக்கிறவர் ஸ்டையில்

**- சப்பானா, தர்காடவுன்**

**சொந்தம்**

பூவாக இருந்தால் வண்டுக்கு சொந்தம்?
நிலவாக இருந்தால் வானத்துக்கு சொந்தம்
ஆனால், நீயோ என் உயிராக இருப்பதால் நீ என்றும் எனக்கே சொந்தம்!!

**- சஹானா, முள்ளியவளை.**

யார் சொன்னது காதல் புனிதம் என்று? காதல் ஒரு கணிதம். அது
வேலையைக் கூட்டும் (+)
கண்ணீரை பெருக்கும் (X)
வாழ்நாளை குறைக்கும் (-)
வீட்டை விட்டு பிரிக்கும் (/)

**- யமுனா, அன்கும்புர**

கண்ணா நீ லவ் பண்ணும் பொண்ணும், நீ யூஸ் பண்ணும் செல்லும் ஒரே மாதிரி தான், ரெண்டுமே காசு இல்லேண்ணா பேசவே பேசாது!

**- எஸ்.எப்.எப்.சப்பானா, தர்காடவுன்**

ஒரு முறை சந்தித்தேன் பல முறை சிந்திக்க வைத்தாய்... இப்போது பல முறை சிந்திக்கிறேன் ஒரு முறையாவது சந்திப்போமா என்று!

**- எச்.எப்.எப்.பஸ்மிலா, கண்டி கெலிஓயா**



வடிவேலு: நீ தான் பில்கேட்ஸா?
பில்கேட்ஸ்: யெஸ். வட் டு யூ வாண்ட்?
வடிவேலு: என்ன கொம்பியூட்டர் கொம்பனி நடத்துற? மை பிச்சர்னு இருக்கு, ஓப்பன் பண்ணினா என் போட்டோ ஒன்னுக்கூட இல்ல. வின்டோசுன்னு இருக்கு, ஓப்பன் பண்ணா காற்று வரமாட்டேங்குது, மை டொக்கிமென்டுனு இருக்கு ஆனா அதுல என் வீட்டு பத்திரம் இல்லீயேப்பா...? பில்கேட்ஸ்???

இந்தக் கேள்விக்கு கட்டாயம் பதில் சொல்லணும்! தெரியும் அல்லது தெரியாது என்ற பதில் தான் தேவை. நீங்க லூசுன்னு உங்க பிரண்ட் எல்லோருக்கும் தெரியுமா?

**- நித்தி**

வானத்தை நேசித்தேன் தொட முடியவில்லை. காதலை நேசித்தேன் அடைய முடியவில்லை. காற்றை நேசித்தேன் பிடிக்க முடியவில்லை. உன் அன்பை நேசித்தேன் மறக்க முடியவில்லை.


**- வினய், நோர்வூட்**

பயலுங்க லவ் சொன்னா பொண்ணுங்க செருப்பைக் கழட்டுறாங்க அது ஏன் தெரியுமா? பசங்க மனசு ஒரு கோயில் மாதிரி உள்ள போகும் போது செருப்ப கழட்டனும்... எப்படி?

- Hathee, மூதூர்

காதல் என்பது மழை மாதிரி நனையும் போது சந்தோசம். நனைந்த பின்பு ஜலதோசம்.

**- கே.திவ்யா, பொகவந்தலாவை**




மேசேஜ் அனுப்பினா 2 ப்ரபளம் மெசேஜ் டெலிவேர்ட் ஆச்சா? இல்லையா? டெலிவேர்ட் ஆகாவிட்டா நோ ப்ராபளம். ஆச்சுன்ன 2 ப்ராபளம். படித்தாங்களோ இல்லையோ.. படிக்காட்டி நோப்ராபளம் படிச்சிருந்தா 2 ப்ராபளம் புரிந்ததா இல்லையான்னு. புரியாட்டி நோ ப்ராபளம். புரிஞ்சால் 2 ப்ராபளம். சேவ் பண்ணுவாங்களா இல்லையா என்று. சேவ் பண்ணாட்டி நோ ப்ராபளம். சே பண்ணினால் 2 ப்ராபளம். வேரா யாருக்காவது அனுப்புவாங்களா இல்லையான்னு அனுப்பாட்டி நோ ப்ராபளம். மேசேஜ் அனுப்பினா 2 ப்ராபளம். டெலிவேர்ட் ஆச்சா ஆகலையா என்று...

**- எஸ்.துர்கா, யாழ்ப்பாணம்**

டைட்டானிக் கப்பல் எப்படி கவிழ்ந்தது தெரியுமா?
இப்படித்தான்...
குபுக்...
டுபுக்...
டபக்...
டபக்...
லொபக் லொபக்
லொபக்
சிரிக்காதீங்க இது ஒரு சோக கதை

**- என்.ரம்சன், யாழ்ப்பாணம்**

என் உயிர் போனால் உனக்கு கண்ணீர் வருமா என்று தெரியாது! ஆனால் உனக்கு கண்ணீர் வந்தால் என் உயிர் போய்விடும்.
இப்படிக்கு
வெங்காயம்

பன்னீர்த் துளி மிகவும் வாசனையாக இருக்கும். But யாருக்கு தெரியும் அது ரோஜாவின் கண்ணீர் என்று?

**- திவ்யா**

## மலேசிய இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2011

16

# பள்ளு இலக்கியம் படைத்து சாதியை மறுத்த இஸ்லாமிய இலக்கியம்

இராசையா மகேஸ்வரன்
(சிரேஷ்ட துணை நூலகர்,
பேராதனை பல்கலைக்கழகம்)

இஸ்லாமிய தமிழ் இலக்கியமானது தமிழிலக்கிய மரபில் கால்பதித்து நின்று வேண்டியன ஏற்று, வேண்டாதன விலக்கி இஸ்லாமிய நெறிகளை வெளிப்படுத்தி வந்துள்ளது என்பதை எடுத்துக் கூறுவதற்காக பேராசிரியர் அப்துல் சமது மேற்கொண்ட ஒரு வெற்றிகரமாக முயற்சியாக அந்த ஆய்வுக் கட்டுரை அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாக குறவஞ்சி மரபில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் பற்றி சிறப்பாகவே ஆராய்ந்திருப்பதை இங்கே எடுத்துக் காட்டாக சுட்டிக் காட்டலாம்.

குறவஞ்சி இலக்கியங்களில் குறத்தி முதன்மை பெறும் பாத்திரமாக வருவாள். தலைவர் உலாவர அவனிடம் இதயத்தை இழந்த தலைவி காதல் நோயால் வாடும்போது அவளது நோய்குரிய காரணத்தை குறத்தி குறிசொல்லி வெளிப்படுத்தும் முறை சிறப்பானது. குறவஞ்சி வடிவத்தில் தனி இலக்கியங்களையும், நாடக இலக்கியங்களில் குறத்தி வருகைப் பகுதியையும் முஸ்லிம் புலவர்கள் பாடியுள்ளனர். எனினும் குறத்தி நாட்டுவளம், குலப்பெருமை பாடிவருதலை சித்தரித்தவர்கள் குறி சொல்வதைத் தவிர்த்துள்ளனர். ஏனென்றால் குறிகேட்டல், ஜோசியம் பார்த்தல் போன்ற வழக்கங்கள் இஸ்லாமிய நெறிக்கு முரணானவையாகும்.

குறிசொல்லும் முறையை தவிர்த்து தலைவன் நினைவால் வாடும் தலைவியின் உள்ளத்தை ஆறுதல் படுத்தும் வகையில் குறத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். தையார் சுல்தான் நாடகத்தில் வரும் குறவஞ்சி தையாரைப் பிரிந்து வாடும் சுலைகாவின் வருத்தத்தை நல்வாக்குக் கூறி போக்குகிறாள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலாவத்து கூறியே தனது பாடலை ஆரம்பிக்கிறாள். அலிபாதுஷா நாடகத்தில் நாட்டுவளம், குலப்பெருமை பாடிவரும் குறவஞ்சி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருமையையும் தீன் குலத்தின் சிறப்புகளையும் பாடுகிறாள். ஞான இலக்கியங்களைப் படைத்த முஸ்லிம் புலவர்கள், தலைவன் உலா, தலைவி மயக்கம், குறத்தி குறி சொல்லல் போன்ற குறவஞ்சி இலக்கியக் கூறுகளை ஞானக் குறவஞ்சி இலக்கியங்களில் தவிர்த்து விடுகின்றனர். குறவஞ்சி இலக்கியத்துள் இடம்பெறும் சிங்கன் - சிங்கி உரையாடலை மட்டும் தங்கள் ஞானத் தத்துவக் கருத்துகளைக் கேள்வி பதில் என்கிற உரையாடல் மூலம் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற உத்தியாக பயன்படுத்திக் கொண்டனர் என ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

இஸ்லாத்தில் தற்காப்புக்காக அன்றி ஆக்கிரமிப்புக்காக போருக்கு அனுமதியில்லை. எனவே படையெடுத்து வந்தோர் பெயரில் படைப்போர் இலக்கியங்களுக்கு பெயரிடும் மரபை முஸ்லிம் புலவர்கள் தொடங்கி வைத்துள்ளனர் என்கிறார் ஆய்வாளர்.

இஸ்லாம் அரசியல் வரலாற்றுப் பின்புலத்துடன் வளர்ந்த மார்க்கமாகும். இஸ்லாமிய வரலாற்றில் போர்கள் அதிகம் இடம்பெறுகின்றன. போர்க்களக் காட்சிகளைப் புலவர்களைக் கொண்டு பதிவு செய்யும் மரபு தமிழிலக்கியத்தில் உண்டு. பரணி, இலக்கியம் போர்பாடும் தனி இலக்கிய வகை.

போர் பற்றிய வரலாற்றை பாடவந்த இஸ்லாமிய புலவர்கள் பரணி இலக்கிய அமைப்பில் பாடாமல் படைப்போர் என்ற புதிய இலக்கியம் வகையில் பாடினர். இதற்கு காரணம் உண்டு. பரணி இலக்கியத்தில் காளிபாடியது, பேய் பாடியது, குருதிப்பலி போன்ற பல நிகழ்வுகள் பாடப்படுவது மரபு. இவை இஸ்லாத்திற்கு முரணாக இருப்பதால் 'போர் பாடியது' என்ற ஒரு பகுதியை மட்டும் பரணியிலிருந்து எடுத்து 'படைப்போர்' என்ற புத்திலக்கியம் படைத்தனர். தமிழில் தோன்றிய பரணி இலக்கியங்கள் எல்லாம் கலிங்கத்துப் பரணி என்பதுபோல போர் நடந்த இடத்தின் பெயரிலோ, தக்கயாகப் பரணி என்பது போல முதன்மை பெறுவோர் பெயரிலோ தான் அமைந்துள்ளன.

எந் நிலையில் போர்கள் நடந்தாலும் சிலபோர் தர்மங்களைத் தமிழர்கள் பின்பற்றியதைத் தமிழிலக்கியங்கள் சுட்டி காட்டுகின்றன. இஸ்லாம் போர் நெறிகள் எப்படி அமைய வேண்டும் என்ற தெளிவான வரையறைகளைத் தந்துள்ளது. தமிழிலக்கியங்கள் காட்டும் போர்களிலும் இஸ்லாமிய ஆட்சி காலப் போர்களிலும் சில பொதுத் தன்மைகளும் சில வேறு-பாடுகளும் உள்ளன.

போரில் சண்டை என்பது காலத்தில் நேருக்கு நேர் மோதும் மறவர்கள் இடையே நடக்க வேண்டுமே தவிர போரில் அப்பாவி மக்கள் கொல்லப்படக் கூடாது என்பது தமிழகப் போர் மரபு.

இஸ்லாமியப் போர் மரபிலும் இதே பண்பாடு போற்றி பேணப்பட்டதை வரலாறு உறுதி செய்கிறது. சிரியாவின் வெற்றியைச் சித்தரிக்கும் சேதுனா புலவரின் 'புதுகுஷ்ஷாம்' காப்பியத்தில் கலிபா ஆபூ பக்கர் (ரலி) அவர்கள் வீரர்களுக்கு இடும் கட்டளையில் நோயாளர், முதியோர், பேதைகள், பெண்டிர், சிறுபிள்ளைகள் முதலானோரைக் கொல்லக் கூடாது என்பது பின்வரும் பாடலில் அறிவிக்கப்படுகிறது:

> **பிணியினர் முதிர்ந்தவர் பேதை**
> **மாதரோ**
> **டணியினர் சிறாறிவ ரகப்**
> **படுத்தோர்**
> **திணைவிவுல் கொண்டிடிபு பெறுதல்**
> **கொள்ளன்மின்**
>
> (படையெழுச்சிப் பாடல் 84)

எதிர்நாட்டு படைகளை நெருப்பால் தாக்குதல், விளை நிலங்களைத் தீயிட்டு அழித்தல் ஆகியவற்றை உலக வரலாற்றில் நிகழ்ந்த பண்டைய பெரும் போர்களில் இயல்பான ஒன்று. ஆனால் இஸ்லாம் நெருப்பைக் கொண்டு அழிப்பதையும், தண்டனை கொடுப்பதையும் தடைசெய்துள்ளது. நெருப்பைக் கொண்டு தண்டிக்க நெருப்பைப் படைத்த அல்லாஹ் ஒருவனுக்குததான் உரிமை உண்டு என்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள். தமிழகப் போர் மரபில் எரிபரப்பல் அங்கீகரிக்கப்பட ஒன்று. ஆனால் இஸ்லாமிய புலவர்கள் இஸ்லாமிய நெறியை ஒரு யாப்பாக அவர்கள் பாடுதிறனுக்குள் அமைத்துவிடுவதால் தமிழக மரபுகளைத் தவிர்த்து விட வேண்டியதாகிறது.



ஆப்கானிஸ்தான் பாரம்பரிய நடனம்

புதுகுஷ்ஷாம் காவியத்தில் சிரியா படையெடுப்பில் வெற்றிவாகை சூடிய தமது படைவீரர்களிடம் "நீங்கள் வெற்றி பெற்ற காரணத்தால் அவர்களுடைய இல்லங்களுக்கு தீ வைத்தீர்கள்" என்று கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களின் அறிவுறுத்தலை படையெடுபடலம் 85ல் காணலாம். இதேபோல்வே கலம்பகத்தில் கள்ளுக்கு இடமில்லை.

பதினெட்டு உறுப்புகளும் வெண்பா முதலிய பல பாக்களும், பாவினங்களும், அகமும், புறமும், எண் சுவைகளும் கலந்து பாடப்படும் ஒரு கலப்பு இலக்கியமே கலம்பகம் என அழைக்கப்படுகிறது. இந்த இலக்கிய வடிவத்தில் மக்காக் கலம்பகம், திருமதீனக் கலம்பகம், மதீனக் கலம்பகம், குலாலீர்க் கலம்பகம், நாகூர் கலம்பகம், பகுத்தாது கலம்பகம், நாகை கலம்பகம் எனப் படைப்புகளை முஸ்லிம் புலவர்கள் தந்துள்ளனர். ஆனால் கலம்பகம் பாடுவதற்குரிய அனைத்து அம்சங்களுடன் அவர்கள் பாடவில்லை. கள்ளுண்டு களி என்ற உறுப்பு தவிர்க்கப்பட்டுளளது. இதற்கு இஸ்லாமிய மதுவைத் தடை செய்துள்தே காணரம் என்கிறார் ஆய்வாளர்.

வேற்றுப்புலத்துக் கதைகளைத் தமிழில் பாடும்போது தமிழகத்திய மரபுகளுக்கு உட்படுத்தியும், தமிழ்ச் சூழலைச் சித்தரித்தும் பாடுவது மரபு. தங்கை அற்றய்கரை கம்பரின் காவியத்தில் காவிரி ஆற்றங்கரையாகி விடுகிறது. அயோத்தி சோழவள நாடாகிவிடுகிறது. இந்த மரபின் பிரகாரம் உமறுவின் சீறாவிலும் பாலைவனப் பிரதேசமாக மக்கா, தாமிரபரணி ஆற்றங்கரையின் சொக்க வைக்கும் சோலை நகராகிவிடுகிறது,

இவ்வாறு தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற தமிழ் மாந்தராக உருவகித்துப் பாடுவது தமிலிலக்கிய மரபு. ஆனால் தமிழகத்து மாந்தரை அதே பெயரில் வேறு புலத்து மாந்தராகச் சித்தரித்து தமிழகச் சூழலை அராபிய பாலைக்குக் கொண்டு சென்று கவிதையில் பச்சையம் பரிமாறிய சிறப்பும் புதிய மரபைத் தோற்றுவித்த பெருமையும் முஸ்லிம் புலவர்களுக்கு உண்டு.

தமிழக உழவர் இனத்தில் உழுவித்து உண்போரான அடித்தட்டு மக்கள் பள்ளர்கள். பிறப்பாலும், சாதியிலும் சமூக அந்தஸ்த்து மறுக்கப்பட்ட இனத்தவர்கள். இவர்களது வாழ்க்கை சூழலை மையப்படுத்திய 'பள்ளு' இலக்கியம். எந்நயினைப் புலவர் என்ற முஸ்லிம் புலவரே பள்ளர்களுக்கு முதன் முதலாக கதைமாந்தர் அந்தஸ்து அளித்து "முக்கூடற் பள்ளு" பாடினார். இவ்வாறு தீண்டத் தகாதவர்களாகச் சித்தரிக்கப்படும் பள்ளன் பள்ளியைக் கதையா மாந்தராகக் கொண்ட "திருமக்க பள்ளு" என்ற இஸ்லாமிய சிற்றிலக்கியம் உண்டு.

பள்ளன் அவனது இரு பள்ளியர் பண்ணைக்காரன் ஆகிய நான்கு மாந்தரே நாடகத்தை இறுதிவரை நடத்திச் செல்வதாக அமையும் பள்ளு இலக்கிய அமைப்பையே திருமக்கா பள்ளிலும் காணலாம். மூத்த பள்ளி மக்காப்பள்ளி, இளைய பள்ளி மதீனத்துப் பள்ளி, "இன்று முதல் இனத்திமிர், குலத்திமிர் அனைத்தையும் எனது காலடியில் போட்டு மதித்துவிட்டேன்" என்று இறுதி ஹஜ்ஜு உரையில் பெருமா-னார் பிரகடனப்படுத்திய மண்ணின் மைந்தர்களாக பள்ளன், பள்ளி இருவருக்கும் சிறப்பு செய்த பெருமை இந்நூலை இயற்றிய பெயர் தெரியாத புலவருக்கு உண்டு என்கிறார் ஆய்வாளர் அப்துல் சமது.

இஸ்லாம் "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனே" என்ற ஏகத்துவக் கோட்பாட்டினை கொண்ட மார்க்கம். அனைவரும் அவனுடைய அடியார்களே. ஒரே தலைவனின் அடியார்கள் என்றால் மனித குலத்தோர் அனைவரும் ஒன்று என்று அர்த்தம். இந்த அடிப்படையை பள்ளு இலக்கியத்தில் முஸ்லிம் புலவர் எடுத்தாண்ட விதம் பாரம்பரிய தமிழக மரபு வெளியில் ஒரு புதிய மரபை வகுக்கும் முயற்சியாகவே அமைந்துள்ளது.

காப்பியங்களில் வாழ்ந்து வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று முதலில் இடம்பெற வேண்டும் என்பது மரபு. தமிழ்க் காப்பியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளரை வாழ்த்தி வணங்கித் தொடரும் மரபினைக் காணலாம். இஸ்லாம் ஓரிறைக் கோட்பாட்டில் உறுதியான சமயம் என்பதால், உமது முதலான முஸ்லிம் புலவர்கள் தங்களது காப்பியங்களில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் ஓரிறைவனையே வாழ்த்தி வணங்கும் மரபைக் காணலாம். கடவுள் வாழ்த்துப் பகுதியில் இறை வணக்கத்திற்குப் பின்னர். நபிகள் நாயகம் முதற்கொண்டு கலிபாக்கள் இறை நேசர்கள் ஆகியோரின் புகழ்பாடும் பாக்களைத் தந்துள்ளனர். ஆனால் வணக்கம் இறைவன் ஒருவனுக்கே வழங்கப்பட்டுள்ளது.

காப்பியத் தலைவனையும், தலைவியரையும் அன், அள் விகுதியிட்டு அவன், அவள் என்று அமைப்பதே இலக்கிய மரபு. ஆனால் இறைத்தூதராகவும் முகம்மது (ஸல்) அவர்களையும் நபிகளின் தோழர்களையும் இறை நேசர்களையும் அவ் விகுதியில் மரியாதையாக அழைப்பது முஸ்லிம்களின் வழக்கமாக உள்ளது. இது இஸ்லாமிய இலக்கிய மரபாகும்.

இஸ்லாமிய நெறிகளுக்கு வழங்கும் கௌரவம் காரணமாக தங்கள் படைப்புகளில் சில தமிழிலக்கிய மரபுகளைத் தவிர்த்து சில மாற்று மரபுகளையும், புதிய மரபுகளையும் பயன்படுத்திள்ளனர். பரந்து விரிந்த இஸ்லாமிய இலக்கியத் தேடலில் இந்த ஆய்வானது ஓர் இலக்கிய ஆய்வு மட்டுமல்லாது நல்லிணக்கப் பண்பாட்டு ஆய்வாகவும் இது அமைந்திருப்பதாகவே கருதுகிறேன் என்றார் ஆய்வாளர்.

இலங்கையைச் சேர்ந்த கலாநிதி மகேஸ்வரன் தனது கட்டுரையை சமர்ப்பித்து உரையாற்றி பின்னர் அந்த ஆய்வின் உள்ளடக்கம் பற்றி சில விமர்சனங்கள் முன்வைக் கப்பட்டபோது இந்த ஆய்வாளரே, மார்க்கக் கண் கொண்டு மட்டும் இஸ்லாமிய இலக்கியத்தை நோக்கக் கூடாது என்று தன் கருத்தை வெளிப்படுத்தினார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)






**விஜய் - இளையதளபதி, அஜித் - அல்டிமேட் ஸ்டார், அப்போ நம்ம சூர்யா?**

**- எம்.எஸ்.எப் சுக்னா, காத்தான்குடி**

அதுதான் நீங்களே சொல்லிட்டீங்களே... நம்ம சூர்யா என்று. இளையதளபதி, அல்டிமேட் ஸ்டார் என்று சொல்லும்போது அவர்கள் இருவரும் எம்மில் இருந்து அந்நியப்படுகிற மாதிரி தெரிகிறது அல்லவா? ஆனால் நம்ம சூர்யான்னு சொல்லும்போது சூர்யா நம்மில் ஒருவராகத் தெரிகிறார் அல்லவா? எனவே நீங்க கொடுத்த பட்டமே போதும். என்ன சொல்றீங்க?

**நான் பவர் ஸ்டார் ரசிகன். அவருக்கு இலங்கையில் ஒரு ரசிகர் மன்றம் ஆரம்பிக்க ஆசைப்படுகிறேன். என் ஆசை நிறைவேற என்ன வழி?**

**- வி. தமிழரசு, ஹட்டன்.**



பவர் ஸ்டாருக்கு இப்போ நேரம் சரியில்லை. அவருக்கு ரசிகர் மன்றம் அமைக்கிறதை கொஞ்சம் தள்ளிப் போடுங்க. யாரோ ஒருவருக்கு ஒருகோடி ரூபா வாங்கித் தருவதாக சொல்லி 65 லட்சத்தை கமிஷனாக வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் பவரை உள்ளே போட்டிருக்கிறார்கள். மனிதர் தவித்துப்போய் வழுக்கை மண்டையில் வழிந்த வியர்வையை துடைத்துக்கொண்டு பரிதாபமாக நின்றகோலத்தை 'சன்'னில் நீங்கள் பார்க்கவில்லையா?

**திருவிளையாடல் படத்தை டிஜிட்டலுக்கு மாற்றுகிறார்களே. அது சாமி குத்தமில்லையா?**

**- கே.அருண், கொழும்பு 11**

கோயிலில் ஸ்பெஷல் பூசைக்கு தனிக் கட்டணம் வசூலிப்பாங்களே. அதுபோலத்தான் இதுவும். சொல்லப்போனால் இது ஒரு சாமி சேவை. பக்தியுள்ள சினிமாக்காரர்கள் மட்டுமே செய்வது! ஏ.பி நாகராஜன் அப்படித்தான் செய்தார். திருமண மந்திரங்கள், பூஜைகள் எல்லாம் டேப் ரெக்காடரில் போட்டு மங்கள வைபவங்கள் நடக்கின்றனவே, சாமி குத்தம் இல்லையா?

**என் கனவு நாயகன் டி.ராஜேந்தரின் 'கருப்பனின் காதலி' எப்போ திரைக்கு வரும்?**

**- எஸ்.அனோஜா, பதுளை**

'கருப்பனின் காதலி' டைட்டில் பத்தி ஒரு செய்தியும் இல்லையே. அதனால் அது வரும்..... ஆனா... டி.ஆர் நல்ல திறமைசாலி. அவர்கிட்ட நிறைய சரக்கிருக்கு. அவரோட வாய்த்துடுக்கு அதை மறைத்து விடுகிறது. மகன் ST ஆரும் அதேதான்.

**இப்போ நம்ம தமிழ் சினிமாவில தொப்புளில் பம்பரம் விடும் காட்சிகளை காண முடியவில்லையே?**

**- ஆர். ரமணன், வவுனியா**



ரொம்ப கஷ்டமாக இருக்கிறதோ? சரி, தொப்புள் இப்போ பழைய விஷயம். இப்போது இடுப்புக்குத்தான் மவுசு. 'நண்பனி'ல் இலியானாவின் இடுப்புக்காகவே பாட்டு வச்சாங்களே, பார்த்தீங்களா? இடுப்பை கொஞ்சமாகக் காட்டினாலே போதும் ரசிகர்களை வளைக்கலாம்!

**நமீதா திடீரென்று ஒல்லியானால்?**

**- ஜீவா, மட்டக்குளி**

அதுக்குத்தானே நாங்களும் காத்திருக்கிறோம். சில நேரம் தமிழில் சில்க் சுமிதா வேடம் கிடைத்தால் ஒல்லியான சில்க் நமீதாவை நாங்க பார்க்கலாம். ஆனா அந்த வேடம் கிடைக்கனுமே! பாவம் நமீ... குழந்தை முகம். ஆனா உடம்புதான் திம்சு கட்டை.

**நான் ஈ எந்திரனை மிஞ்சி விட்டதா?**

**- எஸ். சசிகலா, இரத்தினபுரி**

40 கோடி ரூபா செலவில் (இதில் 80 சதவீதம் கிராபிக் காட்சிகளுக்காக மட்டும்) ஒரே நேரத்தில் தெலுங்கிலும் (ஈகா) தமிழில் (நான் ஈ) உருவான படம் கடந்த ஜுலை 6ஆம் திகதி ஆந்திராவிலும் தமிழகத்திலும் வெளியானது. முதல்நாள் வசூல் மட்டும் 17 கோடி. ஜுலை 27ஆம் திகதி அதாவது 3 வாரங்களில் கலக்ஷன் 115 கோடி. தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருக்கிறது. வசூலை இன்னும் கணக்கிட்டுக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் மக்காய் என்ற பெயரில் இந்திக்கும் போகப்போகிறது. எந்திரன் வசூலை மிஞ்சிய மாதிரிதான். விரைவில் அறிக்கை வரும் அப்போது இது ஊர்ஜிதமாகிவிடும். எந்திரன் மெகா ரோபோவாக வந்தது. இது ஈ மாதிரி வந்து எந்திரனை விஞ்சுகிறது.

**ஹாய் சினிமானந்தா! என் கனவில் அடிக்கடி அமலாபால் வருகிறார். என்னசெய்வது?**

**- கே.ராஜா**

பக்கத்து வீட்டுப்பொண்ணு மாதிரி முகம் அமலாவுக்கு வாய்ச்சிருக்கு. எங்க எண்ணமெல்லாம் எங்கெங்கோ சுற்றினாலும் பக்கத்து வீட்டில் இருக்கும் பருவப்பொண்ணு மேல எப்பவுமே ஒரு கண்ணு இருக்கும். உங்களுக்கும் அப்படித்தான். அதனால்தான் உங்க கனவில் அமலாபால் அடிக்கடி வாறா

அது சரி, ஊழலற்ற இந்தியாவை உருவாக்குவதற்காக 5ஆம் தூண் (5th Piller) என்ற விழிப்புணர்வு திட்டத்தில் அமலாபால் சேர்ந்து கொண்டுள்ளாரே. அது தெரியுமா உங்களுக்கு? சமூக சேவையில் இணைந்து கொண்டதால் அமலாவுக்கு இனி நிறைய பிரெண்ட்ஸ். உங்க கனவுல வருவதற்கு இனி அவருக்கு நேரம் இருக்குமா?



**விசிறிமுகவரி**


Jayam Ravi
MM Theatre Complex,
# 137, K.H. Road,
Chennai - 600 017,
Ph. 00914428342733

சினிமானந்தா பதில்களுக்கான சினிமா தொடர்பான உங்கள் கேள்விகளை சுருக்கமாக கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ, எஸ்.எம்.எஸ்சிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்.

சினிமானந்தா
பதில்கள்,
வண்ண வானவில்,
த.பெ இல : 1218,
கொழும்பு

மின்னஞ்சல் முகவரி:
vannavaanavil@gmail.com

குறுந்தகவல் இல:
0778 021 501




### நல்ல கவிதைகளாக எழுதங்கள்

வானவில்லின் வனப்பும் வசீகரமும் இதழுக்கு இதழ் அதிகரித்துச் செல்வது மகிழ்ச்சி அளிக்கிறது. புதிய வாசகர்கள் பழைய இதழ்களை தேடி வருகிறார்கள். நான் கவிமுற்றத்தை முதலில் படிப்பேன். கடந்த இதழில் வெளியான நரேந்திரனின் திருவிளை யாடல் கவிதை எனக்கு பிடித்திருந்தது. கண்கெட்டதும் என்ற கவிதை மாணவர்களுக்கானது. மேலும அர்த்தமுள்ள கவிதைகள் இப் பகுதியில் இடம்பெற வேண்டும். அடுத்ததாக வானவில் டொட்கொம் படித்து பாதுகாக்க வேண்டிய பகுதி இது. தத்துவ பித்தன் வாசிக்க நன்றாக இருக்கிறது. இன்னும் அர்த்தமுள்ள வசனங்கள் வந்தால் நன்றாக இருக்கும்.

**- எம்.துஷ்யந்தன், மட்டக்களப்பு**

### எஸ்.எம்.எஸ். பூக்கள்

கடந்த இதழ் ஃபேஸ்புக் நன்றாக இருந்தது வெறும் நையாண்டி மாத்திரம் இல்லாமல் நறுக்கென்ற விஷயங்களும் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது. உதாரணம் : அப்பா + அம்மா + நண்பர்கள் என்ற விடயம். எஸ்.எம்.எஸ். பூக்கள் மெருகு குறையாமல் போகிறது.

**- எம்.எம்.அக்பர், மாளிகாவத்தை**

### உவ்வே விஷயம் பயனுள்ளது

கடந்த இதழில் வெளியான மருத்துவ விஷயமான பஸ்சில் உவ்வே... என்ற ஆக்கம் எனக்கு பிரயோசனமாக இருந்தது. பலரும் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல் இது. எனக்கும் இந்தப் பிரச்சினை கண்டு இந்த மாதிரியான விஷயங்களை அதிகம் தரவும் 'குவாலாலும்பூர்' என்று வாசித்ததும் எழுத்துப் பிழையோ என முதலில் நினைத்தேன். கட்டுரையில் அதிக விஷயம் இருக்கவில்லை. இந்த முருகன் மாநாடு பற்றி அதிகம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எஸ்.டி.ஆர். பிலிம்ஸ் பற்றிய கட்டுரை, உலகம் அழியுமா? என்ற தொடரில் வெளி-வரும் பல புதிய விஞ்ஞானத் தகவல்கள் என்பன நல்ல படைப்புகள். தொடர்ந்து வாசகர்களின் தேடல் பசிக்கு தீனி போடுவீர்கள் என்று தெரியும். எதிர்பார்த்து இருக்கிறோம்.

**- மங்கள ராணி, மாளிகாவத்தை**

### தெவிட்டாத வானவில்

மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள் என்ற மகுடத்தின் கீழ் வெளிவரும் உண்மைக் கதைகள் சிரிப்பாகவும் சீரியஸாகவம் இருக்கிறது. சுவை குன்றாது உள்ளது. கே.எஸ். ராஜாவை ஞாபகப்படுத்தியதற்கு நன்றி. காணாமல் போன கேக் எப்படி செம ஜோக்! தெவிட்டாதது தான் வான வில்

**- எம்.எம்.பஷீர், கரவெட்டி.**

### ரஜினியை சொட்டை என்று சொல்லலாமா?

வானவில் ரசிகர்களுக்கு ஒரு வேண்டுகோள். நீங்கள் அனுப்பும் ஜோக்ஸ் மகிழ்ச்சிக்காக என்றாலும் சில நேரங்களில் அவை எங்கள் மனதை புண்படுத்தியும் விடுகின்றன. கடந்த மாதம் வெளியான வானவில் SMS பகுதியில் ரஜினி, அஜித், விஜய் பற்றி மிகவும் கேவலமான ஒரு ஜோக் வெளியாகி இருந்தது. அதை ஜோக் என்றுகூட சொல்ல முடியாது. ரஜினியை சொட்டை என்றும் அஜித் பிலிம் காட்டுறாரு என்றும், விஜய் பேர்ல பொறுக்கிப் பசங்க என்றும் அந்த ஜோக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது மிகவும் வருத்தமளிக்கிறது. அவங்க அளவுக்கு நம்மால் வரமுடியாது என்றாலும் அவர்களை தரக் குறைவாக பேச உங்களுக்கு எந்த தகுதியும் கிடையாது. எனவே இப்படியான ஜோக்குகளை வானவில்லுக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**- வானவில் வாசகர்**

### ஊக்குவித்து வருகிறீர்கள்

சில காலமாக தொடர்ந்தும் வானவில்லுக்கு என் கவிை-தகளை அனுப்பிவருகிறேன் என் மனம் குளிரும் வகையில் கவிதைகளை பிரசுரித்து வருகிறீர்கள். அதற்கு நான் எவ்வாறு கைமாறு செய்வேனோ! உங்கள் அன்பிற்குரிய நான் ஒரு உயர்தர, கலைப்பிரிவு மாணவி என் முன்னேற்றத்தில் உதவி வரும் நண்பன் வானவில்லை யான் என்றும் மறவேன்.

**- எம்.எச்.எம்.ஸஹாரா**

### VIP ALBUM

உங்கள் VIP Album எங்களைக் கவரும் வகையில் உள்ளது. ஆனால் சினிமா நட்சத்திரங்களை மட்டும் அல்பத்தில் கொண்டு வராமல் விளையாட்டு வீரர்களை குறிப்பாக கிரிக்கட் வீரர்களையும் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்பது என் எண்ணம். வாசகர்கள் விளையாட்டு வீரர்களின் சின்ன வயசுப் படங்களையும் பார்க்க விரும்புகின்றனர்.

**- அ.ம.அல். அக்தர், ஓடாவியார் வீதி, ஏறாவூர் 02.**

### வானவில்லும் நானும்...

வானவில்லைப் பார்த்த முதல் சந்தர்ப்பத்திலேயே வானவில்லிடம் தொலைந்துபோனேன். நானும் வானவில்லும் ஒரே வண்ணமாய் இருக்க விரும்புகிறேன்.

**- ஆர்.பி. சியா, வவுனியா.**

# 16 இலட்சம் பேர் பணி புரியும் இந்திய ரயில்வே

'பறவையைக் கண்டான்.. விமானம் படைத்தான்' என்று விமானக் கண்டுபிடிப்புக்கு தத்துவம் உண்டு. ஆனால், ரயிலுக்கு அப்படி முன்னோடி எதுவும் இல்லை 500 ஆண்டுகளுக்கு முன்பு, 'மரவண்டியை குதிரை இழுத்துச் செல்வதற்கு பதில் இயந்திரம் இழுத்துச் சென்றால் எப்படி இருக்கும்?' என வெள்ளைக்கார துரைகள் யோசித்ததன் விளைவுதான் ரயிலின் தோற்றத்துக்குக் காரணம்.

1820 களில் பிரிட்டனில் ரயிலை அறிமுகம் செய்தார்கள் ஆங்கிலேயர்கள். அப்போது இந்தியாவும் பிரிட்டனின் காலனி நாடு என்பதால், இந்தியாவிலும் இச்சேவையைத் தொடங்க நீண்ட காலமாகவே திட்டமிட்டனர். 1832ல் முதன் முதலில் இந்தியாவில் பரீட்சார்த்த முறையில் ரயில் இருப்புப் பாதை அமைத்த இடம் சென்னை தான். 1836 ல் சிந்தாதிரிப்பேட்டை பாலத்தில் இருந்து ரெட்ஹில்ஸ் வரை இருப்புப் பாதை அமைத்து ரயில் ஓட்டிப் பார்த்தார்கள்! 'கிரேட் இந்தியன் பெனின்சுலார் ரயில்வே மற்றும் 'ஈஸ்ட் இந்தியன் ரயில்வே' ஆகிய நிறுவனங்களின் பெரும் முயற்சியால், 1853 ஏப்ரல் 16 முதல் பயணிகள் ரயில் இந்தியாவில் பயணத்தைத் தொடங்கியது.

மும்பையில் போரிபந்தர் என்ற இடத்திலிருந்து தானே வரை 34 கிலோ மீட்டர் தூரம்தான் முதல் பயண தூரம். அதன் பின் ஜெட் வேகத்தில் பயணித்தது ரயில்வே துறை. 25 ஆண்டுகளுக்குள் 25 ஆயிரத்து 495 கி.மீ நீளத்திற்கு இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன. சுதந்திரம் வாங்கிய போது 53 ஆயிரம் கி.மீ நீளத்திற்கு ரயில் பாதை அமைக்கப்பட்டிருந்தது.

இன்று உலகிலேயே மிகப்பெரிய ரயில்வே வலைப் பின்னலைக் கொண்ட 5வது நாடு இந்தியா. 60,015 கி.மீ நீளத்திற்கு ரயில் பாதைகள் இங்கு உள்ளன. உலகில் 16 லட்சம் ஊழியர்களைக் கொண்ட மிகப் பெரிய துறை இது. தினமும் இந்தியாவில் 2 கோடி பயணிகள் ரயில் பயணத்தை நம்பியிருக்கிறார்கள். இப்படி பல சிறப்புகளை கொண்ட இந்திய ரயில்வேயின் நினைவாக, முதல் பயணிகள் ரயில் ஓடத் தொடங்கிய ஏப்ரல் 16ம் தேதியை மையமாக வைத்து ரயில்வே வாரத்தை 1955ம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது ரயில்வே துறை. இந்த வாரத்தின் நோக்கம், இந்திய ரயில்வேயைப் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே!

## கைபேசி வழியாக வந்த...

(3ஆம் பக்கத் தொடர்)

நான் அந்தக் கதிரையில் அவரையும் அமரச் சொன்னேன். அது ஒரு சிறிய கதிரை. இருவரும் மிகவும் இறுக்கமான நெருக்கத்தில் என் உடம்புக்குள் ஏதோ செய்வது போல இருந்தது. அவரின் கைகள் கீ போர்டில் டைப் செய்வதையே என் கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன. அப்போது நான் எதிர்பார்க்காத ஒரு சம்பவம் நடைபெற்றது.

அந்த நெருக்கத்தை பயன்படுத்திக் கொண்ட அவர் என் கன்னத்தில் 'ப்ச்' என்று ஒரு முத்தம் தந்தார். அவ்வளவுதான் என் உடம்பில் ஆயிரம் மெகா வோட்ஸ் மின்சாரம் பாய்ந்த மாதிரி ஒரு உணர்வு.

இனி எனக்கு எல்லாமே அவர்தான். என் உலகமே இவராகத் தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்து மனமெங்கும் நிறைந்தது. அது ஒரு ஆழமான உணர்வு.

அதன் பின் அவரும் நானும் காதலர்களாக திரிந்தோம். என் வீட்டிற்கும் அவர் வந்துப் போகத் தொடங்கினார்.

ஒரு நாள் எதிர்பாராத ஒரு பிரச்சினைக்கு நான் முகம் கொடுக்க நேரிட்டது. வீட்டுக்காரர் வீடு வேண்டும், அவசரம் என்றார். உடனடியாக நான் வேறு வீடு பார்த்தாக வேண்டும். பணம் புரட்டியாக வேண்டும். என்னிடமோ காசு இல்லை. புரட்டும் வழியும் தெரியவில்லை. ஆபத்து எனக்கு அவரைத் தவிர யாரையும் தெரியாது. அவரிடம் என் நிலையைச் சொன்னதும் உடனடியாக பணத்துடன் வந்தார். உதவி செய்தார். எங்கள் உறவு மேலும் இறுக்கமானது. அவர் அழைத்த இடத்திற்குகெல்லாம் நான் மறுப்பின்றி சென்றேன். நான் அவரை என் உயிராகவே கருதத் தொடங்கி னேன். என் நண்பன், வழிகாட்டி, காதலன் எல்லாம் அவரே. அவரை நான் காதலிப்பது என் தோழிகள் அனைவருமே அறிவார்கள்.

மாதங்கள் சில கழிந்தன. அவரின் அழைப்பும், தொடர்பும் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. திடீரென்று அவரின் தொடர்பு முற்றிலுமாக நின்று விட நான் இடிந்து போய் விட்டேன். நானும் அவரை எத்தனையோ முறை தொடர்பு கொண்டும் எந்தப் பயனும் இல்லை. அவர்மேல் எனக்கு இருந்த மயக்கத்தில் அவர் எங்கு இருக்கிறார் என்பதையும் நான் அவரின் இருப்பிடம் பற்றி விசாரித்த போது அவர் அதற்கு நேரிடையாக பதில் சொல்லாமல் மழுப்பி வந்தது அப்போதுதான் என்னில் உறைத்தது. காதல் மயக்கத்தில் நானும் அதை பெரிதாக கண்டு கொள்ளவில்லை. நான் விட்ட தவறு இப்போதுதான் எனக்கு புரிந்தது.

மாதங்கள் உருண்டோடி ஆறு மாதங்கள் முடிந்து விட்ட பிறகும் அவர் பற்றிய ஒரு செய்தியும் எனக்குக் கிடைக்கவில்லை.

ஒரு நாள் நான் கோயிலுக்கு சென்றேன். அப்போது என்னைக் கடந்து ஒரு பைக் சென்றது. அந்த பைக்கில் என் பிரிய காதலன் வேறு ஒரு பெண்ணுடன் அவள் மிக நெருக்கமாக... எனக்கு உலகமே இருண்டு விட்டது போல இருந்தது. என்ன செய்வது... விதி செய்த வழியாக நான் நடைப்பிணமாக பயணம் செய்து கொண்டிருக்கிறேன்.

## யாழ்ப்பாணத்தில் நசிந்துவரும்...

(10ஆம் பக்கத் தொடர்)

தோய்த்தெடுத்து உலர்த்துவதன் மூலம் பாணிப் புகையிலை தயாரிக் கப்படுகிறது. இதற்கு தென்னிலங்கை மற்றும் மலையகப் பகுதிகளில் அதிக கிராக்கி இருக்கிறது. போர்க்காலச் சூழ்நிலைகளுக்குப் பின்னர் யாழ் குடாநாட்டில் பாணிப் புகையிலையின் தயாரிப்பும் வெகுவா கக் குறைந்துவிட்டது. ஆனால், இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து பதப்படுத்தப்பட்ட புகையிலையைத் தருவித்து புத்தளத்தில் பாணியிடப்படுகிறது" என்கிறார் இவர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கனடா சென்றிருந்தபோது, காபரோ நகரில் அமைந்திருந்த 'சங்கானை சந்தை'யில் திறம் தாவடி சுருட்டு புகையிலை இங்கே பெற்றுக்கொள்ளலாம்" என்று எழுதப்பட்டிருந்த அறிவித்தல் பலகையை பார்க்க முடிந்தது என்று சொல்கிறார் கலாநிதி ஆறு.திருமுருகன். யாழ்ப்பாணப் புகையிலைக்கு இருக்கும் சர்வதேச மதிப்பை இதனூடாக தெரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

கலாநிதி ஆறு.திருமுருகனுடன் உரையாடிய போது சில தகவல்களை பெறமுடிந்தது.

''புகையிலைச் செய்கை நாற்றுமேடைப் பயிராகவே தொடங்குகிறது. இந்த செய்கைக் கான செலவினம் அதிகரித்துவரும் நிலையில் வடபகுதி விவசாயிகள் பலர் கரட், பீற்றூட் போன்ற மாற்றுப் பயிர்களின் உற்பத்தியில் நாட்டம் கொண்டு ஈடுபட்டு வருகிறார்கள். வருடத்தில் மூன்று தடவைகள் வெங்காயத்தையும் செய்து வருகிறார்கள். ஒரு காலத்தில் தாவடிப் புகையிலை, இணுவில் புகையிலை, நவக்கிரி புகையிலை என்றெல்லாம் பலராலும் மதிக்கப்பட்டு விரும்பி வாங்கப்பட்டது. முன்னைய காலத்தில் யாழ்ப்பாணத்தி லிருந்து தென்னிலங்கை செல்லும் சரக்கு புகைவண்டியில் புகையிலை சிப்பங்களும், சுருட்டுகளும் அனுப்பி வைக்கப்பட்டன. இதற்காக கோண்டாவில் புகையிரத நிலையத்தில் சரக்கு புகைவண்டி அதிக நேரம் தரித்து நின்றது.

அந்நாளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் தென்னிலங்கைப் பகுதியில் சுருட்டுத் தொழில் நிலையங்களை நடத்தியும் வந்திருக்கிறார்கள். சுருட்டு புகைப்பது வெற்றிலையுடன் சேர்த்து பாணிப் புகையிலையை பாவிப்பது போன்ற செயற்பாடுகள் புற்றுநோயை ஏற்படுத்தும் என்ற பிரசார நடவடிக்கைகளும் புகையிலைச் செய்கையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துவிட்டன." என்கிறார் கலாநிதி ஆறு.திருமுருகன்.

## உலகைக் கட்டியாண்ட...

(9ஆம் பக்கத் தொடர்)

தாக்கம் ஏற்பட்ட காலகட்டம் டைனோஸர்கள் அழிந்தகாலம். மேற் கூறிய ஆய்வுகள் பற்றி அறியாமல் டைனோஸர்கள் அழிவுபற்றி எண்பது களில் ஆராய்ந்து கொண்டிருந்த கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ் ஞானி லூயிஸ் ஆல்வாரஸ், அவரது மகன் வால்டர் ஆல்வாரஸ் இருவரும் டைனோஸார் அழிவுக்கு ஒரு விண்கல் மோதலே காரணமாயிருந்தி ருக்கலாம் என்று குறிப்பிட்டனர். இதற்கு முக்கிய காரணம், அக்கால கட்டத்தில் உருவான படிவங்களின் விண் கற்களில் கிரிடியம் என்ற உலோகம் பரவலாகக் காணப்பட்டது. அறிவியல் உலகம் இன்று டைனோ ஸர்கள் அழிந்ததற்கான முக்கிய காரணம் சீக்ஷலூபில் மோதிய விண் கல் என்பதை ஏற்றுக் கொண்டது. அங்கு என்னதான் நடந்தது?

ஏறத்தாழ 10 கி.மீ அகலம் கொண்ட விண்கல் ஒன்று மணிக்கு 50,000 கி.மீ வேகத்தில் மோதியது. மோதி விழுந்ததால் ஏற்பட்ட பள்ளத்திலிருந்து உடைந்த பாறைச் சிதறல்கள் வானுயரத்துக்குத் தூக்கியெறியப்பட்டு அவை மறு படியும் வளிமண்டலத்தில் நுழைந்த போது எரிகற்களாகி விழுந்து, எங்கும் தீயைப் பற்றவைத்தன. முதல் விண்பாறை விழுந்தபோது ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் 200,000 அணுகுண்டுகள் வெடித்தது போன்ற தாக்கத்தை உருவாக்கியது. உலகம் முழுவதும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. பல ஆயிரம் மீட்டர் உயரமான மெகா சுனாமிகள் எழுந்தன. கரிபிய கடற்கரைப் பகுதிகளில் 600 கி.மீ உள்வந்தன என்பதற்கான புவியியல் ஆதாரங்கள் காட்டுகின்றன. விண்கல் விழுந்த இடத்தைச் சுற்றி 2000 கி.மீ. தூரத்தி லிருந்த அத்தனை உயிரினங்களும் அழிந்துவிட்டன. மேலும் பெரும் மோதலால் உண்டான நிலநடுக்கங்கள் எரிமலை வெடிப்புகளையும் தூண்டின. விண்கல் மோதலால் ஏற்பட்ட புழுதியும், எரிமலைகள் வெடித்ததால் எழும்பிய சாம்பலும் வளிமண்டலத்தில் பரவியது.

அவை பூமியின் மேல் ஒரு பெரும் குடை கவிழ்த்தது. போல அமைய, வானம் கறுத்து பூமியின் மேற்பரப்பில் சூரிய ஒளிபடுவது குறைய, பூமி குளிர்ந்தது. இது ஏறத்தாழ பத்து ஆண்டுகள் தொடர்ந்தபோது டைனோ ஸர்கள் இத்தகைய பருவநிலை மாற்றத்துக்கும் அதனால் ஏற்பட்ட பஞ்சத்துக்கும் ஈடுகொடுக்க முடியாமல் அழிந்தன. இதுதான் டைனோசர்கள் சடுதியாக பூமியில் இருந்து மறைவதற்கான காரணமாக முன்வைக்கப்படுகிறது. இக் கோட்பாடு இன்று உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(தொடரும்)

## விதி செய்தது சரியோ...

(7ஆம் பக்கத் தொடர்)

நாடி, நரம்புகள் புடைத்தெழுந்தன. மூளைக்குள் ஏதோ ஒன்று வெடித்துச் சிதறியது. யாரோ தன்னை அதள பாதாளத்துக்குள் இழுத்துச் செல்வதைப் போல் உணர்ந்தான். அவனது மூளை சொல்வதை செய்யும் அடிமையானான். ஏதாவது செய். உன்னை காப்பாற்றிக் கொள் என்று கிடைத்த சமிக்ஞை அவனை உலுக்கி எடுத்தது.

மேசையில் இருந்த பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு திடீரென வெளியே பாய்ந்தான். நேராக சசியை நோக்கி ஓடினான். அவளது தலைமுடியை பற்றி இழுத்தான் அவள் வீறிட்டுக் கத்தினாள். அருகில் இருந்தவர்கள் அவனை பிடிக்க முயன்றனர். ஆனால் வயதான அந்த இரு பெண்களால் அவனை பிடித்து நிறுத்த முடியவில்லை. அந்த பெரிய கத்தி சசியின் கழுத்து நரம்புகளில் இறங்கின. இரத்தம் அறை முழுவதும் தெளித்தது. நொடியில் சசியின் உயிரற்ற உடம்பு கீழே விழுந்தது. அந்த உடம்பில் ஆத்திரம் தீருமட்டும் ஒன்பது முறை குத்தியபின் வீட்டை விட்டு வெளியே ஓடினான் தமித். அடுத்த நாள் பொலிஸார் அவனை கைது செய்தனர்.

படிப்புதான் முக்கியம், காதலே வேண்டாம் என்ற இருந்த சசிகலாவை விதி காதலில் சிக்கவைத்தது அந்தக் காதலிலும் வெற்றிபெற முடியாமல் விதி சாவை நோக்கி இழுத்துச் சென்றது. விதி செய்தது சரியோ அத்தான்?

## மனதுக்கு அதீத...

(6ஆம் பக்கத் தொடர்)

(உ) அவர்களது சமூகநிலை, மற்றும் செய்த தொழில்

11. உங்களுக்கு வழங்கப்படும் பட்டியலில் ஆபத்தான நிலையில் உள்ள 10 நோயாளிக-ளில் இருந்து 5 பேரை தெரிவுசெய்து (குறிப்பிட்ட 10 பேரின் லக்கினம், திகதி, பிறந்த நேரம் வசிக்கும் இடம் ஆகிய விபரங்கள் தரப்படும் ஒரு காலவரையறைக்குள் அதீத சக்தி, நம்பிக்கை சக்தி, தெய்வ சக்தி அல்லது மந்திரசக்தி மூலம் முழுமையாக குணப்படுதல்.

12. முற்றாக பார்வையிழந்த 10 பேர் அல்லது நடக்கமுடியாத 10 பேரில் (லக்கினம், திகதி, பிறந்த நேரம் வசிக்கும் இடம் ஆகிய விபரங்கள் தரப்படும்) 5 பேரை தெரிவுசெய்து அதீத சக்தி நம்பிக்கை சக்தி தெய்வ சக்தி அல்லது மந்திர சக்தி மூலம் குறிப்பிட்ட ஒரு காலவரைக்குள் முழுமையாக குணப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட 10,11,12 ஆகிய சவால்கலை ஏற்றுக்கொள்வோர் ஜோதிடப் புத்தகங்கள் பஞ்சாங்கங்கள் காலண்டர்கள், மற்றும் கணினி ஆகியவற்றை பயன்படுத்தலாம்.

சவால்களை ஏற்றுக்கொள்வோர் தொடர்பான நம்பிக்கையை உறுதி செய்து கொள்வதற்காக ஆரம்பகட்ட சோதனை இடம்பெறுவதுடன் (நடுவர் சபை முன்னால்) சவாலை ஏற்றுக்கொள்பவர் 10 ஆயிரம்ரூபாவை கட்டுப்பணமாக செலுத்தவேண்டும். வெறுமனே விளம்பரம் பெற்று நன்மை அடைய விரும்புவேரைத்தவிர்க்க இவ்வாறு கேட்கப்படுகிறது.

மேற்கூறிய சவால் தொடர்பாக விபரங்கள் தேவைப்படுவோர் இலங்கை பகுத்தறிவாளர் சங்கம் 226 சைமன் தியேஸ் மாவத்தை, மாதுப்பிட்டிய, பாணந்துறை என்ற விலாசத்தில் தாரக 0727449599) அமுனுகெட 0773119398) அல்லது சுரபால 0777295200) ஆகியோரை அவரவர்க்கு உரிய தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்.

நடுவர் சபையில் பகுத்தறிவாளர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ஊடகவியளாளர் ஒருவர் மற்றும் ஒரு ஓய்வு பெற்ற நீதியரசரும் இடம்பெறுவார்கள் என்று பகுத்தறிவாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

# உசேய்ன் போல்ட்: மின்னல் வேகத்தின் முகவரி




லண்டன் ஒலிம்பிக் அரங்கு 2012.... ஆடவர்களுக்கான 100 மீட்டர் இறுதிப்போட்டி.. மைதான அரங்கில் 80 ஆயிரம் பார்வையாளர்கள். உலகளாவிய ரீதியில் 200 கோடிப்பேர் இந்த நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தனர். அனைவரிடமும் அப்படியொரு டென்ஷன்!

போட்டியில் பங்குபற்றும் 8 வீரர்களும் தமக்குரிய ஓடு பாதையின் ஆரம்ப நிலையில் அணிவகுத்து நிற்கின்றனர்.

உலகின் அதிவேக ஓடட வீரன் யார்?

இன்னும் சில நிமிடத்தில் விடை தெரிந்துவிடும்.

ஆனால் மைதான அரங்கில் குழுமியிருந்த அனைவரின் பார்வையும் குறிப்பிட்ட ஒரு ஓட்ட வீரர் மீது லயித்திருந்தது.

அவர்தான் உசேய்ன் போல்ட்.

100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் ஓட்டத்தில் உலக மற்றும் ஒலிம்பிக் சாதனைக்குச் சொந்தக் காரர்.

கடந்த 2008இல் சீனாவில் பீஜிங் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் மேற்கூறிய இரு போட்டிகளிலும் அவர் உலக சாதனை ஏற்படுத்தியிருந்தார்.

இம்முறை ஒலிம்பிக்கிலும் அவர் வெற்றிபெறுவாரா? புதிய சாதனை படைப்பாரா? ஜமேய்காவை சேர்ந்த போல்ட் பயிற்சிப் போட்டிகளில் சக வீரர் யொஹ‌ான் பிளேக்கிடம் இருமுறை தோற்றுவிட்டாரே.. அது இம்முறை வெற்றியை பாதிக்குமா?

மைதானத்தின் அரங்கில் நிறைந்திருந்த 80 ஆயிரம் பார்வையாளர்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சியை தொலைக்காட்சி மூலம் பார்த்துக்கொண்டிருந்த 200 கோடி பேர் மனங்களிலும் இந்தக் கேள்விதான் தோன்றி மறைந்தது.

போட்டியை ஆரம்பித்து வைப்பவரின் குரல் ஒலிபெருக்கியில் ஒலித்தது.

on your mark... set... டும்...

வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல வீர்கள் குனிந்த நிலையில் இருந்து நிமிர்ந்து பறந்தனர்.

போல்ட்... போல்ட்... கமோன் போல்ட்.

ஆரவாரகோஷங்கள் காதைப் பிளந்தன.

முதல் 50 மீட்டர் ஓட்டத்தையடுத்து உசேய்ன் போல்ட் சகவீரர் யொஹ‌ான் பிளேக்குக்கும் இடையில் ஒருவரையொருவர் முந்துவதற்குப் பலத்த போட்டி நிலவியது.

60 மீட்டருக்குப்பின் போல்ட்டின் காலடிப்பாய்ச்சல் ஒரு சிறுத்தையை ஒத்திருந்தது. அந்த பாய்ச்சல் வேகத்தக்கு பிளேக்கினால் ஈடு கொடுக்க முடியவில்லை.

80 மீட்டரை, தாண்டும்போது இருவருக்கும் இடையே ஒரு மீட்டருக்கும் மேற்பட்ட இடைவெளி...

100 மீட்டரை எட்டும்போது போல்ட்டுக்கு சுமார் 3இ 3 1/2 அடி தூரத்தில் பிளேக் இரண்டாம் இடத்தில் இருந்தார். போட்டியில் மூன்றாம் இடத்தைப் பிடித்ததும் ஒரு ஜமேய்க்கா வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

100 மீட்டரை ஓடிக்கடக்க உசேய்ன் போல்ட் எடுத்துக்கொண்ட நேரம் 9.63 செக்கன்கள். இது ஒரு புதிய ஒலிம்பிக் சாதனை.

2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக்போட்டிகளின்போது 100 மீட்டர் தூரத்தை 9.69 செக்கன்களில் ஓடியதே அதுவரை ஒலிம்பிக் சாதனையாக இருந்தது.

எனினும், 2008 ஒலிம்பிக்கின்போது நிலைநாட்டிய 100 மீட்டர் ஓட்டத்துக்கான உலக சாதனையை 2009ஆம் ஆண்டில் ஆகஸ்டில் ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்ற உலக மெய்வல்லுன சாம்பியன் போட்டிகளில் 100 மீட்டர் தூரத்தை 9.58 செக்கன்களில் ஓடிமுடித்து உசேய்ன் போல்ட் புதிய உலக சாதனையை நிலைநாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு சில நாட்களுக்கு முன்னர் ஜமேய்காவில் நடைபெற்ற இரண்டு பயிற்சி ஓட்டங்களின்போது சகவீரர் யொஹ‌ான் பிளேக்கிடம் இரண்டு முறையும் தோற்றுப்போனதால் உசேய்ன் போல்ட்டின் சரித்திரம் அத்துடன் முடிந்துவிட்டது என்று நினைத்தவர் பலர்.

எனவே 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 100 மீட்டர் ஓட்டப் பந்தயம் உலகளாவிய ரீதியில் உள்ள கோடிக்கணக்கான விளையாட்டு ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வித எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் லண்டன் 2012 ஒலிம்பிக்கின் 100 மீட்டர் ஓட்டத்தில் உசேய்ன் போல்ட் முதலிடத்தை பெற்று கோடிக்கணக்கான விளையாட்டு ரசிகர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றினார்.

"இரு பயிற்சி போட்டிகளிலும் பிளேக் என்னை முந்தியது எனக்கு மேலும் ஆர்வத்தை ஏற்படுத்தியதுடன் மிகவும் வேகமாக செயற்பட வேண்டிய அவசியத்தையும் எனக்குள் தோற்றுவித்தது. அதன் காரணமாகவே முதலிடத்தையும் நல்ல நேரப் பெறுதிையயும் என்னால் பெற முடிந்தது" என்று லண்டன் 12 ஒலிம்பிக் போட்டியின் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தின் முடிவில் போல்ட் கூறியிருந்தார்.

லண்டன் 2012 ஒலிம்பிக் போட்டியின் 100 மீட்டர் ஓட்டத்தில் யொஹ‌ான் பிளேக், உசேய்ன் போல்டினைவிட 0.12 செக்கன்கள் பின்தங்கினார். ஜமேய்க்காவில் நடைபெற்ற பயிற்சிப் போட்டிகளில் பெற்ற இரு தோல்விகளையும் போல்ட்டின் இந்த வெற்றி மறக்கச் செய்துவிட்டது.

உலகின் தற்போதைய அதிவேக ஓட்ட வீரர்களில் முதல் ஐந்தாறு வீரர்கள் ஜமேய்க்காவை சேர்ந்தவர்கள். உசேய்ன் போல்ட், யொஹ‌ான் பிளேக், மைக்கல் பிரட்டர், நெஸ்டா கார்ட்டர் என்ற வரிசைப்படி நான்கு ஜமேய்க்கா வீரர்கள் லண்டன் 2012 ஒலிம்பிக்கில் ஆண்டுகளுக்கான 4X100 அஞ்சலோட்ட போட்டியில் உலக சாதனையுடன் தங்கப்பதங்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது. 36.84 செக்கன்களில் 4X100 அஞ்சலோட்டத்தை ஓடி முடித்து இந்த உலக சாதனையை அவர்கள் நிலைநாட்டியிருந்தனர்.

வேகமாக ஓடுபவர்களுக்கான ஒரு நாடு ஜமேய்க்கா என்பதை மகளிருக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் தொடர்ந்து இரு ஒலிம்பிக் போட்டிகளில் ஜமேய்க்கா வீராங்கனை ஷெல்லி ஆன் பிரேசர் தங்கப் பதக்கம் வென்றமை நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

இத்தனைக்கும் ஜமேய்க்கா ஒன்றும் பெரிய நாடு அல்ல. மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான ஜமேய்க்கா இலங்கையின் 6/1 அளவினைக் கொண்டது.

ஜமேய்க்காவின் நீளம் 234 கிலோ மீட்டர், அகலம் 80 கிலோ மீட்டர். கியூபாவுக்கு தெற்கில் 145 கிலோ மீட்டர் தூரத்தில் ஜமேய்க்கா அமைந்துள்ளது. ஜமேய்க்கா மேற்கிந்திய தீவுகளில் மூன்றாவது பெரிய தீவாகும். இதன் மொத்த சனத்தொகை 6 லட்சம் பேராகும். கிங்ஸ்டன் இதன் தலைநகரம். மறக்க முடியாத ஆங்கில பொப் பாடல்களைத் தந்த பாடகர்கள் முன்னர் ஜமேய்க்காவின் பெயரை நிலைநிறுத்தி இருந்தனர்.

ரேகே மற்றும் கலிப்ஸோ சங்கீதத்துக்கு பேர் போன கிங்ஸ்டன் போதை வஸ்து கடத்தல், மற்றும் குற்றச் செயல்களுக்கும் பேர் போன இடம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிரிக்கட் மற்றும் மெய்வல்லுன விளையாட்டுகள் ஜமேய்க்காவில் பிரபலமானவை.

மேற்கிந்திய தீவுகளான அன்டிகுவா, பார்படோஸ், டிரினிடாட் அன்ட் டொபாகோ, செயின்ட் லுசியா, கிரனாடா, கயானா மற்றும் ஜமேய்க்காவில் இருந்து உலக புகழ்பெற்ற பல கிரிக்கெட் வீரர்கள் உருவாகியுள்ளனர்.

இவர்களில் ஜோர்ஜ் ஹெட்லி, லோரன்ஸ் ரோ, அல்ப் வெலன்டைன், மைக்கல் ஹோல்டிங், கெர்ட்னி வோல்ஸ், கிறிஸ் கேய்ல் ஆகிய வீரர்கள் ஜமேய்க்காவை சேர்ந்தவர்கள்.

கிங்ஸ்டனில் உள்ள 'சபீனா பார்க்' உலகப புகழ்பெற்ற கிரிக்கெட் மைதானங்களில் ஒன்றாகும்.

குறுந்தூர ஓட்டப்பந்தயங்களில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை அண்மைக் காலத்தில் ஜமேய்க்கா உடைத்திருக்கிறது. கடந்த சில வருடங்களில் ஜமேய்க்கா ஒலிம்பிக் தங்கப்பதக்கங்கள் 13, உலக மெய்வல்லுன சாம்பியன்ஷிப் தங்கப்பதக்கங்கள் 14, பொதுநலவாய அமைப்பு நாடுகளின் விளையாட்டு போட்டிகளில் 45 தங்கப்பதக்கங்கள் என தங்கப்பதக்கங்களை அள்ளிக் குவித்திருக்கிறது. மேற்கூறிய 13 ஒலிம்பிக் தங்கப்பதங்களில் 6 பதக்கங்கள் உசேய்ன் போல்ட் பெற்றுத்தந்தவை.

ஜமேய்க்காவின் குறுந்தூர ஓட்ட வீர, வீராங்கனைகள் அமெரிக்காவிலேயே தமது பயிற்சிகளை பெறுகின்றனர். 45 நிமிடங்களில் விமானம் மூலம் ஜமேய்க்காவிலிருந்து அமெரிக்காவிற்கு செல்ல முடியும். இந்த வசதியை பயன்படுத்தி 200க்கும் மேற்பட்ட ஜமேய்க்கா வீர வீராங்கனைகள் தற்போது அமெரிக்காவில் பயிற்சி பெற்று வருகின்றனர். குறுந்தூர ஓட்டங்களில் ஜமேய்க்கா தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்த இவர்கள் பெரிதும் துணையாக இருப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

கிறிஸ்தோபர் கொலம்பஸ் 1494 ஆம் ஆண்டு மே 3ம் திகதி ஜமேய்க்காவை கண்டுபிடித்தார்.

ஜமேய்க்காவின் பிரபல குடிமகன் ரேகே பாடகர் பொப் மார்லே மக்களுக்காக பாடல் பாடிய ஒரு மக்கள் பாடகன். அதேபோல் உலகின் அதிவேக ஓட்ட மனிதன் உசேய்ன் போல்ட் ஜமேய்க்காவின் முகவரியாகத் தற்போது திகழ்ந்து வருகிறார்.

ஜமேய்க்கா சுதந்திரம் பெற்று 50ஆவது வருட நிறைவு கடந்த ஆகஸ்ட் 6ம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**அடுத்த இதழில் போல்ட்டின் இளைமைக் காலம்**

**நன்றி - கிரீடா**

## பாமரன் பார்வையில்...

### 100 மீற்றர் எதிர்காலத்தில் என்னவாகும்?

உசெய்ன் போல்ட் தனது சாதனையை அவரே முறியடித்து புதுப்புது சாதனைகளை உருவாக்கி, உலக விளையாட்டு ரசிகர்களை திணறடித்து வருகிறார். சீட்டா சிறுத்தைத்தான் மனித உருவில் வருந்து விட்டதா என்று திகைக்கிறோம். அவரது இந்த உலக குறுந்தூர சாதனையை அடுத்து வரும் உலக மெய்வல்லுநர் போட்டிகளில் அவரே தகர்ப்பாரா அல்லது வேறு யாராவது ஒருவர் முறியடிப்பாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இங்கே ஒரு கேள்வி எழுகிறது. ஒரு மனிதன் ஓடும் வேகத்துக்கு ஒரு எல்லை இருக்கிறது. குதிரைக்கும் சீட்டாவுக்கும் ஒரு எல்லை இருப்பதைப் போல் மனிதனுக்கும் நூறு மீட்டர் தூரத்துக்கு ஒரு எல்லை இருக்க வேண்டுமல்லவா? போகிற போக்கைப் பார்த்தால் விரைவிலேயே அந்த எல்லையை அவன் தொட்டு விடுவான் போலத்தான் தோன்றுகிறது.

மனிதனின் கால்கள் இதற்கு மேல் விரைவு காட்டாது என்ற நிலையில் அவன் என்ன செய்வான்? நூறு மீட்டர் தூர ஓட்டத்தை இதற்கு மேல் இந்த நேர அளவுக்கு மேல் ஓட முடியாது என்று போர்ட் போட்டு நூறு மீட்டர் பந்தயத்தை நிறுத்தி விடுவார்களா? பதிலாக 50 மீட்டர் தூரம் அல்லது 250 மீட்டர் பந்தயம் என்று ஆரம்பிப்பார்களா?

அல்லது வேகத்தை ஆரம்பிப்பதற்காக சில இரசாயன ஊக்கிகளைப் பயன்படுத்தலாம் என்று சட்ட திட்டங்களை தளர்த்துவார்களா?

ஏனெனில் மனித வலுவுக்கென ஒரு எல்லை இருக்கத்தானே வேண்டும்?

# ஒழுங்காக மருந்து குடிக்க மறக்க வேண்டாம்!

எமது வாழ்க்கைக்கும் மருந்து வகைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உணவு மற்றும் பான வகைகளையும் போன்றே மருந்து வகைகளும் எங்களுக்கு பழக்கப்பட்டுவிட்டன.

ஏதாவது ஒரு நோய் எமக்கு வருவதாகத் தெரிந்தாலே போதும் வைத்தியரை தேடிச் செல்வது எங்களுக்கு வாடிக்கையாகியுள்ளது. அப்படி இல்லையென்றால் பாமஸிக்கு ஓடிச்சென்று நோயைப்பற்றி சொல்லி பரிசோதித்து பார்க்காமலே அவர்கள் தரும் வில்லைகளை வாங்கிக் கொண்டு வருவோம். அதையும் முழுமையாகக் குடித்து முடிப்பதில்லை. ஓரிரு வில்லைகள் குடித்தால் சுகம் வந்துவிட்டால் மீதி மருந்தோ வில்லைகளோ கிடப்பில் போடப்பட்டுவிடும்.

கொடுக்கப்பட்ட மருந்தின் முழுப்பயனும் பெறப்பட்டதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மருந்து முழுமையாக எடுக்கப்படாத நிலையில் விட்டுப்போன நோய் மீண்டும் வந்து தொற்றிக்கொள்ளும் அபாயமும் உள்ளது. அவ்வாறான நேரத்தில் முன்னர் பாவித்து மீதமிருக்கும் மருந்தை பாவிப்பது சரியானதல்ல. அத்துடன் அந்த மருந்து நோயை குணப்படுத்தும் அளவுக்கான வீரியத்தை தற்போது இழந்திருக்கலாம். எனவே மீண்டும் புதிதாக மருந்து வாங்கவேண்டியிருக்கும்.

இதற்கு புறம்பாக மற்றொரு சாரார், தேவைக்கு அதிகமாகவே மருந்து குடித்து விட்டு மீண்டும் சிக்கலில் மாட்டிக்கொள்வார்கள். இவர்களுக்கு இவர்களே வைத்தியர்கள். எல்லா நோய்க்கும் மருந்து இவர்களுக்குத் தெரியும். (அவ்வாறு அவர்கள் நினைத்துக் கொள்வார்கள்)

அடிக்கடி மருந்து வாங்குவதால் (அநேகமான நேரங்களில் மற்றவர்களுக்கு வாங்கிக்கொடுப்பதால்) பார்மஸிகாரர்களுக்கும் இவர்களை நன்கு தெரியும். அந்த பார்மஸிகளில் டாக்டர்களைப்போல் அளவு குறிப்பிட்டுத்தான் இவர்கள் மருந்து வாங்குவார்கள்.

ஒரு சில மருந்துகளுக்கு மாற்றீடாக அல்லது மேம்படுத்தப்பட்டு வேறு மருந்துகள் வருவதுண்டு. இவ்வாறான நிலையில் பழைய மருந்துகளை தவிர்த்து டாக்டர்கள் புதிய மருந்துகளையே சிபாரிசு செய்வார்கள். எனினும் மேற்கூறிய அரைகுறை டாக்டர்கள் பழைய மருந்தைப் பற்றியே பேசுவார்கள். ஏனெனில் அவர்கள் டாக்டருக்கு படித்தவர்கள் அல்ல. ஆனால் அவ்வாறு படித்திருப்பதாக அவர்கள் தம்மை நினைத்துக்கொள்வார்கள். இவ்வாறானவர்களிடம் நோய்களைப் பற்றி பேசி ஆலோசனை கேட்பவரை கூடியவரை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

வைத்தியர் ஒருவர் கொடுக்கும் மருந்தை அவர் கூறுவதைப்போல எடுப்பது முக்கியமானதா? ஆம், குறிப்பிட்ட ஒரு மருந்தை குறிப்பட்ட அளவு, குறிப்பிடப்படும் மணித்தியாலங்களின் இடையில் எடுக்கவேண்டும் என ஒரு வைத்தியர் கூறுவது உங்கள் நோயை படிப்படியாக குணப்படுத்தும் நம்பிக்கையுடன்தான்.

ஒரு வில்லையை அல்லது கெப்ஸுலை நீங்கள் விழுங்கிவிட்டால் அது உங்கள் வயிற்றில் கரைந்து உங்கள் உடலில் கலக்கும். உங்கள் இரத்தத்தில் கலந்து உங்கள் உடல் முழுவதும் அது பயணிக்கும். குறிப்பிட்ட அந்த மருந்து உங்கள் உடலின் செயற்பாட்டில் இருக்கும் நோய் உள்ள இடத்தை சென்றடைய எவ்வளவு நேரம் எடுக்கும் என்பது வைத்தியருக்கே தெரியும். இறுதியில் சிறுநீரகத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்டு சிறுநீருடனோ அல்லது மலத்தின் ஊடாகவோ அந்த மருந்து வெளியேறும்.

இவ்வாறு மருந்து முழுமையாக வெளியேறிய பின்னரே அதே மருந்து மீண்டும் எடுக்கப்படவேண்டும். இதற்கு ஒரு நாளைக்கு இரண்டு தரமோ (12 மணி நேரத்துக்கு ஒரு முறை) மூன்று தரமோ (8 மணி நேரத்துக்கு ஒரு முறை) அல்லது நான்கு தரமோ (6 மணி நேரத்துக்கு ஒரு முறை) குறிப்பிட்ட மருந்து எடுக்கப்படவேண்டும்.

இரவு நேரத்தில் தூக்கத்தில் இருந்து எழுப்பியாவது நேரத்துக்கு நேரம் நோயாளிக்கு மருந்து கொடுக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட நோயை குணப்படுத்தவேண்டிய தன்மை அந்த மருந்துக்கு இல்லாமற்போய்விடும்.

# அழகு மலர்த்தோட்டம்

**அலங்கார மலர் தோட்டமொன்றை ஆரம்பிக்கும் எதிர்பார்ப்பு உங்களுக்கு இருக்கிறதா? அப்படியானால் அதற்காக நீங்கள் முதலில் உங்களை தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். உங்களை எப்படி தயார்ப்படுத்திக்கொள்வது என்பதை பார்ப்போம்.**

## தேவையான இடம்

உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற இடம் கிடைக்கிறதா என்பதை முதலில் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு மாடி வீடு இருந்தால் அதன் மேல் தட்டு கொங்கிரீட் தரையில் அல்லது பெல்கனியில் அலங்கார மலர்ச் செடிகளை வளர்க்கலாம். எவ்வாறெனினும் ஒரு பேர்ச் அல்லது அதற்கு அதிகமான இடத்தை ஒதுக்க முடிந்தால் போதுமானது.

## நீர்வசதி

மலர்த் தோட்டமொன்றை நடத்துவதற்கு அதற்கான நீர் வசதி முக்கியமானது. அந்த நீர் வசதியை பெற்றுத் தரக்கூடிய வழிமுறையொன்று இருக்கவேண்டும். அது கிணறு, குழாய். அல்லது பொதுவானதாகவும் இருக்கலாம். ஆனால் அந்த வசதி அவசியமானது.

## விவசாய அறிவு

இது முற்றிலும் விவசாய செயற்பாடாகும். எனவே விவசாய பயிர்ச்செய்கை தொடர்பான அடிப்படை அறிவு இருக்கவேண்டும். புத்தகங்கள், மற்றும் விவசாய ஆலோசகர்களிடம் இந்த அறிவை பெற்றுக்கொள்ளலாம்.

பூச்செடிகளுக்கு உரமிடுதல், கிருமிநாசினி பாவனை, மழை காலத்தில் நீரைக் குறைத்தல், வெயில் காலத்தில் போதுமான நீரை பெற்றுக் கொள்ளல் ஆகியவை பற்றி போதிய விளக்கம் இருக்கவேண்டும். உங்கள் பகுதியில் ஏற்கனவே இவ்வாறான மலர்ச்செய்கையில் எவரேனும் ஈடுபட்டிருந்தால் அவரது ஆலோசனை மற்றும் உதவியை பெற்றுக்கொள்ளலாம்.

## நேரம்

நீங்கள் வளர்க்க விரும்பும் மலர்ச் செடிகளில் ரகம் மற்றும் அதற்கான இடம் ஆகியவற்றை பொறுத்தே அதற்காக நீங்கள் அர்ப்பணிக்கவேண்டிய காலம் தீர்மானிக்கப்படும். இது மலர்த்தோட்டம் நடத்தப்படும் காலம் முழுவதுக்குமாக அமையும். அவ்வாறான நேரத்தை உங்களுக்கு ஒதுக்கிக்கொள்ள முடியாவிட்டால் அதற்கு பொறுத்தமான ஒருவரை தேடிக்கொள்ளவேண்டும்.

## சந்தை

அழங்கார மலர்ச் செடிகளோ அல்லது வேறு எந்த வியாபார நடவடிக்கைகளோ மிகுந்த அவதானத்துடன் மேற்கொள்ளவேண்டும். அதற்கான சந்தை வாய்ப்பு உள்ளூரில் அல்லது வெளிநாட்டில் இருக்கலாம். அவ்வாறான வாய்ப்புக்களை தேடிப்பிடித்து பயன்படுத்திக்கொள்வதன் மூலமே உங்கள் அலங்கார மலர்த் தோட்டத்தின் பொருளாதார நன்மைகள் அமையும்.

அதேநேரம் மலர் கண்காட்சிக்களை நடத்துவோர், மற்றும் அவ்வாறான கண்காட்சிகள் நடத்தப்படும் இடம், கண்காட்சிக் காலம் ஆகியவை பற்றிய விபரங்கள் மற்றும் தகவல்களையும் நீங்கள் தெரிந்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய விடயங்களை உறுதி செய்த பின்னர் நீங்கள் அலங்கார மலர்த் தோட்டங்களை அமைக்கும் செயற்பாடுகளில் இறங்கலாம்.

உங்கள் மலர்த்தோட்டத்தின் மூலம் எந்தவொரு பொருளாதார நன்மைகளையும் பெற விரும்பாமல் வெறுமனே அழகுக்காகவும் மன மகிழ்ச்சி மற்றும் அமைதிக்காக மலர்த்தோட்டம் நடத்துபவராக இருந்தால் மேற்கூறிய விடயங்கள் உங்களை பாதிக்காது. மிகச் சிறிய அளவிலும் உங்கள் தோட்டம் அமையலாம். அத்ததுடன் அழகான மலர்களை மட்டுமே கொண்டதாகவும் உங்கள் மலர்த்தோட்டம் அமையலாம்.





# செல்போன் ஆபத்து



கைபேசி இன்று தவிர்க்க முடியாத நண்பன் அப்புறம் எதிரியும் கூட. இது இல்லாமல் இன்று எதுவுமே நடக்காது. எனவே இந்த எதிரி பக்கத்தை நாம் நன்றாகவே புரிந்து வைத்திருக்க வேண்டும். எதிரியின் பலத்தையும் தன்மைகளையும் தெரிந்திருந்தால்தான் தொடர்ந்தும் நண்பனாக வைத்திருக்கலாம்.

செல்போன்கள் மூலம் உண்டாகும் கதிர்வீச்சால் பெரியவர்களை விட குழந்தைகளுக்கு தான் அதிக பாதிப்பு ஏற்படுகிறது. குழந்தைகளை பொறுத்தவரையில், அவர்களுடைய மண்டை ஓடு முழுமையாக வளர்ச்சி அடையாமல் மிகவும் மென்மையாக இருக்கும். அதே போன்று மூளைப்பகுதியும் கெட்டியற்ற திரவ நிலையிலேயே இருக்கும். இதனால் அவர்களுடைய தலைப்பகுதியில் கதிர்வீச்சு எளிதில் ஊடுருவும் அபாயம் உள்ளது. செல்போனில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சானது, 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உடலில் 75 சதவீத அளவுக்கு எளிதாக ஊடுருவுகிறது. 10 வயது குழந்தைகளுக்கு 50 சதவீத அளவும், வயது வந்தவர்களுக்கு 25 சதவீத அளவும் கதிர்வீச்சு பாதிப்பும் ஏற்படுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. தொடர்ந்து 2 நிமிடங்கள் செல்போனில் பேசும் குழந்தையின் மூளை செயல்பாடு அடுத்த ஒரு மணி நேரத்துக்கு பாதிப்படைவதாகவும் வேறு சில தகவல்கள் கூறுகின்றன. இவை தவிர சிறுவர்களுக்கு உளவியல் ரீதியான சில பிரச்சினைகள் ஏற்படுவதும் கண்டறியப்பட்டு உள்ளது. செல்போன்களை தொடர்ச்சியாக பயன்படுத்துவதால், புற்று நோய் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ள போதிலும், '3ஜி' செல்போன்களில் இருந்து மிக குறைந்த அளவே கதிர்வீச்சு ஆபத்து இருப்பதாக கூறப்படுகிறது. பிற செல்போன்களுடன் ஒப்பிடும் போது, நவீன தொழில்நுட்ப வசதி கொண்ட '3ஜி' செல்போன்களில், குறைந்த அளவு கதிர்வீச்சு பாதிப்பே உள்ளதாக சிட்னி பல்கலைக்கழக பேராசிரியர் புரூஸ் ஆம்ஸ்ட்ராங் தெரிவித்துள்ளார். இருப்பினும், செல்போனில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சு மூளையை தாக்காதவாறு விலகி இருப்பதே சிறந்தது என்றும் அவர் கூறுகிறார்.

**செல்போன் கதிர்வீச்சால் ஏற்படும் பாதிப்பில் இருந்து தப்பிக்க இதோ சில யோசனைகள்...**

- செல்போனில் நீண்ட நேரம் பேசுவதை தவிர்க்கலாம். அல்லது செல்போனுக்கு பதிலாக முடிந்த அளவுக்கு தொலைபேசியை உபயோகப்படுத்தலாம்.
- மொபைல் போனில் பேசும்போது, நேராக காதில் வைத்து பேசுவதை தவிர்த்து, வயர் இணைப்புடன் கூடிய 'ஹெட் செட்' களை பயன்படுத்தலாம்.
- செல்போனில் பேசுவதற்கு பதிலாக 'மெசேஜ்' எனப்படும் குறுஞ்செய்திகளை அனுப்பி தகவல்களை பறிமாறிக் கொள்ளலாம்.
- 'சிக்னல்' குறைவாக இருக்கக்கூடிய பகுதிகளில், அதிக கதிர்வீச்சு இருக்கும். எனவே சிக்னல் அதிகமாக கிடைக்கக்கூடிய பகுதிகளில் வைத்து மட்டுமே பேச முயற்சி செய்ய வேண்டும்.
- செல்போன்களை வாங்கும்போது, குறைந்த அளவு 'ஸ்பெசிபிக் அப்சார்ப்சன் ரேட்' கொண்ட செல்போன்களையே தேர்ந்தெடுங்கள். அதில் தான் கதிர்வீச்சு அளவு குறைவாக இருக்கும். ('ஸ்பெசிபிக் அப்சார்ப்சன் ரேட்' என்பது, நமது உடலானது, மின்காந்த தளத்தில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சின் அளவை தாங்கும் சக்தியை குறிக்கிறது)
- சிறுவர்களிடம் செல்போன்களை கொடுக்காதீர்கள். ஏனெனில், பெரியவர்களை விட சிறியவர்களுக்கே கதிர்வீச்சால் அதிக பாதிப்பு ஏற்படுகிறது.
- செல்போன்களை நேராக வைத்து பேசாமல், சற்று சாய்வாக இருக்குமாறு வைத்து பயன்படுத்தலாம். நேராக வைத்திருந்தால் கதிர்வீச்சு அதிகம் இருக்கும்.
- செல்போனை முழுமையாக கையில் பிடித்தபடி காதில் வைக்காதீர்கள். இதனால் சிக்னல்களை பெறுவதில் அனுப்புவதிலும் சிரமம் ஏற்படுவதோடு கதிர்வீச்சின் தாக்கம் அதிகமாக இருக்கும்.
- உங்கள் செல்போனில் உள்ள ''லவுட் ஸ்பீக்கர்'' எனப்படும் ஒலிபெருக்கியை ஆன் செய்து பேச்சை தொடரலாம். (இதில் ரகசியம் அம்பலமாகும் ஆபத்து உள்ளது)
- செல்போனில் பேசக்கூடிய அவசியம் ஏற்படும்போது, உரையாடல்களை மிகவும் சுருக்கமாக முடித்துக் கொள்ளலாம்.
- செல்போனை கைகளிலோ, பாக்கெட்டுகளிலோ வைக்காமல், சற்று தூரமாகவே வைத்து பழக வேண்டும். முடிந்த வரையில், நமது உடலை விட்டு தூரமாகவே இருக்குமாறு பார்த்து கொள்ளுங்கள்.
- குழந்தைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு செல்போனில் பேச வேண்டாம். ஏனென்றால், உங்களை விட குழந்தைகளுக்கே பாதிப்பு அதிகம்.
- இரவு நேரங்களில் செல்போனை சுவிட்ச் ஆப் செய்து வைத்து விட்டு தூங்கலாம். முடியாது என்றால், சற்று தொலைவில் வைத்து விட்டு தூங்குங்கள்.
- செல்போன்களை 'சார்ஜ்' செய்யும்போது, அதிகமான கதிர்வீச்சு வெளியாகும் என்பதால் சற்று தொலைவில் வைத்து 'சார்ஜ்' செய்யுங்கள்.

# ஆளைக் கொல்லும் விஷத் தவளை

பசிபிக் கடலோரங்களில் வசிக்கும் ஒரு வகை தவளை, கொடிய விஷம் கொண்டது. ஒரே கடியில், மனிதனை பரலோகத்திற்கு அனுப்பும் அளவிற்கு இத்தவளையின் விஷம் ஆபத்தானது. பூமியில் உள்ள உயிரினங்களில் அதிக விஷம் கொண்டது இந்த தவளையினம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 'தாவும் தங்கத் தவளை' என்று அழைக்கப்படும் இந்த, 'கோல்டன் டார்ட் பிராக்' கொலம்பியா கடலோரத்தில் உள்ள அடர்ந்த மழைக் காடுகளில் அதிகமாக வாழ்கின்றன.

அக்கால கொலம்பிய மக்கள், இத் தவளையின் விஷத்தை பிரித்தெடுத்து, அதை ஈட்டி, அம்பு முனைகளில் தடவி வேட்டைக்கு பயன்படுத்தியுள்ளனர். எவ்வளவு பெரிய விலங்காக இருந்தாலம், தவளை விஷம் விடும் என்பது குறிப்பிடத்தக்கது.



உலகில் விஷத்தன்மை கொண்ட தவளைகள் 100 வகை உள்ளன. இவற்றில் இந்த வகை தவளைகள் தான் பெரியவை. கொலம்பியா காடுகளில் உள்ள குறிப்பிட்ட சில தாவரங்கள், ஈக்கள், வண்டுகள், எறும்புகள், கரையான்கள், ஆகியவையே இவற்றின் முக்கிய உணவு. இத்தவளைகள் வேகமாக அழிந்து வருகின்றன. இதற்கு, மனிதர்களால் தொடர்ந்து மழைக்காடுகள் அழிக்கப்படுவதே காரணம். தாவும் தங்கத் தவளைகள் பெரும்பாலும் மஞ்சள் வண்ணத்தில் தோற்றமளிக்கின்றன. இருப்பினும் ஆரஞ்சு, இளம்பச்சை உள்ளிட்ட வண்ணங்களிலும் இவை காணப்படுகின்றன. இந்த தவளைகள் வாழும் இடத்திற்கேற்ப அவற்றின் நிறங்கள் மாறுபடுவதாகவும், இதன் மூலம் இத்தவளைகள் தங்களை எதிரிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்கின்றன என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

தவளைகளின் விஷத் தன்மை குறித்து ஒரு சோதனை மேற் கொள்ளப்பட்டது. அதில், அத்தவளைகளின் இயற்கையான வசிப்பிடங்களில் இருந்து மாற்றி, வழக்கமான உணவிற்கு பதில் வேறு உணவுகளை கொடுத்தனர். குறிப்பிட்ட சில நாட்களுக்கு பின் சோதனை செய்ததில், அந்த தவளைகள் விஷத்தன்மை மிகவும் குறைந்திருந்ததது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, அடர்ந்த காடுகளில் காணப்படும் விஷத்தன்மை கொண்ட தாவரங்கள் மற்றும் சிறு பூச்சிகளை உட்கொள்வதால் மட்டுமே இத்தவளைகள் கொடிய விஷத்தை பெறுகின்றன என்று நம்பப்படுகிறது.

தற்போது, இத்தவளைகளின் விஷத்தை கொண்டு சக்தி மிக்க வலி நிவாரண மருந்தை கண்டுபிடித்துள்ளனர்.






# காண்டா: சண்டியன் தோற்றத்தில் ஒரு மிருகம்

மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை



பூமியில் வாழும் பெரிய விலங்குகளில் ஒன்று காண்டா மிருகம். காண்டா என்ற சொல் மிகப் பெரியது என்று அர்த்தம். இதன் தோள் மிகவும் தடிப்பம் கொண்டது. (15-50 செ.மீ) பருத்த உடலும் 1-18 டன் எடையும் கொண்ட ஒரு வித்தியாசமான மிருகம் இது. பருமனான உடல் கொண்ட காண்டா விரைவாக ஓடும் ஆற்றலைக் கொண்டது என்பது ஆச்சரியமான ஒரு தகவல்

மணிக்கு 40 கி.மீ வேகத்தில் ஓடக் கூடிய மிருகம் இது. எனினும் இது ஒரு அகிம்சை வாதி. அதாவது தாவரங்களை மட்டுமே உண்ணும் இதன் ஆயுட் காலம் 60 ஆண்டுகள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

உலகில் இந்த காண்டாமிருகம் இந்தியா, ஆப்பிரிக்கா, ஜாவா, சுமாத்திரா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருகிறது.

காண்டாவின் மற்றொரு விசேஷம் அதன் முழங்கால் பொதுவாக எல்லா விலங்குகளிலும் மூட்டு முழங்கால் பெரிதாகவும் தெரியும்படியும் இருக்கும். ஆனால் காண்டா மிருகத்தில் முழங்கால் கண்களுக்கு புலப்படாது அப்படி ஒரு மூட்டு அமைப்பு.



இதன் மூளை மிகவும் சிறியது. 400 தொடக்கம் 600 கிராம் எடைக்கொண்டது. ஆப்பிரிக்கா காண்டாவிற்கு முன் வரிசை பற்கள் கிடையாது. ஆகவே முன் கடைவாய்ப் பற்கலைக் கொண்டே உணவை மென்று விழுங்குகிறது.

ஆபிரிக்கக் காண்டா மிருகத்திற்கு ஒரே நேர்க் கோட்டில் இரண்டு கொம்புகளும், ஜாவா, இந்திய வகைகளுக்கு ஒற்றைக் கொம்பும் உள்ளன. ஆப்பிரிக்க காண்டாவை கறுப்பு ரைனோ (Black rhino) என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள்.

இந்த காண்டா மிருக இனம் ஒற்றைப்படை கால் விரல்களைக் கொண்ட விலங்கு வகையைச் சேர்ந்தது. காண்டா மிருகத்தின் கொம்பு சிறு மரங்களை வேறோடு பிடுங்கி எறிய உதவுகிறது. இந்தக் கொம்பு பகுதி கெரட்டின் என்னும் பொருளால் ஆனது. நகம், மயிர் போன்ற பகுதிகளும் கெரட்டின் என்ற பொருளால் ஆனவையே.

ஆங்கிலத்தில் ரைனோ-செரஸ் என்று அழைக்கிறார்கள். இது கிரேக்க சொல்லாகிய ரைனோசெரஸ் என்ற வேர்ச் சொல்லில் இருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. கிரேக்கத்தில் ரைனோஸ் என்றால் மூக்கு என்று பொருள்படும். கெரஸ் என்றால் கொம்பு என்ற பொருள்படுகிறது. எனவே மூக்கு கொம்பன் என்று நாம் இம்மிருகத்தைத் தமிழ்ப்படுத்தி அழைக்கலாம்.

யானைக்கு அடுத்தப் படியாக வெள்ளை காண்டாமிருகம், இந்திய காண்டா மிருகமும், நீர்யானையும் உலகிலேயே அதிக எடைகொண்ட தரைவாழ் விலங்குகளாகக் கருதப்படுகின்றன.

ஒரு காண்டா மிருகம் 6 அல்லது 7 வயதில் குட்டிபோடும். இதன் கர்ப்ப காலம் 15 முதல் 17 மாதங்கள். ஒரு முறைக்கு ஒரு குட்டியையே போடும் குட்டிகள் பிறக்கும் சமயத்தில் ஒரு கிலோ எடையைக் கொண்டதாக இருக்கும். 2 தொடக்கம் 5 வருடங்களுக்கு ஒரு முறை ஒரு குட்டியை பெண் காண்டா மிருகம் போடுகிறது.


காண்டாவின் கொம்பிலான மதுக்கிண்ணம்

1993ம் ஆண்டுக்கு முன் வரை காண்டா மிருகத்தின் இரத்தம் மற்றும் அதன் கொம்பும் ஆயுர்வேத மருந்துக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. குறிப்பாக இந்தோனேசியா, ஜாவா பகுதிகளிலேயே இவ் வழக்கம் இருந்து வந்தது. ஆனால் 1993ல் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச காண்டாமிருக நிறுவனமும், உலக வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பும் இணைந்து மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக காண்டா மிருக இரத்தத்தை ஆயுர்வேத மருந்துகளுக்கு பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டது.

அதன் மூலம் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த காண்டா மிருகஇனம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. ஆனாலும் அழகு சாதனப் பொருட்களுக்காக காண்டா மிருக தோல் மற்றும் கொம்புகளை வேட்டையாடுவது இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. காண்டா மிருகக் கொம்பு ஆண்களில் பாலியல் வீரியத்தை அதிகரிக்க வல்லது என்ற நம்பிக்கை தூர கிழக்கு நாடுகளில் காணப்படுகிறது. இதன் கொம்பை மதுக் கிண்ணமாக வடிவமைத்து மது அல்லது பால் அருந்துவதை செல்வந்தர்கள் கௌரவமாக நினைக்கிறார்கள்.



இவை முற்றிலும் ஆதாரமற்றவை காண்டா மிருகம் ஒரு சாதுவான தன் பாட்டில் வாழ்கின்ற அரிய வகை மிருகம். காண்டாவைப் போல இன்னொரு மிருகம் இல்லை. எனவே காண்டா என்றென்றும் இந்த உலகில் வாழ வேண்டும் என விரும்புங்கள். இந்தத் தகவல்களை மனதில் வைத்தபடி தெஹிவளை விலங்கியல் பூங்காவில் உள்ள காண்டா மிருகத்தை பார்த்து ரசியுங்கள். விலங்குகள் மீது அன்பு செலுத்துங்கள், அவை இல்லாமல் நாம் வாழமுடியாது.

## ஐந்து வகை கண்டா இனங்கள்

இன்று உயிர்வாழும் காண்டா மிருகங்களை ஐந்து வகையாக விலங்கியலாளர்கள் பிரிக்கிறார்கள். இவற்றில் இரண்டு ஆபிரிக்காவைச் சேர்ந்தவை முதலாது கறுப்பு காண்டா. இதன் வாய் குவிந்து சற்று கூராக இருக்கும். இரண்டாவது வெள்ளை காண்டா மிருகம். பெயருக்கேற்றவாறு இது வெள்ளையாக இருக்காது சாம்பல் நிறம் கொண்டது. வெளிர் பழுப்பு என்றும் சொல்லலாம்.

இனி இதற்கு வெள்ளை (White) என்ற பெயர் எப்படி வந்தது என்று பார்ப்போம். ஆப்பிரிகன் மொழியில் பரந்து விரிந்த (Wide) என்ற பொருள் கொண்ட wyd என்ற சொல்லே ஆங்கில நாவில் While என்று ஆனது. வெள்ளைக் காண்டாவின் உதடுகள் பரந்து விரிந்திருக்கும். இது புல் மேய உதவுகிறது. இவை இரட்டைக் கொம்புகள் உடையவை.

மூன்றாவது இந்திய பிரிவைச் சேர்ந்தது. சாவாத் தீவிலும் இது காணப்படுகிறது. இவை ஒற்றைக் கொம்பன்கள்

நான்காவது சாவா கண்டா மிருகம் ஒரு கோடி வருடங்களுக்கு முன்னர் தனி இனங்களாகப் பிரிந்தது.

ஐந்தாவது சுமத்ரா காண்டாவாகும். உருவத்தில் முதல் இரண்டு பிரிவுகளையும் விடச் சிறியவை எனினும் இரட்டைக் கொம்பன்கள் அடர்த்தியான மயிர்கொண்ட இவை மலைப் பாங்கான பகுதிகளில் வாழக் கூடியவை வேட்டைத் துப்பாக்கிகளுக்கு பலியாகி வருவதால் அழியும் தருவாயில் சுமாத்ரா காண்டாக்கள் உள்ளன. சுமார் 275 சுமத்திரா காண்டாக்களே உள்ளனவாம். இதே சமயம் 2700 இந்திய காண்டா மிருகங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. வெள்ளை காண்டாக்களின் எண்ணிக்கை ஒன்பதாயிரம் என அறியப்பட்டுள்ளது.



'18 வயது' படத்தில்
ஜொனி, காயத்திரி

Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 in October, 2012.